வருடாந்த அறிக்கை 2022

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்



நோக்கக் கூற்று

முப்படைகள், அரச துறைகள், சமூகம் போன்றவற்றிற்கு அளப்பரிய சேவையாற்றும் தகுதியுள்ள தனித்துவமானதும் துறைசார்ந்ததுமான பாதுகாப்புசார் உயர்கல்வியில் இளமாணி மற்றும் பட்டதாரி மாணவர்களை உருவாக்கும் தனிச்சிறப்புமிக்க தேசிய மற்றும் சர்வதேச அளவில் அறியப்பட்ட பல்கலைக்கழகமாக அமைதல்.

பணிக்கூற்று

பாதுகாப்புடன் தொடர்புடைய பல்வேறு துறைகளில் அதிசிறந்த ஆய்வுகளை மேற்கொண்டு பல்கலைக்கழக வளாகத்துடன் இணைந்துள்ள அகக் கட்டமைப்புக்கள் மற்றும் புறக்கட்டமைப்புக்களின் ஊடாக இளமாணி, பட்டதாரி மற்றும் தொழில்முறை கற்கைகள் மூலம் உயர்தரமிக்க கற்போர் மயப்படுத்தப்பட்ட கல்வி அனுபவத்தினை உறுதி செய்தல்.

குறிக்கோள்கள்

அ. பாதுகாப்பு சேவைக்கு பயிற்சி அதிகாரிகளை அறிமுகப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குவதோடு பாதுகாப்பு படைகளில் அவர்கள் பணியமர்த்தப்படுவதற்கு முன்னர் பாதுகாப்பு சேவை தொடர்பாக அவர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்திக்கொள்ள வழிகாட்டுதல்.

ஆ. பயிற்சி அதிகாரிகள், அதிகாரிகள், அரச ஊழியர்கள் போன்றோருக்கும் வேலைவாய்ப்பிற்குப் பொருத்தமான பாடப்பரப்புகளில் முதல் பட்டப்படிப்புக்குத் தயாராகும் ஏனைய மாணவர்களுக்கும் குறித்த துறைசார்ந்த கற்கைகளுக்கான வசதிகள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குதல்.

இ. பாதுகாப்பு படைகளில் செவையாற்றுகையில் கூட்டான நடவடிக்கைகளை முன்னெடுப்பதனை எளிதாக்கும் நோக்கில் பாதுகாப்பு படைகளின் அதிகாரிகளுக்கு இடையே நட்பு மற்றும் ஒற்றுமை உணர்வை வளர்ப்பதற்காக பயிற்சி அதிகாரிகளிடையே தோழமை மற்றும் நல்லெண்ண உணர்வை மேம்படுத்தல்

ஈ. பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் முதுமாணி பட்டங்கள், டிப்ளோமாக்கள் மற்றும் பிற சான்றிதழ்களை தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு சார் கற்களைகளை முன்னெடுப்பதன் ஊடாக பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கும் ஏனையோருக்கும் பெற்றுக்கொடுத்தல்.

உ. பல்கலைக்கழகமானது அதன் நோக்கங்களை அடைவதற்கு அத்தியவசியமானதாக கருதப்படும் ஆய்வு மற்றும் மேம்பாடு உள்ளிட்ட பிற செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ளுதல்.

பல்கலைக்கழகத்தின் முக்கிய மதிப்பீடுகள்

ஒழுக்கம்

சரியான செயற்பாடுகளை மேற்கொள்ள மாணவர் மத்தியிலும் ஊழியர் மத்தியிலும் ஒழுக்க நடைமுறைகளை கற்பித்து கடைப்பிடிக்கின்றோம்.

சிறப்பம்சம்

புதுமை மற்றும் படைப்பாற்றல், கடுமை மற்றும் நடைமுறைவாதம் ஆகியவற்றின் மூலம் சிறந்தவற்றை ஊக்குவிகத்து மேம்படுத்துகிறோம்.

நேர்மையும் பொறுப்புணர்வும்

தனிப்பட்ட மற்றும் தொழில்முறை நடத்தைகளிலும் வெளிப்படைத்தன்மைக்கான எமது முன்னெடுப்புக்களிலும் மிக உயர்ந்த நெறிமுறைச் சிறப்பம்சங்களை நாம் கடைபிடிக்கிறோம்

அகப்படுத்தும் தன்மை

பொதுமக்கள், இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸ் ஆகியோரிடையே பரஸ்பர ஒத்துழைப்பு அத்தியாவசியமானது என்று நாம் உறுதியாக நம்புகிறோம்

கூட்டிணையும் தன்மை

எமது துறைசார் அணுகுமுறைகளை நாம் பெருமதிவாய்ந்ததாக கருதுவதோடு, அக மற்றும் புறக் கட்டமைப்புகளுடனான கூட்டாண்மைகளில் கவனம் செலுத்துகிறோம்.

கண்ணியம்

பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள ஒவ்வொரு உறுப்பினரின் பெறுமதியினை நாம் அங்கீகரித்து அவர்களுக்கான தகுந்த கண்ணியத்தினை வழங்குகிறோம்.

நிலைபேறு

சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்பட நாம் பிரயத்தனமிக்க முயற்சி செய்கிறோம்.

துணைவேந்தரின் மதிப்பாய்வு



1980 ஆம் ஆண்டு முப்படை சேவை கல்வியகமாக நிறுவப்பட்ட *KDU* ஆனது, நான்கு தசாப்தங்களில் உயர்கல்வித் துறையில் புத்தாக்க செயற்பாடுகள் மூலம் தேசத்திற்கு சிறப்பான சேவையை வழங்கி அதன் தற்போதைய நிலைக்கு முன்னேறியுள்ளது. இன்று, *KDU* ஆனது சர்வதேச தரத்தை எட்டியுள்ளதோடு இது முப்படை பயிற்சி அதிகாரிகள், ஆயிரக்கணக்கான சிவில் தினவருகை மாணவர்கள் போன்றோருக்கு பல்வேறு பட்டக் கற்கைத் திட்டங்களைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பளிகின்றமை மட்டுமன்றி பல்வேறு நாடுகளில் இருந்தும் கற்க வரும் மாணவர்கள்களையும் தன்பால் ஈர்க்கின்றது. தற்காலத்தில் அனைத்து துறைகளிலும் *KDU* இன் பட்டதாரிகளுக்கு உள்நாட்டிலும் வெளியிலும் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களால் வழங்கப்படும் அங்கீகாரமானது தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. மேலும் இவ் அங்கீகாரமானது பல்கலைக்கழகத்தின் தர மேம்பாட்டிற்கும் பராமரிப்பிற்கும் மேற்கொள்ளப்பட அர்ப்பணிப்பின் மூலம் அடைந்துள்ள உறுதித்தன்மையின் தெளிவான வெளிப்பாடாகும்.

பல்கலைக்கழகமானது ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புகளில் அதன் இயலுமைகளை காத்திரமாக அதிகரித்து வருகின்றமை ஒரு வளர்ச்சியுற்ற தேசமாக நாம் மாறும் முயற்சிகளில் அசாத்தியமானதாக கருதப்படும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான வழிகளைக் கண்டறிவதற்கும் இதன் மூலம் இலங்கையின் அபிவிருத்திக் கனவை நனவாக்குவதற்கும் இன்றியமையாததாக காணப்படுகின்றது. *KDU* ஆனது உயர்கல்வியில் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ளதோடு குறிப்பாக உலகின் அண்மைய உயர்கல்வி போக்குகளுடன் தன்னை இணைத்துக் கொள்வதில் முன்னெடுக்கப்படும் சர்வதேச ஒத்துழைப்புக்கான அதன் அர்ப்பணிப்பானது பல வழிகளில் பங்களிப்புச் செலுத்தியுள்ளது. இந்த வருடாந்த அறிக்கையானது *2022* ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள், நிகழ்த்தப்பட்ட சாதனைகள், முகம்கொடுக்கப்பட்ட சிரமங்கள் மற்றும் இத்தகைய சிரமங்களுக்கு மத்தியிலும் அடந்துகொள்ளப்பட்ட வளர்ச்சி ஆகியவற்றை சுருக்கமாகக் விபரிக்கின்றது.

கோவிட்-*19* தொற்றுநோயின் பின்விளைவுகள் மற்றும் *2022* ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மை ஆகிய நெருக்கடிகள் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகளில் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தின. இருப்பினும், *KDU* ஆனது *2021* ஆம் ஆண்டைப் போலவே, துணிச்சலுடனும் உறுதியுடனும் நெகிழ்ச்சியுடனும் தகுந்த முடிவுகள் மற்றும் சரியான நேரத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டு, கூட்டு முயற்சியின் மூலம் அதன் முன்னேற்றத்தைத் தக்கவைக்க அதிக முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளமை இவ் வருடாந்த அறிக்கையின் குறிப்புகளில் இருந்து சிறப்பாக அறியமுடிகின்றது. குறிப்பாக, புதிதாக நிறுவப்பட்ட தொழில்நுட்ப மற்றும் குற்றவியல் நீதி பீடங்களால் பல புதிய பட்டக் கற்கைகளை பல சிரமங்களுக்கு மத்தியிலும் ஆரம்பிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்கள் அத்தகைய நடவடிக்கைகளாக கருதப்படலாம். *KDU* ஆனது *2022* இல் "அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளின் முன்னேற்றத்தின் மூலம் பொருளாதார மறுமலர்ச்சி, தேசிய பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை" எனும்

தொனிப்பொருளில் நடாத்தப்பட்ட சர்வதேச ஆய்வு மாநாட்டின் மூலமும் அனைத்து பீடங்களின் ஆய்வு இதழ்களின் வெளியிடுவதன் மூலமும் ஒருங்கிணைந்த மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனமான KDU-CARE ஊடாக பல ஆய்வுத் திட்டங்களை அறிமுகம் செய்வதன் மூலமும் (CARE Technology Lanka Pvt. Ltd.) இதற்காக KDU மேற்கொண்ட பிரயத்தனங்களை அறிய முடிகின்றது.

சிரமங்கள் இயல்பானபோதிலும், மாணவர் பதிவினை மேற்கொள்ளல் மற்றும் வெளிநாட்டு மாணவர்களின் சேர்க்கை போன்றவை சிறப்பாக நிறைவேற்றப்படுள்ளமை KDU இனால் பின்பற்றப்பட்ட நெகிழ்ச்சியான அணுகுமுறைகளின் அடைவினைக் காட்டுகிறது. டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் அதனுடன் இணைந்த நூலக வசதிகளின் விரிவாக்கம் என்பன புதிய-சாதாரண சூழ்நிலையில் அதிகளவு இடையூறு இல்லாது கல்வித் திட்டங்களைத் தொடர கல்விப் பீடங்களுக்கு உறுதுணையாக அமைந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் University of Keele, UK; Ufa State Aviation Technical Institute, Russia, University of Calgary, Canada; Asian Institute of Technology, Thailand; National Defence University, Malaysia; Massey University New Zealand; Tianjin School of Architecture, China; the Republic of Bhutan; Chungnam National University, South Korea; Transylvania University of Brasov போன்ற பிற நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் HIE களுடன் இணைந்து செயலாற்றுவதன் மூலம் சர்வதேச பங்காளர்களுடனான இணைப்புகளை விரிவுபடுத்தியுள்ளமை இந்த ஆண்டில் KDU இன் முக்கிய சாதனையாக நோக்கப்படுகின்றது. மேலும் இது எதிர்காலத்தில் நிகழவுள்ள முக்கியமான சர்வதேச இணைப்புகள் மற்றும் கூட்டாண்மைகளை நிறுவுவதில் KDU அடைந்துள்ள வெற்றியின் மிகத் தெளிவான அறிகுறியாகும்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட தடைகளை சமாளித்து மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் KDU ஆனது அத்தியாவசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது. ஆண்டின் இறுதிக்குள் முடிக்கப்படுவதற்கென திட்டமிடப்பட்டு இறுதி கட்டத்தில் இருந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம், சமூக அறிவியல் மற்றும் மனிதநேய கற்கைகள் பீடம் மற்றும் சட்ட பீடம் என்பவற்றுக்கான இரண்டு (02) கட்டுமானத் திட்டங்களை கணிசமான அளவு பூரணப்படுத்த முடிந்துள்ளது. மேலதிகமாக, சிறிய கேட்போர் அரங்கத்தின் புனர்நிர்மாணம், வெரஹெராவில் பெண்கள் தங்குமிட கட்டிடத்தின் கட்டுமானம், KDU அச்சாக மேடை II இன் கட்டுமானம் மற்றும் தலைமையக கட்டிடத் திட்டத்தின் விரிவாக்கம் போன்ற பல கட்டிட நிர்மான திட்டங்களில் கணிசமான முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

சாராம்சமாக, 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடர்களிலும் பல்கலைக்கழகம் அடைந்துள்ள முன்னேற்றங்கள், KDU இன் தனித்துவமான தன்மையினை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இக் கடினமான ஆண்டிலும், முழுமையான எமது வளர்ச்சியை உறுதிசெய்துகொள்ள சிறிய மற்றும் நுண்ணிய செயற்பாட்டுத் கற்கைகள் மூலம் எங்கள் பணிகளை நிறைவேற்றுவதில் நாங்கள் முழுமையாக கவனம் செலுத்தியுள்ளோம். KDU பல்கலைக்கழக மருத்துவமனையின் சுய-வருவாயில் 8% அதிகரிபானது KDU ஆனது அடைந்துள்ள நிதி ரீதியான மேம்பாடாகும். மேலும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 32,181 மில்லியன் மதிப்புள்ள நிலையான சொத்துக்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் KDU ஆனது மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் ரூபா 5,879 மில்லியன் மதிப்புள்ள நிகர மிகுதி காணப்பட்டது. எமது சாதனைகளின் அடைவு முக்கியத்துவமானது நோய்த்தொற்று போன்ற கடினமான சூழ்நிலைகளின் பின்னணியிலும் தெளிவாகப் புலனாகிறது. மேலும் ஒரு பல்கலைக்கழகமாக நாம் ஆட்கொள்ள நேர்ந்த பலவீனங்களை வெற்றிகரமாக சாதகக் காரணிகளாக மாற்றியுள்ளோம். இத்தகைய புதிய-இயல்பான சூழலில் நாம் ஆடைந்துள்ள எமது அடைவுகள் அனைத்துள்ள எதிர்காலத்தின் பாரிய சாதனைகளுக்கு படிக்கட்டுகளாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக, எமது சாதனைகள் அனைத்தையும் யதார்த்தமானதாக மாற்றியமைக்கும் *KDU* இன் அர்ப்பணிப்புள்ள அனைத்து ஊழியர்களுக்கும் எமது பல்கலைக்கழகம் மற்றும் *2022* இல் அதன் செயற்பாடுகள் பற்றிய சுருக்கமானதும் காத்திரமானதுமான இவ் ஆண்டு அறிக்கையைத் தொகுப்பதில் பங்களித்தவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



MP பீரிஸ் RWP RSP VSV USP
பமஜர் தஜனரல்,
துடண பவந்தர்,
தஜனரல் பசர் பஜோன் தகோத்தோவை போதுகோப்பு பல்கடைக்கழகம்.

உள்ளடக்கம்

1. அறிமுகம் *1*

1.1. பல்கலைக்கழக கண்ணோட்டம் *1*

1.2. பல்கலைக்கழகம் ஒரு பார்வை *3*

1.3. நிறுவனக் கட்டமைப்பு *4*

1.4. முகாமைத்துவ சபை மற்றும் செனட் *5*

1.4.1. முகாமைத்துவ சபை *(BOM)* *5*

1.4.2. செனட் சபை *6*

1.4.3. பீட சபைகள் *9*

1.4.4. கூட்டங்கள் *9*

1.5. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக கற்கைகளின் சந்தைப்படுத்தல் பார்வை *10*

1.6. இடர் முகாமைத்துவ பகுப்பாய்வு *14*

2. செயற்பாட்டு அடைவு *18*

2.1. மாணவர் பட்டமளிப்பு *18*

2.1.1. கொத்தலாவல பல்கலைக்கழக இளமாணி முடிவுகள் *(2018 – 2022)* *18*

2.1.2. கொத்தலாவல பல்கலைக்கழக முதுமாணி முடிவுகள் *(2018 – 2022)* *20*

2.1.3. பட்டதாரி கற்கைகள் பீடம் – இளமாணி முடிவுகள் *(2018 -2022)* *21*

2.1.4. இணைந்த நிறுவனங்கள் – முதுமாணி முடிவுகள் *(2018 – 2022)* *21*

2.1.5. இணைந்த நிறுவனங்கள் – இளமாணி முடிவுகள் *(2018 – 2022)* *22*

2.2. மாணவர் ஆட்சேர்ப்பு *23*

2.3. ஊழியர் சாதனைகள், விருதுகள் மற்றும் *Fellowship* *23*

2.4. நாட்டில் உள்ள பிற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கான நியமனங்கள் *24*

2.5. உடற்கல்வி *27*

2.5.1 விளையாட்டுகளில் சாதனைகள் *27*

2.6. கல்வி மற்றும் கல்வி உதவிப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பு *28*

2.7. பெருநிறுவன சமூகப் பொறுப்பு *(CSR)* திட்டங்கள் *28*

2.8. உலகளாவிய தரவரிசை *30*

2.8.1. வெபோமெட்ரிக் தரவரிசை *31*

2.9. தர உத்தரவாதம் *32*

2.9.1 புதிய பட்டப்படிப்புகள் மற்றும் பாடத்திட்டங்களின் திருத்தம் தொடர்பாக செனட் பரிந்துரைகள் மற்றும் முகாமைத்துவ சபை வழங்கிய ஒப்புதல் *32*

2.9.2. பீடங்களால் நடாத்தப்படும் தர உறுதிப்படுத்தல் நடவடிக்கைகள் *34*

2.10. ஆராய்ச்சி நடவடிக்கைகள் *35*

2.10.1. ஊழியர்களுக்கு ஒரு வருடத்தில் செலுத்தப்பட்ட ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் ஆராய்ச்சி கொடுப்பனவுகள் *35*

2.10.2. ஒரு வருடத்தில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களின் மொத்த வெளியீடு *35*

2.10.3. கடந்த 5 ஆண்டுகளில் (2018 - 2022) வெளியீடு *36*

2.11. ***காப்புரிமைகள், பிற கண்டுபிடிப்புகள் மற்றும் மாணவர்களின் சாதனைகள்*** *36*

2.12. ***ஊழியர் மேம்பாடு*** *37*

2.13. ***உட்கட்டமைப்பு மேம்பாடு*** *39*

2.14. ***பேரிடர் முகாமைத்துவ ஆராய்ச்சி மையம்*** *(CDMR) - KDU* *40*

2.15. ***தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப*** *(ICT)* ***சேவைகள்*** *41*

2.16. ***தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை*** *45*

2.17. ***பாலின சமத்துவம் மற்றும் சமநிலை*** *49*

2.18. ***ஒருங்கிணைந்த மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான நிறுவனம்*** *(KDU-CARE)* *50*

2.19. ***சர்வதேச விவகாரங்கள்*** *51*

2.19.1. சர்வதேச பங்குதாரர்களுடன் நடைமுறையில் உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் / ஒப்பந்தங்கள் / மானியங்கள் *51*

2.19.2. வெளிநாட்டு மானியங்கள் மூலம் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு பெறப்பட்ட நிதிகள் (2020 - 2022) *52*

2.19.3. சர்வதேச ஆராய்ச்சி மாநாடு (IRC) *53*

2.20. ***சுகாதார சேவைகள்*** *53*

2.21. ***மாணவர் மற்றும் ஊழியர் நலன்*** *53*

2.21.1. மாணவர்களுக்கு வழங்கப்படும் தங்குமிட வசதிகள் *53*

2.21.2. மாணவர்களுக்கான விடுதி வசதிகள் (2018 -2022) *55*

2.21.3. மாணவர்களுக்கு வழங்கப்படும் பிற நலன்புரி வசதிகள் *56*

2.21.4. ஊழியர்களுக்கான நலன்புரி வசதிகள் *57*

2.22. ***தணிக்கை மற்றும் முகாமைத்துவக் குழு*** *57*

2.23. ***இலங்கையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன்*** *(SDG)* ***பல்கலைக்கழகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை சீரமைத்தல்*** *59*

3. எதிர்கால திட்டங்கள் *63*

4. மாணவர் மற்றும் ஊழியர் விவகாரங்கள் *67*

4.1. ***மாணவர்கள்*** *67*

4.1.1. மாணவர் சேர்க்கை *67*

4.1.2. கடந்த 05 ஆண்டுகளில் இளமாணி பட்டப்படிப்புகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மாணவர்களின் தகவல் (2018 - 2022) 68

4.1.3. வெளிநாட்டு மாணவர் சேர்க்கை 70

4.1.4. முதுமாணி பட்டப்படிப்பு நெறிகளில் (உள்நாடு மற்றும் வெளிநாடு) புதிதாக இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்கள் 70

4.2. ஊழியர்கள் 71

4.2.1. நிலைகளுக்கேற்ப ஊழியர் வகைப்படுத்தல் 71

4.2.2. அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களும் தற்போதைய ஊழியர் எண்ணிக்கையும் 72

4.2.3. கல்விசார் ஊழியர்கள் 73

4.2.4. பதவி ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களும் தற்போதைய ஊழியர் எண்ணிக்கையும் 76

4.2.5. கல்விசார் உப ஊழியர்கள் 77

4.2.6. கல்விசாரா ஊழியர்கள் 77

4.2.7. வகைப்படுத்தல் ரீதியான கல்விசாரா ஊழியர்கள் எண்ணிக்கை 79

4.2.8. புதிய பணியமர்த்துகைகள் 79

4.2.9. முதுமாணி பட்டப்படிப்புகளுக்காக பதிவுசெய்துள்ள கல்விசார் மற்றும் நிர்வாக ஊழியர்கள் (உள்நாடு மற்றும் வெளிநாடு) 80

4.2.10. 2022 ஆம் ஆண்டில் முதுமாணி கல்வியை பூர்த்தி செய்துள்ள கல்விசார் மற்றும் நிர்வாக ஊழியர்கள் 81

4.2.11. நடாத்தப்பட்டுள்ள/பங்கேற்கப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சிகள் வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகள் 82

4.3. புதிய பட்டப்படிப்பு பாடநெறிகளின் அங்குரார்ப்பணம் 93

5. பீடங்கள் மற்றும் நூலக வலையமைப்பு 94

5.1. பட்டதாரி கற்கைகள் பீடம் (FGS) 94

5.2. பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடம் (FD&SS) 96

5.3. மருத்துவ பீடம் (FOM) 98

5.4. பொறியியல் பீடம் (FOE) 100

5.5. சட்ட பீடம் (FOL) 102

5.6. முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம், மனிதநேய பீடம் (FMSH) 104

5.7. இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் (FAHS) 106

5.8. கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடவியல் அறிவியல் பீடம் (FBESS) 108

5.9. கணினி அறிவியல் பீடம் 111

5.10. தொழிநுட்ப பீடம் (FOT) 113

5.11. குற்றவியல் நீதிக் கற்கைகள் பீடம் (FOCJ) 116

5.12. ***பீடாதிபதி அலுவலகம் - ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு*** *118*

5.13. ***நூலகம்*** *121*

6. வளாகங்கள் மற்றும் இணைந்த நிறுவனங்கள் *124*

6.1. ***தெற்கு வளாகம்*** *,* ***சூரியவெவ*** *124*

6.2. METROPOLITAN ***வளாகம்*** *128*

6.3. ***இணைந்த நிறுவனங்கள்*** *132*

6.3.1. தேசிய பாதுகாப்பு கல்லூரி (NDC), கொழும்பு *132*

6.3.2. பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் ஊழியர் கல்லூரி (DSCSC) *132*

6.3.3. இலங்கை இராணுவ கலைக்கழகம், தியத்தலாவை (SLMA) *132*

6.3.4. கடற்படை மற்றும் கடல்சார் கலைக்கழகம் (NMA) *133*

6.3.5. இலங்கை விமானப்படை கலைக்கழகம், சீனக்குடா (SLAFA) *133*

6.3.6. இராணுவ Logistics கல்லூரி, திருகோணமலை (ASL) *134*

6.3.7. கடற்படை தொழில்நுட்ப நிறுவனம், வெலிசறை (NIT) *134*

6.3.8. தாதியர் பயிற்சிக் கல்லூரி, வெலிசறை (NTS) *134*

7. ஆய்வுப் பிரசுரங்கள் *135*

7.1. ***ஆய்வுகளுக்கான நிதி வழங்கல்கள் – உள்நாட்டு நிதியீடு*** *135*

8. பல்கலைக்கழக மருத்துவமனை, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் *147*

9. நிதி சார் அறிக்கைகள் *155*

10. கணக்காய்வு அறிக்கைகளும் நிர்வாகத்தினரின் கருத்துக்களும் *186*

1. அறிமுகம்

1.1. பல்கலைக்கழக கண்ணோட்டம்



ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு கலைக்கழகமானது 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு கலைக்கழக சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் அதன் செயற்பாட்டின் நோக்கமானது பல அடுத்தடுத்த திருத்தங்களால் மேம்படுத்தப்பட்டுள்ளது. 1988 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக (திருத்தம்) சட்டத்தின் மூலம் கலைக்கழகமாக காணப்பட்ட எமது அமைப்பானது பல்கலைக்கழக அந்தஸ்துக்கு தரமுயர்த்தப்பட்டது. பின்னர் 2007 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க (திருத்த) சட்டத்தின் மூலம் "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்" என பெயர்மாற்றப்பட்டது.

இந்த ஆண்டறிக்கையானது 01 ஜனவரி 2022 முதல் 31 டிசம்பர் 2022 வரையிலான காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தின் சாதனைகள், செயல்திறன் மற்றும் செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (KDU) ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள் போன்றன நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (1), 1971 ஆம் ஆண்டின் எண்: 38 மற்றும் 2018 ஆம் ஆண்டின் தேசிய தணிக்கைச் சட்டம் எண். 19 இன் பிரிவுகள் 12 மற்றும் 17 ஆகிவற்றுக்கு இணங்க இங்கு வழங்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக இலட்சினை



ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமானது இலங்கையின் முதன் முதலில் நிறுவப்பட்ட முப்படை சேவைகள் கல்வி நிறுவனம் ஆகும். அதன் இலச்சினை மூன்று சின்னங்களை உள்ளடக்கியது: இரண்டு குறுக்கு வாள்கள், நங்கூரம் மற்றும் இரண்டு இறக்கைகள் முறையே இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப்படை ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இலட்சினையின் நடுவில் உள்ள தீப்பந்தம் கல்விக்கு கொடுக்கப்பட்ட மைய இடத்தைக் குறிக்கிறது. "எப்போதும் தாய்நாட்டிற்காக" என்ற KDU இன் பொன்மொழி கீழே பொறிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சின்னம் இலட்சினையின் மேல் பகுதியில் வைக்கப்பட்டுள்ளமை தேசத்தின் மீதான KDU இன் உறுதிமிக்க விசுவாசத்தைக் குறிக்கிறது.

பல்கலைக்கழக கொடி



ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கொடியானது இலங்கை இராணுவத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் செம்மஞ்சள், இலங்கை கடற்படையினை பிரதிநிதித்துவப்படுத்தும் அடர் நீலம் மற்றும் இலங்கை விமானப்படையினை பிரதிநிதித்துவப்படுத்தும் வெளிர் நீலம் என மூன்று வெவ்வேறு நிறக் கோடுகளுடன் முப்படைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் குறியீட்டு அமைப்பாகும். மேலும், KDU இன் இலட்சினை கொடியில் சேர்க்கப்படுவது, நாட்டின் முப்படைகளின் தொழில்முறை மற்றும் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் தாய்நாட்டிற்குச் சேவை செய்வதில் KDU இன் பங்கைக் குறிக்கிறது.

1.2. பல்கலைக்கழகம் ஒரு பார்வை

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமானது இரண்டு (02) வளாகங்கள், ஒன்பது (09) இணைந்த நிறுவனங்கள் மற்றும் பதினொரு (11) பீடங்களைக் கொண்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில், பல்கலைக்கழகத்தில் 35 துறைகள் இருந்தன. இவ் எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 38 ஆக அதிகரிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 39 இளமாணி கற்கைகள் காணப்பட்டதோடு அதன் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 47 ஆக அதிகரிக்கப்பட்டது. KDU இனால் 2022 ஆம் ஆண்டில் 1619 பட்டதாரிகளை உருவாக்க முடிந்தது. மேலும் இவ் எண்ணிக்கையானது முந்தைய ஆண்டை விட 205 பட்டதாரிகளின் அதிகரிப்பு ஆகும். தற்போது KDU ஆனது 10 முதுமாணி பட்டங்களை வழங்குவதோடு 2022 ஆம் ஆண்டில் 211 முதுமாணி மாணவர்களை பதிவுசெய்யவும் இயலுமானதாக அமைந்திருந்தது. KDU இனால் 2022 ஆம் ஆண்டில் 1233 உள்நாட்டு மாணவர்களை இளமாணி கற்கைகளுக்காக பதிவுசெய்ய முடிந்ததோடு 45 வெளிநாட்டு மாணவர்களையும் இக் கற்கைகளுக்காக பதிவுசெய்தது.


2022 ஆம் ஆண்டின் இறுதியில், நூலகத்தில் உள்ள மொத்த புத்தகங்களின் எண்ணிக்கை 41,547 ஆக இருந்தது. இது முந்தைய ஆண்டை விட 879 புத்தகங்கள் எண்ணிக்கையில் அதிகமாகும். அத்தோடு 2022 ஆம் ஆண்டின் இறுதியில் நூலகத்தில் 620,655 மின் புத்தகங்கள், மின் இதழ்கள் மற்றும் மின் தரவுத்தளங்கள் எண்ணிக்கையிடப்பட்டுள்ளன. மேலும் இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2170 மின் புத்தகங்கள், மின் இதழ்கள் மற்றும் மின் தரவுத்தளங்களின் அதிகரிப்பு ஆகும்.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த விளையாட்டுகளின் எண்ணிக்கை 20 ஆக இருந்ததோடு 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த எண்ணிக்கை 22 ஆக அதிகரிக்கப்பட்டது. பேஸ்பால் (Baseball) மற்றும் நீரியல் போலோ (Water Polo) ஆகியவை KDU க்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விளையாட்டுகளாகும். 2022 ஆம் ஆண்டின் இறுதியில் மாணவர்களுகான கழகங்களின் (clubs) எண்ணிக்கை 17 ஆகும்.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் 277 கல்விசார் பணியாளர்கள், 29 நிர்வாக மற்றும் நிதி அலுவலர்கள் மற்றும் 679 கல்விசாரா ஒளியர்கள் KDU பல்கலைக்கழகத்தில் பணியாற்றிகொண்டிருந்தனர். 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இவ் எண்ணிக்கைகள் முறையே 285, 34 மற்றும் 706 ஆக காணப்பட்டன. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் PhD/MD/MScs போன்ற தகைமைகளை உடைய 29 பேராசிரியர்கள் மற்றும் 112 கல்விசார் பணியாளர்கள் காணப்பட்டனர். இவர்களின் எண்ணிக்கை முந்திய ஆண்டில் முறையே 24 மற்றும் 108 ஆக இருந்தன. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது PhD/MD/MSc தகைமைகளை கொண்ட கல்விசார் பணியாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அளவான அதிகரிப்பு காணப்படுகின்றது.

KDU ஆனது 2022 ஆம் ஆண்டில் பல்வேறு வெளிநாடுகளுடன் 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MoUs) கைச்சாத்திட்டுள்ளது.

1.3. நிறுவனக் கட்டமைப்பு



1.4. முகாமைத்துவ சபை மற்றும் செனட்

1.4.1. முகாமைத்துவ சபை (BOM)

1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டத்தின் 68 ஆம் பாகத்தின் பிரிவு 5 இன் படி ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வாரியமானது, ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் இலங்கை:

01	*செயலாளர்,பாதுகாப்பு அமைச்சு (தலைவர்)*	***General (Retd) Kamal Gunaratne*** *WWV RWP RSP USP ndc psc MPhil*
02	*படைத்தளபதி*	***General LHSC Silva WWV RWP RSP VSV USP*** *(01.01.2022 - 22.06.2022)* ***Lieutenant General HLVM Liyanage** RWP RSP ndu* *(23.06.2022 to date)*
03	*கடற்படை தளபதி*	***Vice Admiral DNS Ulugetenna RSP & Bar, VSV, USP*** *(01.01.2022 - 28.12.2022)* ***Vice Admiral UVMP Perera*** *RSP & 2 Bars, USP, ndu, psc, MMaritimePol, MSc(DS) Mgt, MSc (MS & NSSS), BA (DS) Hons, PWO* *(29.12.2022 to date)*
04	*விமானப்படை தளபதி*	***Air Marshal SK Pathirana*** *WWV and Bar, RWP and Bar, RSP and 3 Bars, VSV, USP*
05	*மேலதிக செயலாளர் (பாதுகாப்பு) பாதுகாப்பு அமைச்சு*	***Mr. PBSC Nonis** (01.01.2022 - 21.08.2022)* ***Mr. RMPS Rathnayake** (22.08.2022 - 16.10.2022)* ***Ms. S L Dhammika K Wijayasinghe*** *BSc (Hons) (Peradeniya), MSc (Distinction) – Urban Management & Development, Erasmus University Rotterdam, the Netherlands, MSc – Environment Science (Colombo)* *(17.10.2022 to date)*
06	*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பிரதிநிதி*	***Senior Prof. Sampath Amaratunge*** *PhD (Kogoshima National University, Japan), MSc (Economics of Rural Development) (Saga National University), MA (Economics) (UOC), BAHons (Economics) (USJP)*
07	*துணைவேந்தர் – KDU*	***Major General MP Peiris*** *RWP RSP VSV USP ndc psc MPhil **(Ind)***
08	*திறைசேரி பிரதிநிதி*	***Mr. PASA Kumara*** *(01.01.2022 - 04.05.2022)* ***Ms. JC Weligamage*** *பணிப்பாளர் நாயகம்* *பொது நிதி திணைக்களம்* *நிதி அமைச்சு* *(05.05.2022 தொடக்கம் இன்றுவரை)*

09	*பதிவாளர்,KDU (வாரியத்தின் செயலாளர்)*	***Mr. VD Kithsiri*** *E MBA (PIM-USJP), PGD Mgt. (USJP), BCom (Sp) Hons (USJP), LICA & PI (CASL), Dip in Eng (Aquinas, SLIDA, ACHE)*

1.4.2. செனட் சபை

பல்கலைக்கழகத்தின் கல்வி ஆணையமான செனட் 2022 ஆம் ஆண்டில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது:

துணைவேந்தர்	*Major General MP Peiris (Chairman)*
கல்லூரி தலைவர் *– Metropolitan Campus*	*Major General ALDM Gunasekara*
கல்லூரி தலைவர் *- Southern Campus*	*Major General LCR Jayasuriya*
பிரதி துணைவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிர்வாகம்)	*Brig W Chandrasiri*
பிரதி துணைவேந்தர் (கல்விசார்)	*Prof KAS Dhammika*
பீடாதிபதிகள்/ பிரதி பீடாதிபதிகள்	
பட்டதாரி கற்கைகள் பீடம்	*Brig RGU Rajapakshe*
பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடம்	*Col RKARP Rathnayake*
மருத்துவ பீடம்	*Air Commodore (Prof) RANK Wijesinghe*
பொறியியல் பீடம்	*Capt. (Retd.) Eng. SU Dampage*
சட்ட பீடம்	*Mr WS Wijesinghe*
முகாமைத்துவ, சமூக அறிவியல் மற்றும் மனிதநேய பீடம்	*Mr WAAK Amaratunga*
இணைந்த சுகாதார அறிவியல் பீடம்	*Sur. Capt. NRP Perera*
கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடம்சார் அறிவியல்	*Dr AH Lakmal*
கணினியியல் பீடம்	*Dr ADAI Gunasekara*
தொழிநுட்ப பீடம்	*Dr KMGP Premadasa*
குற்றவியல் நீதி பீடம்	*Prof MADSJS Niriella*
ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பீடம்	*Prof CL Goonasekara*
பிரதி பீடாதிபதி - பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள்	*Lt Col TBMR Kandekumbura*
பணிப்பாளர்கள்	
தர உத்தரவாதத்திற்கான மையம்	*Snr Prof SR De Alwis Seneviratne*
ஊழியர் மேம்பாட்டு மையம்	*Dr FMMT Marikar*
தொழில் வழிகாட்டல் பிரிவு	*Dr RMNT Sirisoma*
பாலின சமத்துவ மையம்	*Dr LS Liyanage*
சர்வதேச தொடர்புகள்	*Dr KMGP Premadasa*
இடர் முகாமைத்துவ ஆய்வு மையம்	*Dr NK Gunasekara*
லொஜிஸ்டிக்ஸ்	*Capt (S) RMIA Mendis*
தகவல் தொழில்நுட்ப உதவி & மேம்பாட்டு சேவை மையம்	*Col MTC De Silva*
பதிவாளர்	*Mr VD Kithsiri*
துணை அதிகாரி	*Lt Col JDB Jayaweera*
நூலகர்	*Dr RCWMRW Seneviratne*

பல்கலைக்கழக நிதியாளர்	*Mr NW Wimalaweera*

துறைத் தலைவர்கள்

பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடம்

தந்திரோபாய கற்கைகள்	*Dr HR Vidanage*

மருத்துவ பீடம்

மருத்துவ விஞ்ஞானம்	*Prof GDI Rodrigo*
துணை மருத்துவ விஞ்ஞானம்	*Dr IHS Kumarasingha*
முன் மருத்துவ விஞ்ஞானம்	*Lt Col (Dr) WMMS Bandara*
மருத்துவ கற்கைகள்	*Surg Capt SNK Rodrio*

பொறியியல் பீடம்

வானூர்தியியல் பொறியியல்	*Wg Cdr UDLP Gunasinghe*
கட்டுமான பொறியியல்	*Dr DDTK Kulathunga*
EE & T	*Capt. WPC Weerawadana*
கடல்சார் பொறியியல்	*Cmde (E) MCP Dissanayake*
கணிதம்	*Dr US Rahubadde*
இயந்திர பொறியியல்	*Cdr (E) DS Bogahawatte*

முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதநேய பீடம்

மொழிகள்	*Maj JPWK Abeyawickrama*
முகாமைத்துவம் மற்றும் நிதி	*Dr JMW Premarathna*
சமூக விஞ்ஞானம்	*Mr HMN Herath*

சட்டபீடம்

குடியியல் சட்டம்	*Ms BKM Jayasekara*
இராணுவ சட்டம்	*Maj HSD Mendis*

இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்

அடிப்படை விஞ்ஞானம்	*Mr ARN Silva*
மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம்	*Dr CB Ranaweera*
தாதியியல்	*Dr. (Ms) MPKW Abhayasinghe*
மருந்தகவியல்	*Dr. HMAJ Halahakoon*
உடற்பயிற்சி சிகிச்சை	*Mr. SADCS Senevirathne*
கதிரியக்கவியல் மற்றும் கதிரியக்க சிகிச்சை	*Dr.WM Ediriarachchi*

கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம்

கட்டடக்கலை	*Archt.MLNH Premarathna*
இடஞ்சார்ந்த விஞ்ஞானம்	*Syr. KA Dinusha*
அளவையியல்	*Mr. KPSPK Bandara*

கணினி பீடம்

கணினி பொறியியல்	*Dr B Hettige*
கணக்கீட்டு கணிதம்	*Ms. DU Vidanagama*

கணினி விஞ்ஞானம்	*Dr. HRWP Gunathilaka*
தகவல் தொழிநுட்பம்	*Maj RMM Pradeep*

தொழிநுட்ப பீடம்

பொறியியல் தொழிநுட்பம்	*Dr. EKDHD Siriwardena*
உயிர் முறைமை தொழிநுட்பம்	*Dr. PATM Wijerathne*

குற்றவியல் மற்றும் நீதி பீடம்

குற்றவியல்	*Lt Col (Retd) TC Kathriarachchi*
காவல்துறை அறிவியல்	*SSP WRI Kankanamlage*

துறைத் தலைவர்கள் அல்லாது பீடங்களிலிருந்து செனட்டிற்குப் பரிந்துரைக்கப்பட்ட பேராசிரியர்கள்

சிரேஷ்ட பேராசிரியர் - FGS	*Snr Prof S Piyasiri*
குழந்தை மருத்துவ சிரேஷ்ட பேராசிரியர் - FOM	*Snr Prof ND Warnasuriya*
மருந்தியல் சிரேஷ்ட பேராசிரியர் – FOM	*Snr Prof BMR Fernandopulle*
உடலியல் சிரேஷ்ட பேராசிரியர் – FOM	*Snr Prof ALS Mendis*
சிரேஷ்ட பேராசிரியர் - FOM	*Snr Prof MV Weerasooriya*
அறுவை சிகிச்சையில் சிரேஷ்ட பேராசிரியர் - FOM	*Snr Prof MHJ Ariyaratne*
சிரேஷ்ட பேராசிரியர் – FAHS	*Snr Prof RN Pathirana*
ஒட்டுண்ணியியல் பேராசிரியர் – FOM	*Prof W Abeywickrama*
சிரேஷ்ட பேராசிரியர் – FMSH	*Snr Prof. P Hewage*
பேராசிரியர் - FMSH	*Prof WPR Wickramarathne*
பேராசிரியர் - FOT	*Prof PG Rathnasiri*
பேராசிரியர் – FOE	*Prof WCDK Fernando*

பணியாளர் அதிகாரிகள் (இராணுவம்)

SO I - FGS	*Lt Col GJP De Silva*
SO II – FDSS	*Major DGSP Samarasinghe*

நிர்வாக அதிகாரிகள் (சிவில்)

பிரதிப் பதிவாளர் – நிறுவனங்கள்	*Ms SDKC Sandanayake*
சிரேஷ்ட உதவிப் பதிவாளர் – தேர்வுகள்	*Mr DSCDP Gunasekara*

படைத் தளபதிகள்

Sqn Cdr (Intake 33)	*Maj RMPGLC Samarakoon*
Sqn Cdr (Intake 34)	*Major PGS Kumarasinghe*
Sqn Cdr (Intake 35)	*Maj KVDM Samarasinghe*
Sqn Cdr (Intake 36)	*Sqn Ldr HMC Ganegoda*
Sqn Cdr (Intake 37)	*LCdr (N) SMS Senadipathi*
Sqn Cdr (Intake 38)	*Sqn Ldr SMVALV Vidanaarachchi*
Sqn Cdr (Intake 39)	*LCdr Yapa Weerathunge*
Sqn Cdr (உள்வாங்கப்பட்ட மாணவர்கள்)	*Major IC Wijedoru*

பிரதிப் பதிவாளர் *(செனட் செயலாளர்)* *Cdr (H) HBH Deeshana*

1.4.3. பீட சபைகள்

பீட வாரியங்கள்	கூட்டங்களின் எண்ணிக்கை	
	2022	2021
பட்டதாரி கற்கைகள் பீடம்	10	11
பாதுகாப்பு மற்றும் மூலோபாய கற்கைகள் பீடம்	12	12
மருத்துவ பீடம்	12	12
பொறியியல் பீடம்	12	12
சட்ட பீடம்	12	12
முகாமைத்துவம், சமூக விஞ்ஞான, மனிதநேய பீடம்	12	12
இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்	12	12
கணினி பீடம்	12	12
கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம்	12	12
தொழிநுட்ப பீடம்	11	-
குற்றவியல் நீதி பீடம்	11	-

1.4.4. கூட்டங்கள்

முகாமைத்துவ சபை, செனட் மற்றும் மற்றைய அதிகாரிகள் 2022 ஆம் ஆண்டில் பின்வருமாறு கூடினர்.

கூட்டங்கள்	கூட்டங்களின் எண்ணிக்கை	
	2021	2022
முகாமைத்துவ சபை	12	13
நிதிக் குழு	05	01
திணைக்கள கொள்முதல் குழு	23	20
சிறு கொள்முதல் குழு	20	18
குறைதீர்க்கும் குழு	02	03
பதவி உயர்வு மதிப்பீட்டுக் குழு	08	04
தணிக்கை மற்றும் முகாமைத்துவ குழு	04	04
விடுமுறை மற்றும் விருதுகள் குழு	15	09
முகாமைத்துவ வாரியத்தின் முடிவுகள் பற்றிய முன்னேற்ற ஆய்வுக் குழு	12	13
செனட்	12	12
ஆராய்ச்சி மானியக் குழு	07	06
நூலக குழு	04	04
தர உத்தரவாதத்திற்கான செனட் நிலைக்குழு	03	04
நெறிமுறை மறுஆய்வுக் குழு	12	11
ஒழுங்காற்று **சபை**, குடியிருப்பு மற்றும் மாணவர் விவகாரங்கள்	02	02
தேர்வுக் குற்றங்களுக்கான விசாரணை **சபை**	11	07
பணி நியமனத்தின் அடிப்படையில் கல்விப் பணியாளர்களை பரிந்துரைக்கும் குழு	03	04
துணைப் பணியாளர்களை பரிந்துரைக்கும் குழு	06	04
பிற துணைக்குழுக்கள்		

ஆராய்ச்சி கொடுப்பனவு குழு	03	03
நிர்வாக மாநாடு		03
பெருநிறுவன திட்டக் குழு		03
செயல் திட்ட கண்காணிப்பு குழு		03
மாணவர் அனுமதி குழு	01	-
மருத்துவமனை முகாமைத்துவ குழு	09	16

1.5. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக கற்கைகளின் சந்தைப்படுத்தல் பார்வை

சந்தை சுருக்கம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) கீழ் 17 பல்கலைக்கழகங்களும் கல்வி அமைச்சின் (ME) கீழ் 02 பல்கலைக்கழகங்களும் இயங்குகின்றன. கல்வி அமைச்சால் நிர்வகிக்கப்படும் முன்னர் குறிப்பிடப்பட்ட இரண்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் உட்பட, 05 பல்கலைக்கழகங்கள் UGC இன் கீழ் மற்ற அரசாங்க பல்கலைக்கழகங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த துறையில் 10 முதுமாணி நிறுவனங்கள் மற்றும் 09 உயர் கல்வி நிறுவனங்கள் உள்ளன, இவை அனைத்தும் UGC ஆல் நிர்வகிக்கப்படுகின்றன. மேலும், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தால் (SLIATE) நிர்வகிக்கப்படும் 12 உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்றன. மேலும், மூன்றாம் நிலை அளவில், பல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டங்களுக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் தனியார் துறை உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளன. பல தொழிற்பயிற்சி நிறுவனங்களும் இலங்கையில் மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்களின் வகைக்குள் அடங்கும்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (KDU) இலங்கையில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் ஒரேயொரு பல்கலைக்கழகமாகும். இந்தப் பல்கலைக்கழகம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் வழிநடத்தப்படும் முகாமைத்துவ வாரியத்தால் (BoM) நிர்வகிக்கப்படுகிறது, மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் அதன் உறுப்பினராக உள்ளார். ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் "பிற அரசுப் பல்கலைக்கழகங்கள்" பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, மேலும் பல்கலைக்கழகம் அதன் அனைத்து பட்டங்களுக்கும் பிற கல்வித் திட்டங்களுக்கும் பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகளைப் பின்பற்றுகிறது. பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஆய்வுகள், மருத்துவம், பொறியியல், சட்டம், முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம், இணைந்த சுகாதார விஞ்ஞானம், கணினி, கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞானம், தொழில்நுட்பம், குற்றவியல் நீதி போன்ற இளமாணிப் பட்டப்படிப்புகளுக்கான மற்றும் MPhil மற்றும் PhD கற்கைகள் உட்பட பல முதுமாணி பட்டப்படிப்புகளுக்கான பெரும்பாலான ஆய்வுத் துறைகளை உள்ளடக்கிய 11 பீடங்கள் பல்கலைக்கழகத்தில் உள்ளன. மற்றும் Webometrics 2022 இன் படி, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் இலங்கையின் 14வது சிறந்த பல்கலைக்கழகமாக தரவரிசையில் உள்ளது. மேலும், உலகின் மிகவும் மதிப்புமிக்க 10 பாதுகாப்பு கலைக்கழகங்களில் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் 4வது இடத்தைப் பிடித்துள்ளது.

கேள்வி மதிப்பீடு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்படி, ஒவ்வொரு ஆண்டும் 200,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சை அரச பல்கலைக்கழகங்களில் சேரத் தகுதி பெறுகின்றனர். ஆனால்

குறைந்த வளங்களுடன், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 40,000 மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பல்கலைக்கழகங்களில் கற்பதற்கான வாய்ப்பை பெறுகிறார்கள். இந்தப் பின்னணியில், கடந்த ஐந்து ஆண்டுகளில் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஆண்டுக்கு சராசரியாக 7500 விண்ணப்பங்களை அதன் பட்டப்படிப்புகளுக்காக பெற்றுள்ளது, மேலும் க.பொ.த உயர்தரப் பரீட்சை Z மதிப்பெண் மற்றும் தொடர்ச்சியான போட்டி மதிப்பீடுகளில் அவர்களின் செயல்திறன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு விண்ணப்பதாரர்களில் சிறந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதன்படி, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக சுமார் 1000 மாணவர்களை பயிற்சி அதிகாரிகள் மற்றும் தினவருகை மாணவர்களாக பதிவுசெய்கிறது. தேர்வு நேர்காணல்களில் விளையாட்டு மற்றும் பிற பாடநெறி நடவடிக்கைகளில் அவர்களின் செயல்திறன் அங்கீகரிக்கப்படுகிறது. மேலும், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஒழுக்கமான பட்டதாரிகளை சிறந்த மனப்பான்மை மற்றும் தகுந்த மென்திறன்களுடன் உருவாக்குகிறது என்று பெற்றோர்கள் மற்றும் பெருநிறுவனத்துறையில் பொதுவான ஒருமித்த கருத்து உள்ளது. மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் குறிப்பிட்ட காலத்திற்குள் படிப்புகளை முடிப்பதில் சிறந்த கவனம் செலுத்துவது அதன் கல்வித் திட்டங்களுக்கான அதிக கேள்விக்கு ஒரு வலுவான காரணமாகும். முதுமாணி படிப்புகளுக்கான கேள்வியும் அவற்றின் தொடர்ந்து அதிகரித்து வரும் தரத்தின் விளைவாக கணிசமாக வளர்ந்துள்ளது.

ஆண்டுதோறும், 220க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முதுமாணி திட்டங்களில் சேருகின்றனர்.

பிரிவு, இலக்கு & நிலைப்படுத்தல் (STP) பகுப்பாய்வு

சேவைகளின் ஒரு விரிவான portfolioவுடன், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் இரண்டு ஒப்பீட்டளவில் வேறுபட்ட சந்தைகளுக்கு கல்வி சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, உள்ளூர் மாணவர்கள் பயிற்சி அதிகாரிகள் மற்றும் தினவருகை மாணவர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் பயிற்சி அதிகாரிகள் மற்றும் தினவருகை மாணவர்கள். எனவே, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சந்தை வடிவமைப்பு முக்கியமாக இரண்டு வகையான சேர்க்கைகளைக் கொண்டுள்ளது, அதாவது உள்ளூர் மாணவர் ஆட்சேர்ப்பு மற்றும் வெளிநாட்டு மாணவர் ஆட்சேர்ப்பு. எனவே, பின்வரும் பகுப்பாய்வு ஆனது மாணவர் சந்தை, ஒரு குறிப்பிட்ட மாணவர் குழு மற்றும் கல்விச் சேவைகளுக்காக மாணவர்களின் மனதில் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் எடுக்கும் இடம் ஆகியவற்றை அடையாளம் காட்டுகிறது:

பிரிவுகள்

<table>
<tr><td colspan="3">இளமாணி கற்கைகள்</td></tr>
<tr><td>பிரிவு</td><td colspan="2">அம்சங்கள்</td></tr>
<tr><td rowspan="2">உள்நாட்டு மாணவர்கள்</td><td>பயிற்சி அதிகாரிகள்</td><td>தினவருகை மாணவர்கள்</td></tr>
<tr><td colspan="2">நிர்ணயிக்கப்பட்ட முடிவுகளுடன் G.C.E A/L பரீட்சை/Pearson/Edexcel அல்லது Cambridge A/L பரீட்சை முடித்தவர்கள்.</td></tr>
<tr><td rowspan="2">வெளிநாட்டு மாணவர்கள்</td><td>பயிற்சி அதிகாரிகள்</td><td>தினவருகை மாணவர்கள்</td></tr>
<tr><td colspan="2">நிர்ணயிக்கப்பட்ட முடிவுகளுடன் G.C.E A/L பரீட்சை/Pearson/Edexcel அல்லது Cambridge A/L பரீட்சை ஆகியவற்றுக்கு இணையான தகுதி பெற்றவர்கள்</td></tr>
</table>

முதுமாணி கற்கைகள்	
உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள்	***Master's கற்கைகள்***
	பல வருட அனுபவமுள்ள முப்படை அதிகாரிகள்.
	வகுப்புகள் உள்ள பட்டதாரிகள், வகுப்புகளுடன் குறைந்தபட்சம் 1-2 வருட அனுபவமுள்ள பட்டதாரிகள், மற்றும் பல வருட அனுபவமுள்ள பட்டதாரிகள்.
	MPhil/PhD கற்கைகள்
	முதுமாணி பட்டம் பெற்றவர்கள், நான்காண்டு பட்டப்படிப்புகளில் வகுப்புகள் உள்ள பட்டதாரிகள், சம்பந்தப்பட்ட துறைகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகளில் பட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவம் பெற்றவர்கள், அல்லது குறைந்தபட்சம் 20 வருட சேவையுடன் Pass Staff College (PSC)/ Logistics Staff Course (LSC) உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிறுவனத்தில் இருந்து இணையான தகுதி பெற்றவர்கள்
வேறு கற்கைகள்	
உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள்	*அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சான்றிதழ் மற்றும் டிப்ளமோ அளவிலான தகுதிகளைப் பெற விரும்புவோர்.*


இலக்கு

இலக்கு	***அம்சங்கள்***
பயிற்சி அதிகாரிகள், *பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் மாணவர் போலீஸ் அதிகாரிகள்*	*விளையாட்டு, இராணுவ பயிற்சி (Cadet), சாரணர் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பதிவுகளுடன் உயர் தரங்கள் / உயர் Z- மதிப்பெண்கள் / குறைந்தபட்ச பல்கலைக்கழக நுழைவுத் தகுதி மற்றும் இராணுவ அதிகாரிகளாக ஆவதற்கு விருப்பம் உள்ளவர்கள்.*
தினவருகை மாணவர்கள்	*உயர் தரங்கள்/ உயர் Z- மதிப்பெண்கள்/ குறைந்தபட்ச பல்கலைக்கழக நுழைவுத் தகுதி, விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சாதனை படைத்தவர்கள் மற்றும் தினவருகை மாணவர்களாக சேர விருப்பம் உள்ளவர்கள்.*
முதுமாணி மாணவர்கள்	*முதுமாணி பட்டங்கள் - பல வருட அனுபவத்துடன் முகாமைத்துவம், பொறியியல் மற்றும் சட்டத்தில் முதுமாணிப் பட்டதாரி தகுதிகளைப் பெற விரும்பும் பல வருட அனுபவமுள்ள முப்படை அதிகாரிகள்.* *முதல் வகுப்பு தேர்ச்சி மற்றும் ஒரு வருட அனுபவம் உள்ள பட்டதாரிகள் அல்லது இரண்டாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் பொது அல்லது தனியார் துறையில் இரண்டு வருட அனுபவம் உள்ள பட்டதாரிகள். (MSc- Management மற்றும் MBA- Logistics Management).* *பொது அல்லது தனியார் துறையில் குறிப்பிட்ட வருட அனுபவம் உள்ள பட்டதாரிகள் மற்றும் முதுமாணி தகுதிகளைத் தேடுபவர்கள் (அனைத்து முதுமாணி பட்டங்களுக்கும் - சில சிறப்பு தகுதி நிலைகள் உபயோகிக்கப்படலாம்).* *MPhill/PhD - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சம்மந்தப்பட்ட துறையில் முதுமாணிப் பட்டம் (SLQF L9/10), அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் 1 ஆம் அல்லது 2ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் சம்மந்தப்பட்ட துறையில் நான்கு வருட (SLQF L6) இளமாணிப் பட்டம்; அல்லது 1 ஆம் அல்லது 2*

	ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் சம்மந்தப்பட்ட துறையில் மூன்றாண்டு கால (SLQF L5) இளமாணி பட்டம் மற்றும் சம்மந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவம்; அல்லது குறைந்தபட்சம் 20 வருட சேவையுடன் (ஆராய்ச்சி வெளியீடுகளின் சான்றுகளுடன்) Pass Staff College (PSC)/ Logistics Staff Course (LSC)/ உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிறுவனத்தில் இருந்து இணையான தகுதி பெற்றவர்கள்
குறுகிய கற்கைநெறிகள்	*குறுகிய கற்கைநெறிகள் - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சான்றிதழ் மற்றும் டிப்ளமோ அளவிலான தகுதிகளைப் பெற விரும்புவோர்.*

நிலைப்படுத்துதல்

தற்போதைய பலத்தின் அடிப்படையில், KDU ஆனது சேவை மற்றும் சிவில் துறைகள் ஆகிய இரண்டிற்கும் கட்டண மற்றும் கட்டணமற்ற அடிப்படையில் உயர்தர கல்வியை வழங்க வல்லது. மேலும், தனியார் மற்றும் பொதுத் துறைகளுக்குள், குறிப்பிட்ட பணிச்சூழலுக்கு விரைவாக அனுசரிக்கும் திறன் கொண்ட, சிறந்த அறிவு, திறமைகள் மற்றும் மனப்பான்மையுடன் கூடிய உயர்தர மற்றும் ஒழுக்கமான பட்டதாரிகள் மற்றும் முதுமாணி பட்டதாரிகளை உருவாக்குவதில் பல்கலைக்கழகம் நற்பெயரைக் கொண்டுள்ளது. மேலும், KDU ஒரு சிவில்-இராணுவ கல்வி கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது, இதில் இரு தரப்பினரும் பரஸ்பர நன்மைகளைப் பெறுகின்றனர். பயிற்சி அதிகாரிகள் போட்டித்தன்மை வாய்ந்த கற்றல் சூழலைப் பெறும் அதே வேளையில், தினவருகை மாணவர்கள் ஒழுக்கமான சூழலில் கற்றலின் தகுதிகளை உள்வாங்கும் நன்மையைப் பெறுகின்றனர். மொத்தத்தில், KDU இல் உள்ள தனித்துவமான கல்வி மாதிரியானது, இலங்கையின் எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான தேசத்தை உறுதி செய்வதற்கு உகந்த சிவில்-இராணுவ ஒத்துழைப்பின் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.



1.6. இடர் முகாமைத்துவ பகுப்பாய்வு

இடர் முகாமைத்துவ பகுப்பாய்வின் நோக்கம் யாதெனில், மூலோபாய இலக்குகளை நிறைவேற்றுவதற்கான பல்கலைக்கழகத்தின் திறனை பாதிக்கக்கூடிய இடர்களுக்கு பதிலளிப்பதற்கான ஒருங்கிணைந்த செயல்களின் உருவாக்கத்திற்கும் பராமரிப்பிற்கும் அடித்தளத்தை வழங்குவதாகும்.

பின்வரும் அட்டவணை நெருக்கடியான இடர் வெளிப்பாடு மற்றும் தணிப்பு முயற்சிகளை விளக்குகிறது.

இடர் வெளிப்பாடு	சாத்தியமான விளைவு	மதிப்பீடு		தணிக்கும் நடவடிக்கைகள்
		விளைவு	நிகழ்தகவு	
செயற்பாட்டு சீர்குலைவு	பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு குறுக்கீடுகள் ஏற்பட்டதோடு நெருக்கடி நிலை காரணமாக நிதியாண்டு குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்பட்டது.	உயர்வு	உயர்வு	• *'Work Rosters'ஐ செயல்படுத்துதல்* • *நிகழ்நிலை கற்பித்தல் மற்றும் கற்றலை எளிதாக்குதல்.* • *கல்வி மற்றும் நிர்வாகக் கூட்டங்களில் நிகழ்நிலை தளங்கள் ஊக்குவிக்கப்பட்டன.* • *எரிபொருள் பற்றாக்குறை பிரச்சினை காரணமாக ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.* • *அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழக செயற்பாடுகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக புதிய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்.* • *பல்வேறு விளையாட்டுகளை இலக்காகக் கொண்டு மாணவர்களுக்கு இடையேயான போட்டிகளில் புதிய முயற்சியுடன் மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளைத் தொடர்தல்.*

நிதி ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல்	*KDU* முக்கியமாக பொது திறைசேரி மற்றும் சுய-நிதி நிதியத்தால் நிதியளிக்கப்படுகிறது, இதன் வருமான ஆதாரம் தினவருகை மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பாடநெறிக் கட்டணமாகும்.	உயர்வு	நடுத்தரம்	• கட்டணம் வசூலிக்கும் மாணவர்களிடமிருந்து இளமாணி பட்டப்படிப்புகளுக்கான பாடநெறிக் கட்டணங்கள் திருத்தம். • பட்டதாரி கற்கைகள் பீடத்தால் வழங்கப்படும் முதுமாணி கற்கைநெறிகளின் கடுமையான ஊக்குவிப்பு மற்றும் *KDU Metropolitan* வளாகத்தால் வழங்கப்படும் புதிய சான்றிதழ் கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துதல். • நிகழ்நிலை கட்டண நுழைவை எளிதாக்குதல். • தற்போதுள்ள பீடங்களில் புதிய பட்டப்படிப்பு திட்டங்களை அறிமுகப்படுத்துதல். • இரண்டு புதிய பீடங்களை நிறுவுதல் *(தொழில்நுட்ப* பீடம் மற்றும் குற்றவியல் நீதி பீடம்*)*
பல்கலைக்கழக வளாகத்திற்குள் உட்கட்டமைப்பு வசதிகள்	புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பட்டப்படிப்புகளில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக விரிவுரை அரங்குகள் தொடர்பான பிரச்சினைகள்	உயர்வு	உயர்வு	• இரண்டு புதிய பீட வளாகங்களை நிர்மாணித்தல். • பட்டதாரி கற்கைகள் பீடத்தில் பட்டதாரி விரிவுரைகளுக்காக வார நாட்களில் விரிவுரை மண்டபங்களை ஒதுக்கீடு செய்தல்.
மாற்று விகித ஏற்ற இறக்கங்கள்	பல்கலைக்கழகம் சிறப்பு உபகரணங்களை இறக்குமதி செய்வதால் *2022* இல் இலங்கை ரூபாயின் ஏற்ற இறக்கம் வெளிநாட்டு நாணயத்தின் செலவினை பாதித்தது.	உயர்வு	உயர்வு	• அந்நியச் செலாவணி வருவாயை அதிகரிக்க வெளிநாட்டுக் கட்டணம் வசூலிக்கும் மாணவர்களை பல்வேறு பட்டப்படிப்புகளுக்கு ஊக்குவித்தல். • வெளிநாட்டு இராணுவ மாணவர்களை ஈர்ப்பதற்காக வெளிநாட்டு இராணுவ கல்விக்கூடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தங்கள். • அதிக வெளிநாட்டு மாணவர்களை ஊக்குவிப்பதற்காக கல்வி

				நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள்.
பங்குதாரர் ஈடுபாடு	உலகில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி பல்கலைக்கழகத்தின் பங்குதாரர்களை பல்வேறு அளவுகளில் பாதித்தது.	நடுத்தரம்	உயர்வு	• சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் வெளிநாட்டு மானியங்கள் மூலம் தற்போதைய நிலையைப் பேணுதல். • நிகழ்நிலை மாணவர் ஆட்சேர்ப்பு மற்றும் கட்டணம் வசூலிக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதை ஊக்குவித்தல். • முப்படைகளின் இராணுவத்துடன் இணைந்த திட்டங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாது இருத்தல். • முப்படைகளுக்கு மேலதிகமாக பல்கலைக்கழக கல்வியை இலங்கை பொலிஸாருக்கு விரிவுபடுத்துதல்.
பணியாளர் தக்கவைப்பு	கல்வி, நிர்வாகம் மற்றும் கல்விசாரா பணியாளர் வகைகளின் அடிப்படையில் பணியாளர்களின் வருமானம்	உயர்வு	குறைவு	• அனைத்து சிவில் ஊழியர்களுக்கும் பணியாளர் காப்பீட்டுத் திட்டத்தில் தொடர்ச்சியான ஏற்பாடுகள். • பல்கலைக்கழகத்தின் பணியாளர் மேம்பாட்டு மையத்தின் ஈடுபாட்டுடன் நிகழ்நிலை பணியாளர் மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அமர்வுகளை ஏற்பாடு செய்தல். • தற்காலிக ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுனர்கள் ஆட்சேர்ப்பு. • சிவில் ஊழியர்களுக்கு மடிக்கணினிக்கான கடன் வழங்குதல்.
பட்டதாரிகளின் வேலை வாய்ப்பு	பட்டதாரி ஊழியர்களுக்கு தொழில்துறையில் வரையறுக்கப்பட்ட வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன	உயர்வு	நடுத்தரம்	• பல்கலைக்கழகத்திற்குள் தொழில் வழிகாட்டல் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்.

				• *KDU மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU).* • *தொழிற்துறை ஒத்துழைப்புடன் மாணவர் நடவடிக்கைகள்.*

2. செயற்பாட்டு அடைவு

மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் பல்கலைக்கழகத்தின் முக்கிய செயற்திறன் தொடர்பான தகவல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன;

2.1. மாணவர் பட்டமளிப்பு


2022 ஆம் ஆண்டில், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பங்கேற்புடன் 2022 நவம்பர் 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் BMICH இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் ஒன்பது பீடங்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களிலிருந்து 1619 பட்டதாரிகளை எமது பல்கலைக்கழகம் உருவாக்கியது.



2.1.1. கொத்தலாவல பல்கலைக்கழக இளமாணி முடிவுகள் (2018 – 2022)

பீடம்	பட்டப்படிப்புத் திட்டம்	2018		2019		2020		2021		2022	
		பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்
FOM	MBBS	187	187	137	137	140	140	65	65	**268**	**268**
FOE	ENG	184	184	195	195	196	196	241	241	**264**	**264**
FOL	LLB	119	119	98	98	112	112	114	114	**99**	**99**
FMSH	BSc in Management & Technical Sciences	49	195	49	156	54	256	61	276	**79**	**238**
	BSc in Logistics Management	98		77		169		147		**99**	


	BSc in Social Sciences	*48*		*30*		*33*		*68*		***60***	
FAHS	*BSc (Hons) MLS*	*30*	*221*	*30*	*145*	*26*	*139*	*37*	*170*	***34***	***155***
	BSc (Hons) Nursing	*113*		*49*		*50*		*38*		***38***	
	Bpharm (Hons)	*24*		*23*		*30*		*35*		***27***	
	BSc (Hons) Physiotherapy	*30*		*30*		*28*		*41*		***34***	
	BSC (Hons) Radiotherapy	*-*		*-*		*-*		*10*		***8***	
	BSC (Hons) Radiography	*24*		*13*		*05*		*09*		***14***	
FBE& SS	*BSc in Architecture*	*-*	*-*	*-*	*40*	*16*	*45*	*08*	*72*	***12***	***73***
	BSc (Hons) in Quantity Surveying	*-*		*25*		*19*		*48*		***49***	
	BSc (Hons) in Surveying Sciences	*-*		*13*		*08*		*16*		***12***	
	BSc in Built Environment	*-*		*02*		*02*		*-*		***-***	
FOC	*BSc (Hons) in Information Technology*	*57*	*84*	*20*	*95*	*31*	*102*	*57*	*143*	***44***	***161***
	BSc (Hons) in Information System	*-*		*11*		*23*		*18*		***42***	
	BSc (Hons) in Computer Science	*27*		*64*		*25*		*28*		***20***	
	BSc (Hons) in Computer Engineering	*-*		*-*		*11*		*14*		***19***	
	BSc (Hons) in Software Engineering	*-*		*-*		*12*		*26*		***36***	
			990		***866***		***990***		***1081***		***1258***



2.1.2. கொத்தலாவல பல்கலைக்கழக முதுமாணி முடிவுகள் (2018 – 2022)

பீடம்	பட்டப்படிப்புத் திட்டம்	2018		2019		2020		2021		2022	
		பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்
FGS	PhD	02	70	01	76	05	112	01	78	-	99
	MSc in Management	20		17		21		15		6	
	MSc in Security & Strategic Studies	06		11		11		07		15	
	LLM	17		24		29		28		17	
	MBA Logistics Management	11		16		24		15		34	
	MBA E Governance	07		05		11		02		2	
	MSc in Elec. Eng	-		-		-		01		-	
	MSc in Elec. Eng & Tele. Eng	03		01		01		-		-	
	PGD in Management & LM	-		-		10		-		-	
	MSc in Disaster Risk Reduction and Development	-		-		-		07		-	
	PGD in Law	-		-		-		02		1	
	MSc in Civil & Structural Eng	04		01		-		-		-	
	MSc in National Security & Strategic Studies	-		-		-		-		11	
	MSc in ET	-		-		-		-		2	
	MSc in CE	-		-		-		-		2	
	PD in CE	-		-		-		-		1	
	PGD in EE	-		-		-		-		3	
	PGD in MSc	-		-		-		-		3	

	PGD in MSSS	-		-		-		-		2	
			70		76		112		78		99




2.1.3. பட்டதாரி கற்கைகள் பீடம் – இளமாணி முடிவுகள் (2018 -2022)

பீடம்	பட்டப்படிப்புத் திட்டம்	2018		2019		2020		2021		2022	
		பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்
FGS	BSc in Management	07	07	18	18	12	12	14	14	25	25
			07		18		12		14	25	25

2.1.4. இணைந்த நிறுவனங்கள் – முதுமாணி முடிவுகள் (2018 – 2022)


நிறுவனங்கள்	பட்டப்படிப்புத் திட்டம்	2018		2019		2020		2021		2022	
		பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	மொத்தம்	பட்ட தாரி எண்.	Total
DSCSC	MSc (D&SS)	119		104		119		127		120	
NMA	MBA in Logistics Management	07		08		07		02		8	
	PGD in Defence Mgt	-	134	05	140	07	148	04	150	23	170
ASL	MBA in Logistics Management	-		15		08		17		7	
	PGD in Logistics Management	02		04		-		-		-	

SLAFA	PGD	06		04		07		-		12	
			134		140		148		150		170



2.1.5. இணைந்த நிறுவனங்கள் – இளமாணி முடிவுகள் (2018 – 2022)

பீடம்	பட்டப் படிப்புத் திட்டம்	2018		2019		2020		2021		2022	
		பட்டதாரிகளின் எண்ணிக்கை	மொத்தம்	பட்டதாரிகளின் எண்ணிக்கை	மொத்தம்	பட்டதாரிகளின் எண்ணிக்கை	மொத்தம்	பட்டதாரிகளின் எண்ணிக்கை	மொத்தம்	பட்டதாரிகளின் எண்ணிக்கை	மொத்தம்
SLMA	BSc in Military Studies	65	65	96	96	37	37	39	39	8	8
NMA	BSc in Naval & Maritime Studies	25	53	13	40	32	54	23	39	-	11
	BSc in Naval Logistic Management	11		19		14		16		-	
	BSc in Naval Studies	17		08		08		-		11	
SLAFA	BSc in Aviation Studies	19	19	34	34	32	32	13	13	48	48
			137		170		123		91		67



2.2. மாணவர் ஆட்சேர்ப்பு

இளமாணி மற்றும் முதுமாணி பட்டப்படிப்புகளுக்காக 2009 மாணவர்களை பல்கலைக்கழகத்தால் கீழ்க்கண்டவாறு சேர்க்க முடிந்தது;

கற்கை	*கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்*	*இணைந்த கல்வி நிறுவனங்கள்*	*மொத்தம்*
இளங்கலை பட்டதாரிகள்	*1278*	*185*	***1463***
முதுகலை பட்டதாரிகள்	*211*	*335*	***546***
மொத்தம்	***1489***	***520***	***2009***

2.3. ஊழியர் சாதனைகள், விருதுகள் மற்றும் Fellowship

- *மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான டாக்டர். ஆர்.ஈ. விக்கிரமாராச்சி அவர்கள் 2022 ஆம் ஆண்டிற்கான Asian Collaboration for Trauma (ACT) விருது பெற்றார்கள்.*
- *மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான டாக்டர் நிபுன் டி சில்வா அவர்களுக்கு 2021 ஆம் ஆண்டின் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (கல்வி பணியாளர் பிரிவு) ஆராய்ச்சி சிறப்பு விருது வழங்கப்பட்டது.*
- *பாதுகாப்பு மற்றும் மூலோபாயக் கற்கைகள் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி HR விதானகே அவர்கள் 2022 ஜூன் மாதம் DECAF ஜெனீவாவினால் நடத்தப்பட்ட தெற்காசியா மாநாடு மற்றும் வல்லுநர் குழு பயிற்சிப்பயிற்சிநெறியில் இணைய பாதுகாப்பு ஆளுகை தொடர்பான முக்கிய இணைய வல்லுநராக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.*
- *பொறியியல் பீடத்தின் திணைக்கள தலைவர் (கடல்சார் பொறியியல்) Commander (E) எம்.சி.பி திஸாநாயக்க அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் சபையின் அங்கத்துவத்தைப் பெற்றார்.*
- *பொறியியல் பீடத்தின் விரிவுரையாளரான (தகுதிகாண்) Lieutenant Commander (E) VADJV பெரேரா அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் சபையின் அங்கத்துவத்தைப் பெற்றார்.*
- *பொறியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான (Gr II) டாக்டர் (செல்வி) எஸ்.கே. விஜேசேகர அவர்கள் அமெரிக்காவின் மின் மற்றும் மின்னணுவியல் பொறியாளர்கள் நிறுவனத்தின் (IEEE) சிரேஷ்ட அங்கத்துவத்தைப் பெற்றார்.*
- *பொறியியல் பீடத்தின் விரிவுரையாளரான பொறியியலாளர் (திரு) கே.ஜி. சமரவிக்ரம (தகுதிகாண்) அவர்கள் IESL மற்றும் AEng (ECSL) ஆகியவற்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றார்.*
- *பொறியியல் பீடத்தின் பயிற்றுவிப்பாளரான (Gr II) பொறியியலாளர் (செல்வி) SS மொரப்பிட்டிய அவர்கள் IET (UK) இன் அங்கத்துவத்தைப் பெற்றார்.*
- *பொறியியல் பீடத்தின் தற்காலிக பயிற்றுவிப்பாளரான திரு AAJ குணசேகர அவர்கள் IET (UK) மற்றும் IEEE இன் அங்கத்துவத்தைப் பெற்றார்.*
- *பொறியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான Wg Cdr SN கிரிவெல்ல அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் Royal Aeronautical Society இன் உறுப்பினராக 22 அக்டோபர் 2022 அன்று கூடிய சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் அவர் இலங்கையின் பொறியியலாளர் சபையின் உறுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டு 05 நவம்பர் 2022 அன்று இலங்கையின் பொறியியலாளர் சபையில் இணை பொறியியலாளராக பதிவு செய்யப்பட்டார்.*

- கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடத்தின் விரிவுரையாளரான (உறுதிப்படுத்தப்படாத) கலாநிதி (கட்டமைப்பாளர்) எச்.டி ரூபசிங்க அவர்கள் இலங்கை கட்டிடக்கலை நிபுணர்கள் நிறுவனத்திடமிருந்து (SLIA) 2022 ஆம் ஆண்டுக்கான ஆராய்ச்சி விருது மற்றும் வெளியீட்டு விருதை வென்றார்.
- கணினி பீடத்தின் விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத) திருமதி.பி.ஆர்.டி. விஜேசிங்க அவர்களுக்கு 2022 ஜூலை 29 அன்று நடைபெற்ற முதுமாணி பட்டமளிப்பு விழாவில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், முதுகலை வணிக நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் நிதி பீடம் ஆகியவற்றில் சிறந்த செயற்திறனுக்காக Hayleys தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.
- பல்கலைக்கழக நூலகர்கள் சங்கத்தின் சர்வதேச மாநாட்டில் 'சிறந்த அறிவிப்பாளர்' விருதை சிரேஷ்ட உதவி நூலகரான திருமதி எம்.பி. ராஜபக்ஷ வென்றார்.

2.4. நாட்டில் உள்ள பிற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கான நியமனங்கள்

- மருத்துவ பீடத்தின் பேராசிரியரான எஸ்.ஆர். டி அல்விஸ் செனவிரத்ன அவர்கள் இலங்கையின் சுகாதார அமைச்சின் தேசிய சுகாதார ஆராய்ச்சி மன்றத்தின் தலைவராகவும் தேசிய விஞ்ஞான அறக்கட்டளையின் (SCIE Expanded) பத்திரிகையில் ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் 1987 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மனித திசுக்கள் மாற்றுச் சட்டத்தின் கீழ் ஆலோசனைக் குழுவிற்கான பொருள் பரிமாற்ற உடன்படிக்கைகளுடன் ஆராய்ச்சி முன்மொழிவுகளை மறுஆய்வு செய்வதற்கான துணைக்குழுவின் அங்கத்தவராகவும், பல்துறை ஆய்வுப் பாடநெறிகள் பற்றிய ஆய்வுக்குழு, முதுகலை மருத்துவ நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழக PGIM இன் முகாமைத்துவ சபையின் பரிந்துரைக்கப்பட்ட அங்கத்தவராகவும், மருத்துவம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் பற்றிய ஆய்வுக்குழுவின் அங்கத்தவராகவும் தொடர்ந்து பணியாற்றியுள்ளார்.
- மருத்துவ பீடத்தின் பேராசிரியரான கர்னல் ஏ. பாலசூரிய அவர்கள் அவுஸ்திரேலியாவின் Griffith பல்கலைக்கழக முதுகலை மருத்துவ கல்வி நிறுவனத்தின் இராணுவ மருத்துவத்தில் சிறப்புக் கற்கை சபை, முதுகலை மருத்துவ கல்வி நிறுவனத்தின் சுகாதாரத் துறையின் பேரிடர் முகாமைத்துவத்தில் சிறப்புப் கற்கை சபை ஆகியவற்றின் துணைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்
- டாக்டர் ஏ.யு. கமகே உலக சுகாதார அமைப்பின் குறுகிய கால ஆலோசனையின் கீழ் மருத்துவப் பீடத்தின் சுகாதார பொருளாதாரத்திற்கான தேசிய ஆலோசகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர். கே.டி. விஜேநாயக்க, முதுகலை மருத்துவக் நிறுவனத்தின் (PGIM) பொது அறுவை சிகிச்சைக்கான சிறப்பு சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை பெருங்குடல் அறுவை சிகிச்சை சங்கத்தின் (SLACS) நிறுவனர் தலைவராகவும் "உலகளாவிய தேர்ந்தெடுக்கப்பட்ட அறுவை சிகிச்சை தயார்நிலை குறியீட்டின் (GESPI) வளர்ச்சி மற்றும் சரிபார்ப்பு" உறுப்பினராகவும் கோவிட் எழுச்சி மற்றும் உலகளாவிய அறுவை சிகிச்சை கூட்டு ஆராய்ச்சிக் குழுவின் உறுப்பினராகவும் "COVID Surge" எனப்படும் NIHR உலகளாவிய சுகாதார ஆராய்ச்சிப் பிரிவின் சர்வதேச ஒத்துழைப்புக்கான மருத்துவமனை முன்னணியாகவும் "தடுப்பூசி மற்றும் ஓமிக்ரான் சகாப்தத்தின் போது perioperative SARS-CoV-2 தொற்று உள்ள நோயாளிகளின் விளைவுகள்" பல மைய உலகளாவிய கூட்டு ஆராய்ச்சி குழுவிற்கான மருத்துவமனை முன்னணியாகவும், ESCP பாதுகாப்பான-anastomosis திட்டத்தின் Colorectal சத்திரசிகிச்சை என்பது (EAGLE) ஐரோப்பிய Coloproctology சங்கம் (ESCP) மூலம் நடாத்தப்பட்ட ஒரு உலகளாவிய 'Snapshot studies' இல் "சரியான colectomy மற்றும் ileocaecal resection ஐ தொடர்ந்து anastomotic கசிவைக் குறைப்பதற்கான பாதுகாப்பான-anastomosis தர மேம்பாட்டு தலையீட்டின் சர்வதேச சீரற்ற-தொடர் ஆய்வுக்கான மருத்துவமனை முன்னணியாகவும் "HernIas, Pathway and Planetary Outcomes for

Inguinal Hernia Surgery (HIPPO)" எனப்படும் உலகளாவிய அறுவைசிகிச்சை பற்றிய NIHR உலகளாவிய சுகாதார ஆராய்ச்சி பிரிவின் குடலிறக்க அறுவை சிகிச்சை பற்றிய உலகளாவிய வருங்கால ஒருங்கிணைந்த ஆய்வுக்கான மருத்துவமனை முன்னணியாகவும் நியமிக்கப்பட்டார்.

- *மருத்துவ பீடத்தின் டாக்டர் டபிள்யூ.டி.டி. டி சில்வா அவர்கள் Sri Lanka Journal of Surgery இன் ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் இலங்கை சத்திரசிகிச்சைகள் கல்லூரியின் 'Suture' செய்தி அறிக்கைத்தாளின் ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.*
- *மருத்துவ பீடத்தின் டாக்டர். ஆர்.ஈ. விக்கிரமாராச்சி அவர்கள் இலங்கை சத்திரசிகிச்சை நிபுணர்கள் கல்லூரியின் மன்ற உறுப்பினராகவும் இலங்கை சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் ஆசிரியராகவும் Sri Lanka Journal of Urology இன் இணை ஆசிரியராகவும் மற்றும் இலங்கை அறுவைசிகிச்சை சபையின் கல்விசார் இணைத்தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.*
- *மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர். ஏ.யு.கமகே அவர்கள் இலங்கையின் சமூக மருத்துவர்கள் கல்லூரியின் ஆராய்ச்சிப்பத்திரிகை ஆசிரியர் குழு உறுப்பினராகவும் இலங்கை சுகாதார ஆராய்ச்சி பத்திரிகையின் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் 2021-2022 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் சமூக மருத்துவர்கள் கல்லூரியின் சொற்பொழிவுக் குழு தலைவராகவும் மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி கற்கைகள் பீடத்தின் கல்வி சபையின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.*
- *மருத்துவ பீடத்தின் டாக்டர். எஸ்.எம். கொலம்பகே அவர்கள் இலங்கை மருத்துவ-சட்ட சங்கத்தின் விஞ்ஞான அமர்வுகளின் மதிப்பாய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.*
- *பொறியியல் பீடத்தின் பொறியியலாளர் (செல்வி) எஸ்.எஸ். மொரப்பிட்டிய அவர்கள் பெண்கள் பொறியியலாளர்கள் மன்றத்தின் செயற்குழு உறுப்பினராகவும் IESL நூலகம் மற்றும் வெளியீடுகள் நிலைக்குழு உறுப்பினராகவும் IESL மற்றும் பாதுக்கவிலுள்ள SLTC யின் திட்ட மேற்பார்வையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.*
- *1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஊக்குவிப்புச் சட்டத்தின் உப பிரிவு 11(2) இன் விதிமுறைகளின்படி 2017 முதல் 2020 வரையிலான காலப்பகுதியில் பெற்ற உள்நாட்டு கண்டுபிடிப்புகளுக்கான ஜனாதிபதி விருதுகளை மதிப்பிடுவதற்கான நடுவர் குழுவில் பணியாற்றுவதற்காக இலங்கையின் சரக்கு மற்றும் போக்குவரத்துக்கான பட்டய நிறுவனத்தின் 2022/2023 ஆண்டுக்கான தலைவராக முகாமைத்துவம், சமூக விஞ்ஞான மற்றும் மனிதநேய பீடத்தின் கலாநிதி (செல்வி) RMNT சிறிசோமா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் இவர் இலங்கை சரக்கு அனுப்புவோர் சங்கத்தினால் (SLFFA) ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய logistics விருதுகளில் நடுவர் குழுவிலும் பணியாற்றினார்.*
- ***இலங்கை ஆய்வக விலங்கு விஞ்ஞானத்திற்கான சங்கத்தின் கௌரவ செயலாளராகவும் இலங்கை விஞ்ஞான முன்னேற்றத்திற்கான சங்கத்தின் சுற்றாடல் குழுவின் குழு உறுப்பினராகவும் இணை சுகாதார விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான (தரம். II) டாக்டர் ஜி.யு.ஜெயவீர நியமிக்கப்பட்டுள்ளார்.***
- *இலங்கை மருத்துவக் கல்லூரி பேரவையின் பாட நிபுணர் குழுவின் உறுப்பினர்களாக இணை சுகாதார விஞ்ஞான பீடத்தின் திரு SADCS சேனவிரத்ன (– Gr. II), Ms GAD பெரேரா (சிரேஷ்ட விரிவுரையாளர் – Gr. II), Dr WM எதிரி ஆராச்சி (சிரேஷ்ட விரிவுரையாளர் – Gr. II), Dr HMAJ ஹலஹகோன் (உறுதிப்படுத்தப்படாத விரிவுரையாளர்) மற்றும் திரு HKA தர்மசிரி (தகுதிகாண் விரிவுரையாளர்) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்.*
- *இணை சுகாதார விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த டாக்டர். ஆர் விஜிதா அவர்கள் சர்வதேச மருத்துவ பௌதீகவியல் அமைப்பின் தொழில்முறை உறவுகள் குழுவின் (IOMP) (2022-2025) உறுப்பினராகவும் மருத்துவ பௌதீகவியல் மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சிக்கான தெற்காசிய மையத்தின் (SCMPCR)*

செய்திமடலின் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் மற்றும் சுகாதார அமைச்சின் கதிரியக்கவியல் கல்லூரியின் கதிரியக்கவியல் பயிற்சி திட்டத்திற்கான வெளிப்புற வள நபராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

- புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் (NATA) "புகையிலை மற்றும் மதுவை நிறுத்துதலும் தடுத்தலும்" என்ற உபகுழுவின் உறுப்பினராக இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் டாக்டர் HMP ஹேரத் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.
- கணினி பீடத்தின் டாக்டர் (செல்வி) என் வேதசிங்க அவர்கள் ஆசிய பசுபிக் பிராந்திய இணைய ஆளுகை மன்றத்தின் இணை அழைப்பாளராக ஆனார். மேலும் அவர்கள் 2022 ஆம் ஆண்டின் ஆசிய பசிபிக் பிராந்திய இணைய ஆளுமை மன்றம்– சிங்கப்பூர் இற்கான தேசிய பிரதிநிதி பேச்சாளராகவும் IEEE-Industry Application Society இன் இலங்கை பிரிவின் துணைத் தலைவராகவும் இணைய சமூக அமைப்பின் இலங்கை பிரிவின் தலைமை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார்கள். இலங்கை கணினி சங்கத்தின் ICT SIG இன் பெண்கள் தலைவியாகவும் .LK Domain Registry யின் 2022 இற்கான Best Web.lk விருதின் நீதிபதிக் குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 2022 ஆண்டுக்கான தேசிய தகவல் தொழில்நுட்ப மாநாட்டின் தேசிய விருதுகள் 2022 க்கான நீதிபதி குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்கள் Smart Computing and Systems Engineering (SCSE 2022) பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டிற்கான தொழில்நுட்ப திட்டக் குழுவின் உறுப்பினரும் செயற்கை நுண்ணறிவுக்கான இலங்கை சங்கத்தின் செயலாளரும் செயற்கை நுண்ணறிவு பற்றிய சர்வதேச மாநாட்டுக்கான மாநாட்டு செயலாளரும் அவார்கள். மற்றும் ஆசிய பசுபிக் பிராந்திய IGF-2022 இல் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்த .lk National Domain Registry இலிருந்து பயண உதவித்தொகை இவருக்கு வழங்கப்பட்டது.
- தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதியான Dr KMGP பிரேமதாச அவர்கள் 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் (SLAAS)- பிரிவு D இன் வாழ்க்கை மற்றும் புவி விஞ்ஞானத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- குற்றவியல் நீதி பீட பீடாதிபதியான பேராசிரியர் MADSJS நிரியெல்ல அவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிறுவன/திட்ட மறுஆய்வுக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் இவர் இலங்கை நீதியமைச்சின் ONUR ஆல் வெளியிடப்பட்ட நல்லிணக்கத்திற்கான முதலாவது வருடாந்த சர்வதேச மாநாடு தொகுதி I வெளியீடு I இன் தலைமை ஆசிரியரும் இந்தோனேசியாவின் Asian Institute of Research Headquarters நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சட்டம் மற்றும் மனிதாபிமான காலாண்டு மதிப்பாய்வின் ஆசிரியர் குழுவின் உறுப்பினரும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான மற்றும் மனிதநேய பீடத்தின் சட்ட கற்கைகள் திணைக்களத்தின் சட்ட இளமாணிக்கான பாடத்திட்டம் தயாரித்தல் மற்றும் திருத்தலுக்கான இணை ஆலோசனைக் குழுவின் சிரேஷ்ட உறுப்பினரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட தரக் காப்பீட்டு சபையின் உறுப்பினரும் (வெளிப்புற மதிப்பாய்வாளராக), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட சமூக நல்லிணக்க நிலைக்குழுவின் உறுப்பினரும் 2022 ஆம் ஆண்டின் ஆசிய குற்றவியல் சங்கத்தின் பட்டதாரி கற்கைகளின் சிறந்த ஆய்வுத்தாள் விருதுக் குழுவின் (Best Paper Award Committee) தலைவரும் மற்றும் இந்தோனேசியா மற்றும் வியட்நாமின் ஜெம்பர் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் Lentera Hukum எனப்படும் சக மதிப்பாய்வு பத்திரிக்கை ஆசிரியர் குழுவின் உறுப்பினரும் ஆவார்.
- சர்வதேச நூலக சங்கங்களின் கூட்டமைப்பின் 'திறந்த அணுகல்' தொடர்பான செயற்குழுவில் நூலகர் கலாநிதி டபிள்யூ. செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

2.5. உடற்கல்வி

பயிற்சி அதிகாரி, காவல்துறை மாணவர் அதிகாரிகள் மற்றும் தினவருகை மாணவர்களிடையே தோழமை மற்றும் தலைமைத்துவத்தை வளர்ப்பதற்காக பல்கலைக்கழகம் உடற்கல்வியை நடத்துகிறது மற்றும் தடகளம், கிரிக்கெட், கரப்பந்து, வலைப்பந்து, கூடைப்பந்து, டேபிள் டென்னிஸ், ஸ்குவாஷ், பூப்பந்து, ரோயிங், கால்பந்து, பேஸ்பால், ஹேண்ட்பால், பளு தூக்குதல், ஹாக்கி, டென்னிஸ், கராத்தே, நீச்சல், குத்துச்சண்டை, ரக்பி, Air rifles மற்றும் செஸ் போன்ற பல உள்ளக மற்றும் வெளிப்புற விளையாட்டுகளை வழங்குகிறது. மேலும், விளையாட்டில் ஈடுபடுவதற்குத் தேவையான பெரும்பாலான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. டென்னிஸ் மைதானங்கள், கூடைப்பந்து மைதானங்கள், கிரிக்கெட் மைதானங்கள், ஹொக்கி மற்றும் ரக்பி மைதானங்கள், கால்பந்து மைதானங்கள், பூப்பந்து மைதானங்கள், கரப்பந்து மைதானங்கள், வலைப்பந்து மைதானங்கள், நீச்சல் குளங்கள், கிரிக்கெட் தரைகள், ஸ்குவாஷ் மைதானங்கள் மற்றும் பளு தூக்குதல் உபகரண மற்றும் இயந்திர வசதியுடன் கூடிய ஜிம்னாசியம் ஆகியவை அவற்றுள் அடங்கும். ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமானது தற்காப்புக் கலைகளில் பயிற்சியையும் வழங்குகிறது. மற்றும் பீடங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நன்கு சித்தப்படுத்தப்பட்ட குழுவைக் கொண்டுள்ளது. மேலும் பீடங்களுக்கு இடையே நல்லுறவை வளர்ப்பதற்காக இளங்கலைப் பட்டதாரிகளுக்கிடையேயான போட்டிகளையும் ஏற்பாடு செய்கிறது.

பல்கலைக்கழக மாணவர்களின் உடல் மற்றும் உள நிலையை உயர்த்துவதற்காக உடற்கல்வி, விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை நடத்துவதற்கு விளையாட்டுப் பிரிவு பொறுப்பாக உள்ளது. விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களின் உடல் மற்றும் உள நிலையை மேம்படுத்துவதற்காக ஆசிரியர்களுக்கிடையேயான விளையாட்டு போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. The Leader's Trophy எனப்படுவது ஒரு வருடாந்தம் நடாத்தப்படும் நிகழ்வாகும் மற்றும் இது அனைத்து அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கேற்புடன் நடத்தப்படுகிறது. பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முதன்மையான போட்டிகளில் இதுவும் ஒன்றாகும்.

உடற்கல்வி தொடர்பான செயற்பாடுகளை மேலும் வலுப்படுத்த உடற்கல்வி பணிப்பாளர் உள்ளிட்ட நிரந்தர பணியாளர் பதவிகளுடன் உடற்கல்விக்கான தனிப் பிரிவை உருவாக்க முகாமைத்துவ சேவைகள் துறையின் ஒப்புதல் காத்திருக்கிறது.

2.5.1 விளையாட்டுகளில் சாதனைகள்

உடல் மற்றும் மன உறுதி, வலிமை மற்றும் சேவை வாழ்க்கையில் திறன் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அனைத்து பயிற்சி அதிகாரிகளும் கடந்த ஆண்டுகளில் நடத்தப்பட்டதை போன்றவாறு விளையாட்டு மற்றும் பயிற்சியில் தொடர்ந்து பங்கேற்க ஊக்குவிக்கப்பட்டனர். பல்கலைக்கழகத்தில் இருக்கும் போது குறைந்தபட்சம் ஒரு குழு விளையாட்டிலாவது பயிற்சி அதிகாரிகள் தீவிரமாக பங்கேற்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது. பயிற்சி அதிகாரிகள் மற்றும் தினவருகை மாணவர்கள் விளையாட்டுகளில் பங்கேற்க ஊக்குவிக்கப்பட்டனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மாணவர்கள் 2022 ஆம் ஆண்டில் பின்வரும் நிலைகளில் விளையாட்டுகளில் சாதனை படைத்துள்ளனர்.

KDU மட்டத்தில் – 262

தேசிய மட்டத்தில் – 121



2.6. கல்வி மற்றும் கல்வி உதவிப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பு

பல்கலைக்கழகத்தின் விரிவாக்கத்தால் உருவாக்கப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் பல்கலைக்கழகம் கீழ்க்கண்டவாறு 37 கல்விசார் மற்றும் கல்வி உதவி ஊழியர்களை நியமிக்க முடிந்தது:

	2022	***2021***
கல்விசார் ஊழியர்கள்	*30*	*81*
கல்வி உதவி ஊழியர்கள்	*07*	*48*
மொத்தம்	***37***	***129***

நிரந்தர ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக 2021 ஆம் ஆண்டை விட 2022 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கல்விசார் மற்றும் கல்வி உதவிப் ஊழியர்களின் எண்ணிக்கையில் விரைவான சரிவு ஏற்பட்டுள்ளது.

2.7. பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) திட்டங்கள்

- *சுற்றுச்சூழல் உதவி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையமானது (KDU - EARTH) 2021 இல் நடப்பட்ட 'எஹெல' மரங்களை அப்புறப்படுத்துவதற்கும் பாதுகாப்புப் பகுதிகளை வைப்பதற்கும் 03.06.2022 அன்று சிரமதானம் ஒன்றை ஏற்பாடு செய்தது.*
- *உலக கதிரியக்கவியல் தினம்– 2022 ஐக் கொண்டாடும் வகையில் இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் Intake 36 மாணவர்களால் CSR திட்டம் நடத்தப்பட்டதோடு பொலன்னறுவை, வெலிகந்த, அசெலபுர, மகிந்தகம ஆகிய கிராமங்களுக்கு நீர் வடிப்பானை நன்கொடையாக வழங்கியது.*

- *Wings lanka அறக்கட்டளையால் ஆரம்பிக்கப்பட்ட "துரு மிதுரு" திட்டம், இரத்மலானையிலுள்ள "சஹஜா பாடசாலை"யிலிருந்து விசேட தேவையுடைய மாணவர்களுக்கான ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டத்தை "எதிர்பார்ப்புகளுக்கு அனுமதி" எனும் தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்தது. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் Rotaract Club, Lions Club of Colombo Royalty மற்றும் சமூக அறிவியல் திணைக்களம் மற்றும் அதன் இளங்கலைப் பட்டதாரிகள் மற்றும் கல்விசார் ஊழியர்கள் குழு இணைந்து இந்த திட்டத்தை ஒழுங்கமைத்து செயற்படுத்த உதவியது.*
- *Intake 38 IT/IS தொகுதியைச் சேர்ந்த பதினாறு (16) மாணவர்கள் 2022 அக்டோபர் 31 ஆம் திகதி சூரியவெவ பண்டாரநாயக்க மேல்நிலைப் பள்ளிக்கு ஆங்கில முகாம் ஒன்றை நடாத்தச் சென்றனர். இன்றைய உலகில் ஆங்கிலம் கற்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கத்தில் இந்த CSR திட்டம் தொடங்கப்பட்டது. இந்த ஒரு நாள் நிகழ்ச்சித் திட்டமானது தரம் 6 இல் கல்வி கற்கும் 120 மாணவர்களுக்கான கல்வி அமர்வுகளுடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது. மற்றும் அமர்வின் கடைசிப் நிகழ்வாக மாணவர்களுக்கு எழுதுபொருள் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.*
- *மியூசியஸ் கல்லூரி மாணவர்களுக்காக கணினி பீடத்தின் கணினி பொறியியல் துறை ஊழியர்களால் ஒரு CSR திட்டமானது (Arduino Course) நடத்தப்பட்டது.*
- *தொழில்நுட்ப பீடத்தின் TechnoWiz Club இனால் நடாத்தப்பட்ட CSR செயற்பாட்டின் ஒரு பகுதியாக 15 அக்டோபர் 2022 அன்று கல்கிசை கடற்கரையில் கடற்கரையை சுத்தம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது. Intake 39 இன் இளங்கலை மாணவர்களால் இந்த நிகழ்வு திட்டமிடப்பட்டது.*
- *தொழில்நுட்ப பீடத்தின் TechnoWiz club 2022 நவம்பர் 01 அன்று மஹரகம அபேக்ஷா மருத்துவமனை வளாகத்தில் மருத்துவமனையிலுள்ள குழந்தைகளுக்காக மருந்துகள், தேவையான உபகரணங்கள் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை நன்கொடையாக வழங்கியது. இந்த சமூக சேவையின் நோக்கம் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது அவசர மருத்துவ தேவைப்படும் பல குழந்தை நோயாளிகளுக்கு மருந்து மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை நன்கொடையாக வழங்குவதாகும்.*
- *பின்தங்கிய பாடசாலைகளில் க.பொ.த (உ/த) தொழிநுட்பப் பிரிவு மாணவர்களை வலுவூட்டுவதற்காக களுத்துறை கடுகுருந்த தர்மபால வித்தியாலயம் மற்றும் வெள்ளவத்தை புனித கிளேர்ஸ் பாலிகா மகா வித்தியாலயத்திற்கு தொழிநுட்ப பீடம் பாடப்புத்தகங்களை வழங்கியது. புத்தக நன்கொடை முயற்சியின் நோக்கமானது பள்ளி மாணவர்களிடையே தொழில்நுட்பக் கல்வியை பிரபலப்படுத்துவதும் அதே சமயம் குறைவான வளங்களைக் கொண்ட பள்ளிகளுக்கு ஆதரவளிப்பதும் ஆகும்.*
- *இலங்கை கட்டிடக்கலை நிறுவகத்தின் வருடாந்த ஜம்போரி டிசம்பர் மாதத்தில் தெற்கு வளாகத்தில் நடத்தப்பட்டது மற்றும் இது அருகிலுள்ள பள்ளிகள் மற்றும் சமூகத்தின் நலனுக்காக பங்களிப்புச்செய்தது.*
- *"சுரத சாவிய அறக்கட்டளையின்" வென் பெலிகல்லே தம்மகித்தி தேரரின் ஒருங்கிணைப்புடன் நுகேகலயாய ஆரம்பப் பள்ளியின் பள்ளி மாணவர்களுக்கான புத்தகங்கள் மற்றும் எழுதுபொருள் நன்கொடை நிகழ்வை 2022 மே 17 அன்று தெற்கு வளாகம் ஏற்பாடு செய்தது.*
- *KDU தெற்கு வளாகத்தின் இரத்த தான முகாம் 24 ஆகஸ்ட் 2022 அன்று கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள், ராணுவ வீரர்கள் மற்றும் மாணவர்களின் பங்கேற்புடன் முதல் முறையாக தெற்கு வளாகத்தில் நடைபெற்றது. அம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கி இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு ஆதரவளித்துள்ளதுடன் 150 இற்கும் மேற்பட்ட*

நன்கொடையாளர்கள் தமது நன்கொடைகளை வழங்கியுள்ளனர். KDU தெற்கு வளாகத்தின் Rotaract club இந்த இரத்த தான முகாமை வெற்றியடையச் செய்வதில் பெரும் அளவில் உதவியிருக்கிறது.

- வளாகத்தில் உள்ள நாய்களுக்கான இரண்டு தடுப்பூசி நிகழ்ச்சிகள் 12 அக்டோபர் 2022 மற்றும் 02 நவம்பர் 2022 ஆகிய திகதிகளில் நடைபெற்றன.
- 15 டிசம்பர் 2022 அன்று வளாகத்தின் இராணுவ ஊழியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கிரிப்பன்வெவ பள்ளியின் குழந்தைகளுக்கு 500 க்கும் மேற்பட்ட நூல்களை வழங்கினர்.



2.8. உலகளாவிய தரவரிசை

2022 ஆம் ஆண்டில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமானது தனது வரலாற்றில் முதன்முறையாக The Times Higher Education Impact தரவரிசை அட்டவணையில் கல்வித் தரத்திற்காக இலங்கையில் 2வது இடத்தைப் பிடித்தது. சமத்துவமின்மையைக் குறைப்பதில் KDU நாட்டிலேயே முதலிடத்திலும் உலகளவில் 200+ இடத்திலும் உள்ளது. ஒட்டுமொத்த நாட்டின் தரவரிசையில் KDU நாட்டிலேயே 4வது இடத்தையும் உலக அளவில் 801 - 1000 இடங்களைப் பெற்றுள்ளது. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமானது முதன்முதலில் 2022 ஆம் ஆண்டில் தாக்க தரவரிசை அட்டவணையில் நுழைந்தது. மேலும் அதன் குறிப்பிடத்தக்க வெற்றியானது சர்வதேச தரத்தை அடைவதற்காக இலங்கையில் உயர்தர உயர் கல்வியை வழங்கும் பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.










ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடமானது இலங்கையில் 2 வது இடத்திலும், ஆசியாவில் 25 வது இடத்திலும், உலகில் 83 வது இடத்திலும் ஐக்கிய அமெரிக்க இல்லினாய்ஸை அடிப்படையாகக் கொண்ட 'NICA' அணி சட்டப் பள்ளிகள் தரவரிசை 2022 இன் கீழ் இடம் பெற்றுள்ளது.

NICA
LS RANKING

2.8.1. வெபோமெட்ரிக் தரவரிசை

2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களின் வெபோமெட்ரிக் தரவரிசையில் அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையில் KDU தனது 14வது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.



2.9. தர உத்தரவாதம்

தர உத்தரவாத நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் ஏற்கனவே உள்ள உட்தர உறுதிப் பிரிவை (IQAU) மாற்றியமைத்து 2019 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் தர உத்தரவாதத்திற்கான மையத்தை (CQA) நிறுவியது. CQA ஒரு பணிப்பாளர் தலைமையில் உள்ளது. பல்கலைக்கழகம் அனைத்து பீடங்களிலும் நூலகத்திலும் செயற்பாட்டு உட்தர உறுதிப் பிரிவுகளை (IQACs) நிறுவியுள்ளது. ஒவ்வொரு IQACக்கான குறிப்பு விதிமுறைகள் பீடக்குழுக்களினால் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. செனட்டின் பரிந்துரையின் பேரில் நிர்வாகக் குழுவின் ஒப்புதலுடன் துணைவேந்தர் தலைமையில் தர உத்தரவாதத்திற்கான செனட் நிலைக்குழு (SSCQA-KDU) நிறுவப்பட்டது மற்றும் ஒவ்வொரு 2-3 மாதங்களுக்கும் வழக்கமான கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அங்கு கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு QA விடயங்கள் கண்காணிக்கப்படும். CQA இன் பணிப்பாளரும் UGC தரக் காப்பீட்டு நிலைக் குழுவில் பார்வையாளராக கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்.

ஒரு தரமான கலாச்சாரத்தை முழுமையாக ஒருங்கிணைத்து, தர உத்தரவாதத்தை செயற்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை அங்கீகரித்து ஊழியர் மேம்பாடு மற்றும் திறன் மேம்பாட்டுக்கு 2022 இல் பல பயிற்சி நிகழ்ச்சிகள்/பயிலரங்குகள் நடத்தப்பட்டன.

2.9.1 புதிய பட்டப்படிப்புகள் மற்றும் பாடத்திட்டங்களின் திருத்தம் தொடர்பாக செனட் பரிந்துரைகள் மற்றும் முகாமைத்துவ சபை வழங்கிய ஒப்புதல்

பல்கலைக்கழகத்தின் பீடங்கள், தொழிற்துறை மற்றும் சர்வதேச தரங்களுடன் தரப்படுத்துவதன் மூலம் பட்டப்படிப்புத் திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காகத் தங்கள் பாடத்திட்டங்களைத் திருத்துவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன. இதன் விளைவாக மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் பின்வரும் புதிய மற்றும் திருத்தப்பட்ட பட்டப்படிப்புகள் தீர்மானிக்கப்பட்டு, ஆசிரிய பாடத்திட்ட மேம்பாட்டுக் குழுக்கள், தொழில் வல்லுநர்கள், ஆசிரிய சபைகள், தர உறுதி மையம், செனட் மற்றும் முகாமைத்துவ சபை ஆகியவற்றிலிருந்து தேவையான பரிந்துரைகள்/அனுமதிகள் பெறப்பட்டன.

தொ.இல	பீடம்/நிறுவனம்	கற்கை	செனட் பரிந்துரை திகதி	முகாமைத்துவ வாரியத்தின் ஒப்புதல் தேதி
01	*பட்டதாரி கற்கைகள் பீடம்*	*உத்திசார் கற்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் துறையில் முன்மொழியப்பட்ட MSc க்கான துணைச் சட்டங்கள் மற்றும் பாடத்திட்டம்*	*09 பெப்ரவரி 2022*	*05 மே 2022*
		MPhil மற்றும் PhD பட்டப்படிப்புகளுக்கான திருத்தப்பட்ட துணைச் சட்டங்கள்	*09 பெப்ரவரி 2022*	*28 மார்ச் 2022*
02	*பொறியியல் பீடம்*	*சிறிய திருத்தங்களுக்கான ஒப்புதல். (கடற்படை கட்டிடக்கலை மற்றும் கடல்சார் பொறியியலில் பொறியியல் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டப்படிப்பு திட்டத்தில்) 2, 6, மற்றும் 7 செமஸ்டர்களில் நடத்தப்பட்ட 04 தொகுதிகளின் தொகுதி பெயர்களில் மாற்றம் மற்றும் திருத்தம் செய்வதற்கான ஒப்புதல்*	*11 ஒக்டோபர் 2022*	-

		நிலவும் தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக Intake 38 க்கு ஒரு தொகுதியை செமஸ்டர் 01 இலிருந்து செமஸ்டர் 02 க்கு மாற்றுவதற்கான சிறிய மாற்றங்களுக்கான ஒப்புதல். அனைத்து பொறியியல் விஞ்ஞான இளமாணி சிறப்பு பட்டப்படிப்புகளின் செமஸ்டர் 01 இல் தொகுதிகளை வைப்பது மற்றும் தொடரும் செமஸ்டருக்கு வழங்கப்படும் ஒரு தொகுதியை மதிப்பிடுவதற்கான. ஒப்புதல்	12 ஜூலை 2022	-
		இயந்திரவியல் பொறியியல் பட்டப்படிப்பில் பொறியியல் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) இல் தேவையான Credit சுமையை குறைக்காமல் DICB, CDC மற்றும் ஆசிரியர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் GPA (02 Credit) தொகுதியை NGPA (02 Credit) ஆக மாற்றுவதற்கான ஒப்புதல்.	12 ஜூலை 2022	-
03	இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்	அடிப்படை விஞ்ஞான திணைக்களம் வழங்கும் தொகுதிக்கூறுகளுக்கு மட்டும் தொகுதிக் குறியீடுகளை (எழுத்துக்கள் மட்டும்) BS ஆக மாற்றுவதற்கான ஒப்புதல்.	5 டிசம்பர் 2022	-
		சத்திரசிகிச்சை மண்டப தொழில்நுட்பத்தில் உயர் டிப்ளமோ அனுமதி.	09 ஆகஸ்ட் 2022	26 செப்டம்பர் 2022
04	கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம்	தொழில்துறை மற்றும் சேவை தர முகமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி சிறப்பு (BSc (Hons))	12 ஜூலை 2022	25 ஜூலை 2022
05	கணினி பீடம்	தரவு விஞ்ஞானம் மற்றும் வணிகப் பகுப்பாய்வுகளில் BSc (Hons). தொகுதிப் பெயர்கள் (01 தொகுதி), மற்றும் குறியீடுகள் (04 தொகுதிகள்) ஆகியவற்றுக்கான திருத்தங்களுக்கும் CASக்கு % ஐ 10% ஆல் (4 தொகுதிகள்) அதிகரிக்கவும் 02, 03, 04, 05 மற்றும் 07 ஆகிய செமஸ்டர்களில் 01 தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியை அறிமுகப்படுத்தவும் ஒப்புதல் அளித்தல்	15 நவம்பர் 2022	-
06	தொழிநுட்ப பீடம்	**Intake 40 மாணவர்களுக்காக நடத்தப்பட்ட முன் கல்விக்கு ஆயத்த கணித நிகழ்ச்சித் திட்டத்தின் பாடத்திட்டத்திற்கான ஒப்புதல்.**	11 ஒக்டோபர் 2022	-

2.9.2. பீடங்களால் நடாத்தப்படும் தர உறுதிப்படுத்தல் நடவடிக்கைகள்

பீடம்	செயற்பாடுகள்	திகதி
பட்டதாரி கற்கைகள்	பட்டதாரி கற்கைகள் பீடத்தின் உள் தர உத்தரவாதக் பிரிவை நிறுவுதல்.	11.01.2022
	பட்டதாரி கற்கைகள் பீடத்தின் உள் தர உத்தரவாதக் பிரிவின் குறிப்பு விதிமுறைகளுக்கு (TOR) சென்ட் ஒப்புதல் கிடைத்தது.	06.04.2022
பொறியியல்	BSc Engineering (Hons) in Mechanical Engineering மற்றும் BSc Engineering (Hons) in Mechatronics Engineering ஆகிய இரண்டிற்கும் இயந்திரவியல் திணைக்களத்தின் திணைக்கள தொழில்துறை ஆலோசனைக் குழு கூட்டம் நடத்தப்பட்டது.	07.09.2022
	BSc Engineering (Hons) in Marine Engineering மற்றும் BSc Engineering (Hons) in Naval Architecture and Marine Engineering ஆகிய இரண்டிற்கும் கடல்சார் பொறியியல் திணைக்களத்தின் திணைக்கள தொழில்துறை ஆலோசனைக் குழு கூட்டம் நடத்தப்பட்டது.	31.03.2022
	வானூர்தியியல் பொறியியல் திணைக்களத்தின் திணைக்கள தொழில்துறை ஆலோசனைக் குழு கூட்டம் (DICB) நடத்தப்பட்டது	20.10.2022
	வானூர்தியியல் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு பட்டப்படிப்புக்காக சுய மதிப்பீட்டு அறிக்கை (SER) நிரல் மதிப்பாய்வு (PR) எழுதுவது குறித்த பயிற்சிப்பயிற்சிநெறி நடத்தப்பட்டது	24.11.2022
முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதநேய பீடம்	பாடநெறி விவரக்குறிப்புகளுக்கான Template (விரிவான பாட விபரம்) மற்றும் பட்டதாரி பண்புகளுடன் பொருந்திய பாடநெறிகளை (ILO) உருவாக்கியது.	06.01.2022 & 09.02.2022
	பாடத் தொகுதிகளின் பாட விவரக்குறிப்புகளை உருவாக்குவது குறித்து இரண்டு (02) பயிற்சிப்பயிற்சிநெறிகளை நடத்தியது.	14.03.2022 & 15.03.2022
இணைந்த சுகாதார விஞ்ஞானம்	வினாத்தாள் அமைத்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல், சக கண்காணிப்புக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் மாணவர்களின் கருத்துக்களுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் உள்ளிட்ட தேர்வு நடைமுறைகளுக்கான நிலையான செயற்பாட்டு நடைமுறைகளை உருவாக்கியது.	பெப்ரவரி, மார்ச் மற்றும் ஒக்டோபர் 2022
கணினி	தகவல்கள் விஞ்ஞானம் மற்றும் வணிக பகுப்பாய்வில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டப்படிப்பிற்கான கணக்கீட்டு கணிதத் திணைக்களத்தின் திணைக்களத் தொழில்துறை ஆலோசனைக் குழு கூட்டம் நடத்தப்பட்டது.	03.08.2022
	தகவல் தொழிநுட்பத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) மற்றும் தகவல் முறைமைகளில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) ஆகிய பட்டப்படிப்பு திட்டங்களுக்கான கணினி விஞ்ஞான மற்றும் தகவல் தொழிநுட்ப திணைக்களத்தின் திணைக்கள தொழில்துறை ஆலோசனைக் குழு கூட்டம் (DICB) நடத்தப்பட்டது.	23.11.2022
	கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு), கணினி பொறியியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு), மென்பொருள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) ஆகிய பட்டப்படிப்பு திட்டங்களுக்கான கணினி விஞ்ஞான மற்றும் கணினி பொறியியல்	20.10.2022

	திணைக்களத்தின் திணைக்கள தொழில்துறை ஆலோசனைக் குழு கூட்டம் (DICB) நடத்தப்பட்டது	
	தகவல் தொழில்நுட்பத் துறையின் வெளிப்புற ஆய்வுத் திட்டத்தை நடத்தியது.	04.11.2022 மற்றும் 16.11.2022
	கணினி பீடத்திற்கான திருப்திக் கணக்கெடுப்பு மற்றும் வேலை வாய்ப்பு கணக்கெடுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.	03.10.2022
தொழிநுட்பம்	கட்டுமான தொழில்நுட்பத்தில் பொறியியல் தொழிநுட்ப இளமாணி (சிறப்பு), கட்டிட சேவைகள் தொழில்நுட்பத்தில் பொறியியல் தொழிநுட்ப இளமாணி (சிறப்பு) மற்றும் உயிர்மருத்துவ கருவியாக்க தொழினுட்பவியல் பொறியியல் தொழிநுட்ப இளமாணி ((சிறப்பு) ஆகிய பட்டப்படிப்பு திட்டங்களுக்கான திணைக்கள தொழில்முறை ஆலோசை குழு (DICB)	ஜூலை 2022
குற்றவியல் நீதி	குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதிக்கான முதுமாணி பட்டப்படிப்பிற்கான பாடத்திட்டத்தை உருவாக்கியது.	டிசம்பர் 2022

2.10. ஆராய்ச்சி நடவடிக்கைகள்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஒரு சாதகமான ஆராய்ச்சி கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் கணிசமான முக்கியத்துவத்தை வைத்துள்ளது. ஆராய்ச்சி கலாச்சாரத்தை வலுப்படுத்துவதற்காக இலங்கையில் முதன்முறையாக கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான பீடாதிபதியை நியமித்துள்ளது. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஆராய்ச்சியை மேம்படுத்த பல நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது, அதே நேரத்தில் அந்த கண்டுபிடிப்புகளில் சிலவற்றை *Combinatorial Advanced Research & Education (KDU-CARE)* என்ற தனி நிறுவனம் மூலம் வணிகமயமாக்குகிறது.

2.10.1. ஊழியர்களுக்கு ஒரு வருடத்தில் செலுத்தப்பட்ட ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் ஆராய்ச்சி கொடுப்பனவுகள்

2022 இல் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ரூ.117.58 மில்லியன் ஆராய்ச்சி கொடுப்பனவுகளாகவும் ரூ. 30.15 மில்லியன்கள் ஆராய்ச்சி மானியங்களாகவும், ஆராய்ச்சி மாநாட்டில் பங்கேற்பதற்கான செலவுகள் மற்றும் கல்விசார் ஊழியர்களின் உயர் தாக்க ஆராய்ச்சிப் பத்திரிகைகளின் வெளியிடும் கட்டணங்கள் ஆகியவற்றிற்காக வழங்கியது. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமானது 2021 இல் ரூ. 64 மில்லியன் ஆராய்ச்சி கொடுப்பனவுகளாக மற்றும் ரூ. 39.5 மில்லியன் ஆராய்ச்சி மானியமாக வழங்கியது.

2.10.2. ஒரு வருடத்தில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களின் மொத்த வெளியீடு

பீடம்	வெளியீடுகளின் வகை			
	குறியீட்டு பத்திரிக்கை (Index Journals)	குறியீட்டு அல்லாத பத்திரிக்கை (Non Index Journals)	மாநாட்டு முழு ஆவணங்கள் (Conference Full Papers)	மாநாட்டு சுருக்கங்கள் (Conference Abstracts)
பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடம்	2	1	-	27

மருத்துவ பீடம்	26	5	-	26
பொறியியல் பீடம்	23	1	18	-
முகாமைத்துவம், சமூக விஞ்ஞான மனிதநேய பீடம்	5	-	12	-
சட்ட பீடம்	1	1	16	-
கணினி பீடம்	2	-	75	-
இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்	27	4	-	45
கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம்	1	-	25	-
குற்றவியல் நீதி பீடம்	-	-	7	-
தொழிநுட்ப பீடம்	3	-	4	-
KDU-CARE	8	-	-	13
நூலகம்	-	-	-	3
ஊழியர்கள் மேம்பாட்டு மையம் (SDC)	3	-	-	-

2.10.3. கடந்த 5 ஆண்டுகளில் (2018 - 2022) வெளியீடு

	2018	2019	2020	2021	2022
பத்திரிக்கை கட்டுரை (Journal Article)	66	35	64	121	112
மாநாட்டின் முழு ஆவணங்கள் (Conference Proceeding Full Papers)	26	20	152	229	156
மாநாட்டு செயல்முறை சுருக்கங்கள் (Conference Proceeding Abstracts)	164	173	77	171	114

2.11. காப்புரிமைகள், பிற கண்டுபிடிப்புகள் மற்றும் மாணவர்களின் சாதனைகள்

- அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் இளங்கலை பட்டதாரிகளுக்கான UGRAD நிகழ்சிக்காக பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடத்தின் மாணவி தேஷானி சமரசிங்க பங்கேற்றார்.
- Intake 38 இயந்திரவியல் பொறியியல் மாணவர்களைக் கொண்ட குழு; (டி.வி.லோகுராணமுக, எல்.எல்.டி. பெரேரா, ஐ.ஆர்.ஜி. விஜேரத்ன, ஜி.ஆர்.ஏ. சேனாரத்ன, மற்றும் ஓ.பி.எச்.தந்திரீகே) 'KDU-Team C' என்ற பெயரில் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (SLIIT) நடைபெற்ற மின் மற்றும் மின்னணு திணைக்களத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் ROBOFEST 2022 எனும் இயந்திரவியல் போட்டியில் போட்டியிட்டது. அங்கு அவர்கள் சிறந்த செயற்திறன் கொண்ட அணியாக உருவெடுத்தனர். அவர்களுக்கு பல்கலைக்கழக பிரிவின் கீழ் ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது.

- *Intake 37 உயிர்மருத்துவ பொறியியல் மாணவர்கள் 19 பிப்ரவரி 2022 அன்று நடைபெற்ற, Engineering in Medicine and Biology (EMBC) மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய Brainstorm -2021 போட்டியில் 1வது இடம், 2வது இடம் மற்றும் மிகவும் நிலையான விருது ஆகியவற்றை வென்றனர்.*
- *கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் LLB பட்டதாரி திருமதி கிம்ஹானி ஹிருணிகா பெரேரா (Intake 34) 2021 இல் இலங்கை சட்டக் கல்லூரியில் நடைபெற்ற இறுதியாண்டு பரீட்சையில் மொத்தத் தொகுப்பிலும் முதலாம் வகுப்புத் தேர்ச்சியை பெற்றுள்ளார்.*
- *கணினி பீடத்தின் (Intake 37) பயிற்சி அதிகாரியான இ.எம்.என்.எம்.ஆர் எதிரிசிங்க (5964) சஹாசக் நிமாவும் 2022 இனுடைய பல்கலைக்கழக மற்றும் மூன்றாம் நிலை நிறுவனப் பிரிவின் கீழ் தங்கப் பதக்கத்தை வென்றார்.*

2.12. ஊழியர் மேம்பாடு

பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான ஊழியர் பயிற்சி திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதற்கு ஊழியர் மேம்பாட்டு மையத்திற்கு (SDC) ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலதிகமாக, தர உத்தரவாத மையம் மற்றும் KDU Helpline ஆகியவை ஊழியர் பயிற்சி நடவடிக்கைகளில் உதவுகின்றன.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் ஊழியர் மேம்பாட்டு மையம் 2022 ஆம் ஆண்டில் பின்வரும் பயிற்சிநெறிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தியது:

பயிற்சிநெறியின் தலைப்பு	***நேர அட்டவணை***	***கால அளவு (மணி)***
கல்விசார் ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்சிகள்		
நோக்குநிலை நிகழ்ச்சி	*Started on – 10th of Jan 2022* *Finished on – 14th of Jan 2022*	*16*
உயர்கல்வி திட்டத்தில் (CTHE) கற்பித்தல் சான்றிதழின் ஒன்பதாவது தொகுதியை வெற்றிகரமாக முடித்தல்	*Started on – 24th of Feb 2022* *Finished on – 24th of Nov 2022*	*150*
கல்விசார் ஊழியர்களுக்கான வேறு பயிற்சிநெறிகள்		
பொது CC	*25/01/2022*	*2*
சக கவனிப்பு	*03/02/2022*	*2*
Predatory Journal	*17/02/2022*	*2*
Interactive Board	*07/03/2022*	*4*
Dissection of your PhD	*10/03/2022*	*2*
அறிவுசார் சொத்து	*14/03/2022*	*2*
வலைப்பதிவை எவ்வாறு உருவாக்குவது	*28/03/2022*	*3*
Latex	*04/04/2022*	*3*
சீன மொழிக்கான அறிமுகம்	*05/05/2022*	*2*
பயனுள்ள கற்பித்தல் உத்திகள்	*09/05/2022*	*2*
நிறுவன மதிப்பாய்வை எவ்வாறு எழுதுவது என்பது குறித்த பயிற்சி பயிற்சிநெறி	*16/06/2022*	*3*
நிறுவன மதிப்பாய்வு	*16/06/2022*	*3*
கல்விசார் வழிகாட்டுதல்	*29/06/2022*	*2*

NVIVO	*04/07/2022*	*2*
வழிகாட்டி-வழிகாட்டப்படுபவர் விழிப்புணர்வு அமர்வு	*17/08/2022*	*2*
சுய மதிப்பீட்டு வரி அறிக்கையை எவ்வாறு நிரப்புவது	*07/09/2022*	*2.5*
வழிகாட்டுதல், பயிற்சியளித்தல் மற்றும் உளவியல் என்றால் என்ன என்பது குறித்த முன் மாநாடு	*27/09/2022*	*2*
வழிகாட்டி--வழிகாட்டப்படுபவர் விழிப்புணர்வு அமர்வு	*19/10/2022*	*2*
Writing an SER for Institutional Review	*20/10/2022*	*3*
வழிகாட்டி--வழிகாட்டப்படுபவர் விழிப்புணர்வு அமர்வு	*28/10/2022*	*2*
வழிகாட்டி--வழிகாட்டப்படுபவர் விழிப்புணர்வு அமர்வு	*04/11/2022*	*2*
வழிகாட்டி--வழிகாட்டப்படுபவர் விழிப்புணர்வு அமர்வு	*09/11/2022*	*2*
நிர்வாக மற்றும் ஊழியர் வகைகள்		
E-Bar examination	*26/01/2022*	*3*
E-Bar examination	*27/01/2022*	*4.5*
செஸ் விளையாடுவது எப்படி	*06/09/2022*	*2*
கற்கை விடுமுறை பத்திரங்களும் ஒப்பந்தமும்	*07/09/2022*	*2*
Microsoft Visio	*04/04/2022*	*3*
கவிசார் உதவி ஊழியர்கள்		
நிபுணத்துவம் மற்றும் பணி நெறிமுறைகள்	*14/07/2022*	*2*
வேலை செயும் இடத்தில் ஈற்படும் மன அழுத்தத்தை எவ்வாறு சமாளிப்பது?	*12/10/2022*	*2.5*
கோப்பு முகாமைத்துவ முறைமை	*18/11/2022*	*2*
நூலகக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் நிர்வாகச் செயல்பாடுகள்	*22/11/2022*	*2*
கல்விசாரா ஊழியர்கள்		
தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான உயிரியல் நம்பகத்தன்மையும் உயிரியல் பாதுகாப்பும்	*20/01/2022*	*2*
ஆடை நெறி	*08/02/2022*	*2*
வாடிக்கையாளர் சேவை	*15/02/2022*	*2*
வீதி பாதுகாப்பு	*02/04/2022*	*3*
Microsoft Office	*18/05/2022*	*2.5*
சிங்கள எழுத்துரு	*19/05/2022*	*3*
நிலப்பரப்பு	*25/05/2022*	*2*
Academic writing for personal	*08/06/2022*	*3*
ஒழுக்காற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும்	*26/05/2022*	*2*
உயிரியல் ஆய்வகத்தில் உபகரணங்கள் முகாமைத்துவமும் கையாளுதலும்	*28/06/2022*	*2.5*

தலைமைத்துவ திறன்	20/09/2022	3
MA பதவியுயர்வு பரீட்சை	21/09/2022	5
நேர முகாமைத்துவம்	27/10/2022	2
மின்சாரம் மற்றும் குழாயமைவு தொழில்நுட்பம்	30/11/2022 & 01/12/2022	3

2.13. உட்கட்டமைப்பு மேம்பாடு

மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில், பல்கலைக்கழகம் இரண்டு (02) கட்டுமான திட்டங்களை முடிக்க முடிந்தது. சட்ட பீடத்தின் கட்டிடம் மற்றும் முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதநேய பீடத்தின் கட்டிடங்கள் கட்டும் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளன. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி வேறு சில கட்டுமானத் திட்டங்களின் குறிப்பிட்ட சதவீதம் தொடங்கப்பட்டது.

தொடர் இல	கட்டுமானம்	முழுமையான செலவு (ரூ)	நிறைவு
01	சட்ட பீட கட்டிடத்தின் கட்டுமானம்	262 மில்லியன்	95%
02	முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதநேய பீடத்தின் கட்டிடத்தின் கட்டுமானம்	263 மில்லியன்	95%
03	சிறிய கேட்போர்கூடத்தை புதுப்பித்தல்	11 மில்லியன்	100%
04	முன்மொழியப்பட்ட பெண் விடுதி - வெரஹெர	176 மில்லியன்	70%
05	கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அச்சகத்தின் இரண்டாம் கட்ட கட்டுமானம்	2 மில்லியன்	100%
06	தலைமையக கட்டிடத்தின் விரிவாக்கம் திட்டம்	65 மில்லியன்	40%



2.14. பேரிடர் முகாமைத்துவ ஆராய்ச்சி மையம் (CDMR) - KDU

ஒரு பணிப்பாளரின் தலைமையில் இயங்கும் பேரிடர் முகாமைத்துவ ஆராய்ச்சி மையத்தினால் 2022 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது.

பேரிடர் முகாமைத்துவ ஆராய்ச்சி மையமானது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் நியூசிலாந்தின் மாஸ்ஸி பல்கலைக்கழகத்தின் பேரிடர் ஆராய்ச்சிக்கான கூட்டு மையம் (JCDR) மற்றும் பொறியியல் பீடம் ஆகியவற்றுடன் இணைந்து "களனி வெள்ள அபாய முகாமைத்துவத்தில் பின்னடைவை ஒருங்கிணைத்தல்" என்ற கருப்பொருளில் முன்மொழியப்பட்ட ஆராய்ச்சித் திட்டத்தை நடத்துவதற்காக 1.85 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக உள்ளக மானியத்தை வென்றது.

மாஸ்ஸி பல்கலைக்கழகம் ஒரு ஏற்பாட்டுக் கூட்டாளியாக இருந்து 2022 நவம்பர் 7-9 வரை நடாத்திய ஆசிய பசிபிக் தகவல் முறைமைகளுக்கான நெருக்கடி மற்றும் முகாமைத்துவம் (ISCRAM) எனப்படும் சர்வதேச மாநாட்டில் பேரிடர் முகாமைத்துவ ஆராய்ச்சி மையத்தினால் இரண்டு (02) பிரசுரங்களையும் (publications) வெளியிட முடிந்தது. ஒரு பிரசுரமானது பேரிடர் முகாமைத்துவ ஆராய்ச்சி மையம் மற்றும் மாஸ்ஸி பல்கலைக்கழகத்தின் பேரிடர் ஆராய்ச்சிக்கான கூட்டு மையத்தினால் கூட்டாக எழுதப்பட்டது, மற்றைய பிரசுரமானது பேரிடர் முகாமைத்துவ ஆராய்ச்சி மையம் மற்றும் பொறியியல் பீடத்தால் எழுதப்பட்டு மாஸ்ஸி பல்கலைக்கழகத்தின் பேரிடர் ஆராய்ச்சிக்கான கூட்டு மையத்தினால் பதிவுக் கட்டணம் வழங்கப்பட்டது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஈடுபட வேண்டிய முக்கியமான ஆராய்ச்சியை அடையாளம் காணவும், பேரிடர் முகாமைத்துவ ஆராய்ச்சி மையத்தின் எதிர்கால ஒத்துழைப்புக்களை திட்டமிடுவதில் அத்தகைய ஆராய்ச்சிகளுடன் தொடர்புடைய தொழிற்துறைகள் ஆற்றக்கூடிய துணைப் பாத்திரங்கள் இன்றியமையாதவை என்பதை அடையாளம் காணவும் பேரிடர் முகாமைத்துவ ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேவைகள் மதிப்பீட்டுப் பட்டறையானது 2022 மே மாதம் 20 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. தேசிய மற்றும் சர்வதேச பேரிடர் முகாமைத்துவத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிகழ்நிலை பயிற்சிப்பட்டறையில் 35 அலுவலகப்பணியாளர்கள் பங்கேற்றனர். அவர்களில் பலர் பேரிடர் முகாமைத்துவ ஆராய்ச்சி மையம் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் ஒத்துழைப்பதில் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தியதோடு வாய்ப்புகளுக்கான பல வழிகளை தெரியப்படுத்தினர்.

2.15. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) சேவைகள்

தகவல் தொழிநுட்ப ஆதரவு மற்றும் மேம்பாட்டுச் சேவைகளுக்கான மையம் (CITS & DS) ஒரு பணிப்பாளரால் தலைமை தாங்கப்பட்டு பின்வரும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகளோடு பல்கலைக்கழகத்திற்கு ஆதரவை வழங்குகிறது:

தொ/இல.	செயற்திட்டம்	நோக்கம் / விளைவு	சம்மந்தப்பட்ட செலவு	தற்போதைய நிலை & எதிர்பார்க்கப்படும் நிறைவு திகதி
முறைமை மேம்பாட்டு செயற்திட்டம்				
01	வெளிநாட்டு மாணவர் சேர்க்கை முறைமை (நேரடி)	மாணவர்களின் தனிப்பட்ட, கல்வித் தகவல்களைச் சேர்த்தல், ஆவணங்களைப் பதிவேற்றல் / புகைப்படத்தைப் பதிவேற்றல்.	உள் மேம்பாடு	நடைபெறுகிறது
02	வெளிநாட்டு மாணவர் சேர்க்கை முறைமை (முகவர்)	முகவர்களை பதிவு செய்யும் வசதி. *KDU* நிர்வாகி மூலம் முகவர் விவரங்களைப் பார்த்தல். தானியங்கி ஒப்புதல் செயல்முறை. மாணவர்களின் தனிப்பட்ட, கல்வித் தகவலைச் சேர்த்தல், ஆவணங்கள் & புகைப்படத்தைப் பதிவேற்றல்.	உள் மேம்பாடு	நடைபெறுகிறது
03	மாணவர் கருத்துக்கணிப்பு முறைமை	கற்பித்தலின் தரம் குறித்து மாணவர்களிடமிருந்து கருத்துக்களை சேகரித்தல்	உள் மேம்பாடு	அபிவிருத்தி நடைபெற்று வருகிறது
04	பரீட்சை முடிவுகள் முகாமைத்துவ முறைமை *(ERMS)*	கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பரீட்சை முடிவுகள் முகாமைத்துவம் மற்றும் பீடங்கள், திணைக்களங்கள் மற்றும் தேர்வு பிரிவுக்கான அறிக்கைகளை உருவாக்குவதற்கு தானியங்கு அமைப்பை வழங்குதல்	உள் மேம்பாடு	பீட்டா சோதனை கட்டத்தில் செயல்படுத்தப் பட்டு நடைபெறுகிறது

05	ஆராய்ச்சி தரவுத்தளம்	முழு ஆராய்ச்சி திட்டத்தின் நிகழ்நேர மேற்பார்வையை வழங்குதல் மற்றும் அறிக்கையிடலை ஒழுங்குபடுத்துதல், பணிப்பாய்வுகளை தானியங்குபடுத்துதல் மற்றும் காகித வடிவங்களை அகற்றுதல்.	உள் மேம்பாடு	நடைபெறுகிறது
06	நூலக கடந்தகால வினாத்தாள் முறைமை	கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நூலகத்தின் கடந்த கால வினாத்தாள் சேகரிப்பு முகாமைத்துவம். கடந்த கால வினாத்தாள்களை பதிவிறக்கம் செய்யகூடியதாக ஆக்குதல்	உள் மேம்பாடு	நடைபெறுகிறது
07	மின் நூலக அமைப்பு / பட்டதாரி கற்கைகள் பீடத்தின் மின் புத்தக முறைமை	மின் புத்தகங்களின் முகாமைத்துவம். மின்புத்தகங்களை பதிவிறக்கம் செய்யக் கூடியதாக ஆக்குதல்.	உள் மேம்பாடு	நடைபெறுகிறது
இணைய அபிவிருத்தி திட்டங்கள்				
08	புதிய இணையதளங்களை உருவாக்குதல்	*16* புதிய இணையதளங்களை உருவாக்கப்பட்டன.(தற்போது *72* இணையதளங்கள் *host* செய்யப்பட்டுள்ளன)	உள் மேம்பாடு	மேம்படுத்தல் நிறைவடைந்தது
09	வழக்கமான இணையதள புதுப்பிப்புகள்/பராமரிப்பு	புதுப்பிக்கப்பட்டன கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முதன்மை இணையதளம் மற்றும் அனைத்து பீடங்கள்/பிரிவு இணையதளங்கள் புதுப்பிக்கப்பட்டன *(72* இணையதளங்கள்*)*	உள் மேம்பாடு	மேம்படுத்தல் நிறைவடைந்தது
10	*SSL* சான்றிதழின் நிறுவல்	*SSL* சான்றிதழ் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இணையதளங்களின் அடையாளத்தை	*LKR 0.1* மில்லியன்	நிறுவல் நிறைவடைந்தது

		அங்கீகரிக்கிறது மற்றும் மறைகுறியாக்கப்பட்ட *(encrypted)* இணைப்பை செயல்படுத்துகிறது.		
11	கல்விப் பணியாளர்களுக்கான தனிப்பட்ட இணையதளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன	*Webometrics* தரவரிசையில் நேர்மறையான தாக்கத்தைப் பெறுவதற்கு	உள் மேம்பாடு	நிறைவடைந்தது
12	கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இன் *Webometrics* தரவரிசைக்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன	*Ahref* மற்றும் *Majestic* ஆதாரக் கருவிகளை கொள்வனவு செய்து, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இணையதளங்களுக்கு எதிரான சிக்கல்களைச் சரிசெய்தது.	*298 USD*	நிறைவடைந்தது
வலைப்பின்னல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள்				
13	புதிய *Fiber line* இணைப்பை நிறுவுதல்	பிரதான வாயில் மற்றும் நுழைவுப் பிரிவுக்கு இணைய இணைப்பை வழங்குவதற்காக புதிய *Fiber line* தலைமையக கட்டிடம் வழியாக அமைக்கப்பட்டது.	*LKR 0.85* மில்லியன்	நிறைவடைந்தது
14	*ZOOM* உரிமங்களை வாங்குதல்.	கல்வி நோக்கங்களுக்காக *134 Zoom* கணக்கு உரிமங்களை வாங்கியுள்ளது	*LKR 5* மில்லியன்	நிறைவடைந்தது
15	தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை சரிசெய்து, வலைப்பின்னல் வசதிகளை வழங்கவும்.	கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மேசை கணினிகள் மற்றும் மடிக்கணினிகள் பழுதுபார்க்கப்பட்டன. *LAN, WI-FI, CCTV* வசதிகள் நிறுவப்பட்டு சேவைகளை வழங்குகின்றன.	பழுது பார்த்தல் மற்றும் நிறுவுதல் செலவுகள் இதில் அடங்கும்	நிறுவல் நிறைவடைந்தது
கற்பித்தல் நடவடிக்கைகள்				
16	தகவல் தொழிநுட்ப சான்றிதழ், தகவல் தொழிநுட்ப டிப்ளமோ படிப்புகளை நடத்துதல்	தகவல் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் - தொகுதி *XXI* மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளமோ - தொகுதி *XX*	*CITS&DS* இல் பயிற்றுவிப்பாளர்களால் நடத்தப்பட்டது	நிறைவடைந்தது

		ஆகியவை நடத்தப்பட்டன.		
17	கற்றல் முகாமைத்துவ முறைமை (LMS) பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி	கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் LMS இன் நிர்வாக பகுதி மற்றும் அதிகாரி தர சோதனைகளை (OQT) கையாளுதல். மாணவர்களின் படிப்புப் விடயங்களோடு LMS புதுப்பிக்கப்பட்டன. LMS பயிற்சிகள் / பயிற்சிப்பயிற்சிநெறிகள் நடத்தப்பட்டன.	பயிற்றுவிப்பாளர்களால் நிர்வகிக்கப்படுகிறது	நிறைவடைந்தது
வேறு மேம்பாடுகள்/திட்டங்கள்				
18	IRC - கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்கு ஊடகம் மற்றும் தகவல் தொழிநுட்ப தளத்தை வழங்குதல்	கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 15வது IRC 2022 க்கான அனைத்து தகவல் தொழிநுட்ப மற்றும் ஊடக உதவியும் கையாளப்பட்டன /வழங்கப்பட்டன	LKR 3. மில்லியன்	நிறைவடைந்தது
19	கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்கான Wi-Fi தீர்வை நிறுவுதல்	ஒப்பந்தக் காலத்தின் காலாவதி மற்றும் தற்போதுள்ள வலைப்பின்னல் உபகரணங்களின் அடிப்படையில் புதிய Wi-Fi க்கான தீர்வு நிறுவப்படும்.	LKR 150 மில்லியன்	விலை மதிப்பீட்டு ஒப்பந்த செயல்முறை நடந்து வருகிறது
20	பேரிடர் மீட்பு (DR) தளத்தை நிறுவுதல்	நியமிக்கப்பட்ட குழு மூலம் சாத்தியக்கூறு ஆய்வு நடத்தப்பட்டது.	LKR 10. மில்லியன்	திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதல் நடைபெறுகிறது
21	மனித வள முகாமைத்துவ தகவல் முறைமை (HRMIS)	மனிதவள முகாமைத்துவ செயற்பாடுகளை தானியங்குபடுத்தல்	LKR 30 மில்லியன்	விலை மதிப்பீட்டு ஒப்பந்த செயல்முறை நடந்து வருகிறது
22	நிறுவன வள திட்டமிடல் (ERP) முறைமை	கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அனைத்து முக்கிய		விலை மதிப்பீட்டு ஒப்பந்த செயல்முறை

		செயற்பாடுகளையும் தானியங்குபடுத்தல் மற்றும் நிர்வாகப் பணியின் செயல்திறன் மற்றும் துல்லியத்தை மேம்படுத்த மேலே உள்ள அனைத்து முறைமைகளையும் ஒருங்கிணைத்தல்.		நடந்து வருகிறது

2.16. தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவானது ஒரு பணிப்பாளர் தலைமையில் ஒரு வருடத்தில் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டது:

2022 இல் நடத்தப்பட்ட தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள்

மாதம்	பீடம்	செயற்பாடுகள்	*KPI*	கருத்துக்கள்
ஜனவரி	கணினி பீடம்	• தொழில்நுட்ப பயிற்சிநெறி தொடர் • தனிப்பட்ட தர அடையாளப்படுத்தல் பயிற்சிநெறி • *CV* எழுதும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிநெறி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	*100*க்கும் மேற்பட்ட மாணவர்கள்
	முகாமைத்துவம், சமூக விஞ்ஞான மனிதநேய பீடம்	• *CV* மேம்பாடு	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	*100* மாணவர்கள்
	கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம்	• தொழில்துறையில் புதிய போக்குகள் குறித்த வருகையாளர் விரிவுரை	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	*100*க்கும் மேற்பட்ட மாணவர்கள்
	இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்	• *Intake 39* க்கான நோக்குநிலை நிகழ்ச்சி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	பீடத்தில் உள்ள *intake 39* இன் அணைத்து மாணவர்கள்
	சட்ட பீடம்	• இணைய கருத்தரங்கு தொடர்	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	*75* மாணவர்கள்
பெப்ரவரி	கணினி பீடம்	• தொழில்துறை தரிசனம் • தொழில்முனைவோர் விழிப்புணர்வு திட்டம்	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	*150* மாணவர்கள்
	முகாமைத்துவம், சமூக விஞ்ஞான மனிதநேய பீடம்	• தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளித்தல்		*175* மாணவர்கள்

	பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடம்	• தொழிற்துறை பயிற்சி பற்றிய விழிப்புணர்வு அமர்வு		*Intake 38* இல் உள்ள அனைத்து மாணவர்கள்
	சட்ட பீடம்	• கொத்தலாவல பாதுகாப்பு பலகலைக்கழக சட்டப் பட்டதாரிகளின் வாழ்க்கைப் பாதைகள் குறித்த மாதிரி கணக்கெடுப்பு		*150*க்கும் மேற்பட்ட மாணவர்கள்
மார்ச்	கணினி பீடம்	• வேலைக்கான நேர்காணல் தயாரிப்பு பயிற்சிநெறி • தொழில் கண்காட்சி	பங்கேற்பாளர்களின் சதவீதம்	*100%*
	முகாமைத்துவம், சமூக விஞ்ஞான மனிதநேய பீடம்	• மின்னஞ்சல் எழுதுதல்		*75 %*
	கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம்	• தொடர்பாடல் திறன் மற்றும் தலைமைத்துவம் குறித்த பயிற்சிப்பயிற்சிநெறி /வருகையாளர் விரிவுரை		
	பொறியியல் பீடம்	• *CV* மேம்பாடு பற்றிய வருகையாளர் விரிவுரை		
	மருத்துவ பீடம்	• தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு		அணைத்து மாணவர்கள்
ஏப்ரல்	கணினி பீடம்	• தொழில் கண்காட்சி • தொழிற்துறை தரிசனம்	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	*100%*
	முகாமைத்துவம், சமூக விஞ்ஞான மனிதநேய பீடம்	• வேலை செய்யும் கலாச்சாரம்		*50*க்கும் மேற்பட்ட மாணவர்கள்
	இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்	• தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு		*50*க்கும் மேற்பட்ட மாணவர்கள்
	சட்ட பீடம்	• கொத்தலாவல பாதுகாப்பு பலகலைக்கழக சட்டப் பட்டதாரிகளின் வாழ்க்கைப் பாதைகள் குறித்த மாதிரி கணக்கெடுப்பு		
மே	முகாமைத்துவம், சமூக விஞ்ஞான மனிதநேய பீடம்	• தொழிலுக்கு ஏற்ற உடை • பணி நெறிமுறைகள் • தொழில் கண்காட்சி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	*100%*

	கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம்	• நிபுணத்துவ மேம்பாடு & சுய ஊக்கம் குறித்த பயிற்சிப்பயிற்சிநெறி		100க்கும் மேற்பட்ட மாணவர்கள்
	சட்ட பீடம்	• கொத்தலாவல பாதுகாப்பு பலகலைக்கழக சட்டப் பட்டதாரிகளின் வாழ்க்கைப் பாதைகள் குறித்த மாதிரி கணக்கெடுப்பு		50%
ஜூன்	**பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடம்**	• தொழிற்துறை பயிற்சி பற்றிய இறுதி அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக Intake 37 இன் தினவருகை மாணவர்களுடனான சந்திப்பு.	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	அணைத்து மாணவர்கள்
ஜூலை	கணினி பீடம்	• தொழில்நுட்ப பயிற்சிப்பயிற்சிநெறி தொடர்	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	100 மாணவர்கள் 75க்கும் மேற்பட்ட மாணவர்கள்
	கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம்	• தொழில்துறையின் ஒருங்கிணைப்புடன் வணிக முன்மொழிவு எழுதுவது பற்றி அறிந்துகொள்ள ஒரு அமர்வை நடத்துதல் (அனுசரணை வழங்கப்பட்டது)		50 மாணவர்கள்
	பொறியியல் பீடம்	• பயிற்சி மற்றும் தொழில் பற்றிய ஆலோசனை		150க்கும் மேற்பட்ட மாணவர்கள்
	இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்	• மாணவர் ஆலோசனை		100 மாணவர்கள்
ஆகஸ்ட்	கணினி பீடம்	• தனிப்பட்ட மற்றும் சுய சீர்ப்படுத்தும் (self-grooming) பயிற்சிப்பயிற்சிநெறி • தொழில்துறை தரிசனங்கள்	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	100 மாணவர்கள்
	இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்	• கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் சுகாதார விஞ்ஞான மாணவர்களின்		அனைத்து மாணவர்கள்

		தலைமைத்துவப் பண்புகளை உயர்த்துவதற்கும், தொழில் சார்ந்த அணுகுமுறைகளை மேம்படுத்துவதற்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குதல்.		
செப்டம்பர்	கணினி பீடம்	• தொழில்நுட்ப பயிற்சிநெறி தொடர் • தகவல் தொழிநுட்ப தொழில் விழிப்புணர்வு அமர்வு	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	150க்கும் மேற்பட்ட மாணவர்கள்
	கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம்	• CV எழுதும் திறன் குறித்த வருகையாளர் விரிவுரை		
	பொறியியல் பீடம்	• நேர்காணல்களை எதிர்கொள்தல்- வருகையாளர் விரிவுரை		
	மருத்துவ பீடம்	• நிபுணத்துவம் மற்றும் நெறிமுறைகள் பற்றிய விரிவுரை		
நவம்பர்	பொறியியல் பீடம்	• தொழில் கண்காட்சி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	100%
	இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்	• வரவிருக்கும் புதிய பட்டப்படிப்புகளுக்கான (BSc in Pharmaceutical Science) தொழில்துறை பயிற்சிகள் மற்றும் பயிற்சி திட்டங்களை எளிதாக்குவதற்கு கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் மருந்து நிறுவனங்களுக்கு இடையேயான இணைப்புகளை உருவாக்குதல்		75%
டிசம்பர்	கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம்	• தொழில் கண்காட்சி	பங்கேற்பாளர்களின் சதவீதம்	100%

2.17. பாலின சமத்துவம் மற்றும் சமநிலை

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் *(KDU-CGEE)* பாலின சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையம் ஒரு பணிப்பாளரின் தலைமையில் ஒரு வருடத்தில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது:

***2022* இல் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள்/ பயிற்சிநெறிகள்**

தொ/இ	திகதி	பீடம்	தலைப்பு	வளவாளர்
	19/08/2022	பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடம்	**சர்வதேச உறவுகளில் பாலினம்**	*Ms.Sharanya Sekaram*
	06/09/2022	முகாமைத்துவம், சமூக விஞ்ஞான மனிதநேய பீடம்	**பாலின சமத்துவம் மற்றும் சமநிலையை புரிந்துகொள்ளல்**	*Ms.Krishanthi Anandawansa* *Senior Lecturer* *Dept. of Languages* *FMSH*
	08/09/2022	கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம்	**பாலின சமத்துவம் மற்றும் சமநிலை**	*Dr.Suranjith Gunasekara,* *Head of the Department* *Dept. of sociology* *University of Ruhuna*
	09/09/2022	குற்றவியல் நீதி பீடம்	இலங்கை சமூக-கலாச்சாரக் கண்ணோட்டத்தில் பாலினப் பாகுபாடு	*Dr. Anusha Edirisinghe* *Director - Centre for Gender Studies* *University of Kelaniya* *Vice President* *Asia Crime Prevention Foundation (Sri Lanka Chapter)*
	14/09/2022	பொறியியல் பீடம்	**பாலின சமத்துவம் மற்றும் சமநிலை**	*Ms.Isha Mirinda Wedasinghe* *(Vising Lecturer at KDU)* *Consulatant, Facilitator,Trainer and Evaluator* *Director of Agromart Outreach foundation (Sri Lanka)*
	21/09/2022	கணினி பீடம்	தகவல் தொழிநுட்பம் மற்றும் வலியமைப்பில் பெண்கள் தங்கள் பங்கைக் கண்டறிகின்றனர்	*Ms.Kalhari Kaluarachchi* *Program Manager, South Asia* *Cisco Networking Academy/Cisco System*
	22/09/2022	இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்	தொழில்நுட்ப வசதியுள்ள பாலியல் வன்முறை *(TFSV)"*	*Prof. Kaitlynn Mendes,* *Department of Sociology University of Western Ontario, Canada.*

2.18. ஒருங்கிணைந்த மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான நிறுவனம் (KDU-CARE)

ஒருங்கிணைந்த மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனமானது (KDU-CARE) ஒரு இயக்குனரின் தலைமையில் 2022 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களைத் தொடங்கி மற்றும் முடித்தது:

	தயாரிப்பு	**தயாரிப்பு நிறுவனம்**	**நிலை மற்றும் முதன்மை ஆய்வாளர்**
1	*Metformin XR 500 mg tablet*	*CIC Holdings*	*நிறைவு* *வணிக மானியம்: Rs 2,600, 000* *பெறப்பட்டது*
2	*Metformin XR 500 mg tablet*	*Interpharm*	*நிறைவு* *வணிக மானியம்: Rs 2,600, 000* *பெறப்பட்டது, Rs 520,000.00 பெற வேண்டியது*
3	*Gliclazide MR tablet 60 mg*	*Interpharm*	*தொடங்க உள்ளது* *மொத்த பாதீடு: Rs 5,641,107.60 (முதல் 40% - பெற வேண்டும்)* *(புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது மற்றும் Dr. Himali Jayasinghearachchi/ Dr. Pandula Athaudaarachchi)*
4	*Co-Amoxiclav tablet BP 625 mg*	*Nevesta Pharmaceuticals*	*புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது/ தற்காலிகமாக நிறுத்தப்பட்டது* *மொத்த பாதீடு: Rs 4, 814,468.75* *(Dr. Sampath Alahakoon/ Dr. Pandula Athaudaarachchi)*
5	*Flucloxacillin capsule BP 500 mg*	*Nevesta Pharmaceuticals*	*புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது/ தற்காலிகமாக நிறுத்தப்பட்டது* *மொத்த பாதீடு: Rs 4,596,157.50* *(Dr. Nadeesha Rathuwadu/ Dr. Pandula Athaudaarachchi)*
6	*Metformin Sustained Release 500mg*	*Astron*	*புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் பாதீட்டு தயாரிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது* *(Dr. Sampath Alahakoon/ Ms. T. Adikari / Ms. Erandi Perera/ Dr. Pandula Athaudaarachchi)*
7	*Flucloxacillin Capsule 250mg/ 500mg*	*Astron*	*புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் பாதீட்டு தயாரிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது* *(Dr. Nadeesha/ Ms T. Adikari/ Dr. Amila Abesekara/ Dr. Pandula Athaudaarachchi)*
9	*Clarithromycin tablet USP 250 mg*	*Interpharm*	*புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கான கலந்துரையாடல் (Dr. Himali Jayasinghearachchi)*
10	*Levothyroxine 50 mcg*	*SPMC*	*புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கான கலந்துரையாடல் (Dr. Pandula Athaudaarachchi)*

11	*Flucloxacillin 250/500 mg*	*SPMC*	புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கான கலந்துரையாடல் *(Dr. Pandula Athaudaarachchi)*
12	*Tamsulosin HCL SR 0.4 mg*	*Emergen Pharmaceuticals*	ஆரம்ப கலந்துரையாடல் *(Dr. Pandula Athaudaarachchi)*
13	*Diclofenac Na SR 75 and 100 mg*	*Emergen Pharmaceuticals*	ஆரம்ப கலந்துரையாடல் *(Dr. Pandula Athaudaarachchi)*
14	*Gliclazide MR 30 & 60 mg*	*Emergen Pharmaceuticals*	ஆரம்ப கலந்துரையாடல் *(Dr. Pandula Athaudaarachchi)*
15	*Metformin prolonged release 500 mg*	*Emergen Pharmaceuticals*	ஆரம்ப கலந்துரையாடல் *(Dr. Pandula Athaudaarachchi)*

2.19. சர்வதேச விவகாரங்கள்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் அலுவலகம் (IRO) பல்கலைக்கழகத்தின் சுயவிவரத்தை (Profile) பிராந்தியத்தில் உள்ள சிறந்த ஒன்றாக மேம்படுத்தும் கடினமான சவாலுடன் செலாற்றுகிறது. இது உலகெங்கிலும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சுயவிவரத்தை (Profile) உயர்த்துவதற்காக நன்கு அறியப்பட்ட பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள், தொழில்முறை நிறுவனங்கள் மற்றும் பிற சர்வதேச அமைப்புகளுடன் உத்திக் கூட்டணிகளை உருவாக்குகிறது.

IRO ஆனது பரிமாற்ற நிகழ்ச்சிகள் மற்றும் சர்வதேச மாநாடுகள், மாணவர் வருகைகள் மற்றும் ஊழியர் பரிமாற்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறது. இது சர்வதேச ஆராய்ச்சி ஒத்துழைப்புகள் மற்றும் கல்வித் தொடர்புகள், மாணவர் மற்றும் பணியாளர்களின் இயக்கம் மற்றும் சர்வதேச வலைப்பின்னல்களை உருவாக்குதல் ஆகியவற்றை ஊக்குவிக்கவும் வளர்க்கவும் செயற்படுகிறது .மேலும் இது கற்றல் மற்றும் கற்பித்தலின் சர்வதேசமயமாக்கலை ஊக்குவிக்க உதவுகிறது.

இந்த அலுவலகம் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பீடங்களுடன் இணைந்து சர்வதேச தொடர்புகளை உருவாக்கவும், வளர்க்கவும் மற்றும் நிலைநிறுத்தவும் செயற்படுகிறது. இது இரட்டை திட்டங்கள், கடன் பரிமாற்ற திட்டங்கள், மாணவர் பரிமாற்ற திட்டங்கள், அத்துடன் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் முன்னணி கல்வி நிறுவனங்களுடன் பீட பரிமாற்ற திட்டங்கள் போன்ற கூட்டு வாய்ப்புகளை ஆராய்ந்து செயற்படுத்த உதவுகிறது.

2.19.1. சர்வதேச பங்குதாரர்களுடன் நடைமுறையில் உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் / ஒப்பந்தங்கள் / மானியங்கள்


2022 இல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ ஒப்பந்தங்கள்

1. *கீலே பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்*
2. *Ufa மாநில விமான தொழில்நுட்ப நிறுவனம், ரஷ்யா மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்*
3. *கல்கரி பல்கலைக்கழகம், கனடா மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் – புரிந்துணர்வு ஒப்பந்தம்*
4. *ஆசிய தொழில்நுட்ப நிறுவனம், தாய்லாந்து மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் – புரிந்துணர்வு ஒப்பந்தம்*
5. *தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம்,மலேசியா மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்*

6. மாஸ்ஸி பல்கலைக்கழகம் நியூசிலாந்து *(2+2 Articulation Agreement)* மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
7. தியான்ஜின் கட்டிடக்கலை கல்லூரி, சீனா மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
8. பூட்டான் குடியரசு மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
9. *Chungnam* தேசிய பல்கலைக்கழகம், தென் கொரியா மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
10. பிராசோவின் திரான்சில்வேனியா பல்கலைக்கழகம் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்



Webinar on Introducing the Tech-Session: Phase 1: 'Introduction to EDA' by Synopsys Sri Lanka	*Department of Electrical, Electronic & Telecommunication Engineering*	*12th August 2022*		*Undergraduates of the Department*	
Webinar on 'Submarine Fiber Optic Cables'	*Department of Electrical, Electronic & Telecommunication Engineering*	*13th September 2022*		*Undergraduates of the Department*	
Webinar on 'Submarine Fiber Optic Cables'	*Department of Electrical, Electronic & Telecommunication Engineering*	*24th September 2022*		*Undergraduates of the Department*	

Webinar on 'Submarine Fiber Optic Cables'	*Department of Electrical, Electronic & Telecommunication Engineering*	*03rd October 2022*		*Undergraduates of the Department*	
Online workshop on "Hypersonic Weapons and Future Warfare"		*21st September 2022*	*01 hr*	*Undergraduate students of the Student Chapter of the Royal Aeronautical Society at KDU*	
Online workshop on "Next-Generation Aerospace Manufacturing Solutions for a Demanding Future"		*15th September 2022*	*01 hr*	*Undergraduate students of the Student Chapter of the Royal Aeronautical Society at KDU*	
Online workshop on "Designing and Certifying Conversions Kits for Special Missions"		*09th September 2022*	*01hr*	*Undergraduate students of the Student Chapter of the Royal Aeronautical Society at KDU*	
Online workshop on "Systems Engineering in Transport - Part 1		*27th October 2022*	*01hr*	*Undergraduate students of the Student Chapter of the Royal Aeronautical Society at KDU*	
Online workshop on "How to become a professionally registered engineer with the Royal Aeronautical Society"		*13th October 2022*		*Undergraduate students of the Student Chapter of the Royal Aeronautical Society at KDU*	
Online workshop on "An Introduction to Membership & Professional Registration with the Royal Aeronautical Society		*11th October 2022*		*Undergraduate students of the Student Chapter of the Royal Aeronautical Society at KDU*	
Guest Lecture on "Emotional Intelligence for the Aviation Profession"	*Student Chapter of the Royal Aeronautical Society*	*03rd November 2022*			
Seminar on Academic Career Development.	*Faculty of Law*	*06th January 2022*	*01 day*	*Academic Staff*	*16 Academic Staff members of Faculty of Law*

Guest Lecture on 'Life Skills for Gen Z Legal Professionals'	*Legal Aid Center, Faculty of Law*	*20th January 2022*	*01 day*	*Final Year Undergraduates*	*124 students*
Guest Lecture on 'Legal Education: Laying the Foundation for a Noble Professional Career	*Faculty of Law*	*21st January 2022*	*01 day*	*Intake 39 students*	*136 students*
Guest Lecture on 'Recent Changes to the Labour Legislations in Sri Lanka	*Legal Aid Center, Faculty of Law*	*22nd April 2022*	*01 day*	*Final Year Undergraduates*	*124 students*
The 2nd Edition of General Sir John Kotelawala Memorial Moot Court Competition	*Moot Court and Debating Society*	*12th, 13th and 15th March 2022*	*03 days*	*Students of Sri Lanka Law College & other Universities*	*45*
Workshop for the Debating Competition	*Moot Court and Debating Society*	*21st September 2022*	*01 day*	*Members of the Inter Faculty Debating Teams*	*15*
A Guest Lecture on "Introduction to Copy Rights"	*Faculty of Law*	*07th September 2022*	*01 day*	*Students if Intake 38*	*137*

Art, Literary and Video Exhibition 'Eco-Legal Creativity 2022'	*KDU EARTH Faculty of Law*	*12th October 2022*	*01 day*	*Students of Intakes 36, 37, 38 & 39*	*510*
Henry Dunant Memorial National Moot Court Competition (Sinhala)	*Jointly organized by FOL, KDU and ICRC*	*06th December 2022*	*01 day*	*Students of Intake 39*	*136*
Editing as a Profession	*Department of English, University of Kelaniya*	*11th February 2022*	*03 days*	*Undergraduates (Special Degree in English) and junior staff of the Department of English, University of Kelaniya*	*15*
Workshop on Online-Questionnaire Design to orient and enable the students of the Defence Services Command and Staff College, Sri Lanka with the utility of Google Forms for conducting surveys	*Department of Languages*	*19th November 2022*	*02 hrs*	*Batalanda LSC students*	*130*
Using Turnitin in your Assessment	*Department of Languages*	*29th October 2022*	*1.5 hrs*	*Visiting lecturers of the Department of Languages*	*10*
Webinar on 'How to use the KDU library for Research Purposes' Publishing in Corpus Indexed Journals	*Department of Languages*	*8th July 2022*		*All academic staff of FMSH*	*30*
Webinar on Understanding Gender Equity and Equality	*Department of Languages*	*13th September 2022*		*All academic staff of FMSH*	*30*
Webinar on Publishing in Corpus Indexed Journals	*Department of Languages*	*31st October 2022*		*Staff members of Dept. of Languages*	*18*
Pre-sessional Workshop for Visiting staff prior to the commencement of	*Department of Languages*	*15th September 2022*		*Visiting lecturers of the Department of Languages*	*20*

LSC and DSCSC courses					
Workshop on Curriculum Development	*Department of Languages*	*23rd March 2022*		*Staff members of Dept. of Languages*	*18*
Turnitin Feedback Studio: Useful Features for Educators	*Department of Languages*	*23rd March 2022*	*02 hrs*	*Instructors/educators/teachers*	
Training undergraduates of BA in TESOL and BSC in ADSC (intake 38 and 39) to become members of Active Citizen Community	*Department of Languages in collaboration with the British Council*	*21st March -25th March 2022*	*05 days*	*Students of BA in TESOL and BSC in ADSC (intake 38 and 39)*	*155*
Workshop on Data Base Management	*Department of Languages*	*29th and 31st of August*	*03 days*	*Administrative & Non Academic Staff of Faculty of Management, Social Sciences & Humanities*	*12*
Webinar on raising awareness on learning difficulties	*Department of Languages*	*29th August 2022*	*01 day*	*School teachers*	*48*
Creative mind - Online workshops	*Department of Languages*	*05th, 12th, 17th,19th & 25th August 2022*	*05 days*	*Students of MO/Galebadda Maha Vidyalaya*	*17*
Creative mind - Online workshops	*Department of Languages*	*01st June 2022*	*01 day*	*Students of Sri-Bodhiraja College*	*12*
Workshop on Zero Polythene	*Department of Languages*	*06th June 2022*	*01 day*	*Students of Methodist High school*	*59*
Workshop on mental health	*Department of Languages*	*26th August 2022*	*01 day*	*Students of Methodist High school*	*26*
Workshop and competition on Innovative Eco friends	*Department of Languages*	*29th August 2022*	*01 day*	*Students of Methodist High school*	*27*

Webinar and workshop on Kokedama plants	*Department of Languages*	*16th July 2022*	*01 day*	*Students of Girl's High School Mount Lavinia*	*70*
Reading club workshop	*Department of Languages*	*07th August 2022*	*01 day*	*Students of St.Clares College*	*38*
Workshop on Psychology and Language Camp	*Department of Languages*	*28th August 2022*	*01 day*	*Students of SOS Foster Home in Galle*	*43*
Project Pathway flare- Entertainment session for the children in SOS foster home to improve their presenting skills	*Department of Languages*	*28th August 2022*	*01 day*	*Students of SOS Foster Home in Galle*	*82*
Awareness programme on Eco Bricks	*Department of Languages*	*10th June 2022*	*01 day*	*Students of Methodist College*	*59*
Workshop on CV writing	*Faculty of Management, Social sciences & Humanities*	*20th October 2022*	*01 day*	*MTS & LM students of Intake 39*	*116*
Stepping into the Working World	*Department of Social Sciences*	*31st may 2022*	*01 day*	*Day scholars of Intake 37*	*37*
Short Course on 'Cultural Linkages towards an Asian Ideology' 2022/2023	*Department of Social Sciences*	*October 2022 to March 2023*	*06 months*	*Students from all Faculties*	*100*
Certificate course on Non-Violent Communication and Media	*Department of Social Sciences*	*September to December 2022*	*03 months*	*Journalists, Undergraduates Tri Services personnel school Teacher etc.*	*50*
Cardiopulmonary Resuscitation(CPR)	*Department of Nursing & Midwfery, Faculty of Allied Health Sciences*	*15th October 2022*	*4.5 hrs*	*Nursing undergraduates*	*50*

Workshop on proposal writing for undergraduates of FAHS	*Faculty of Allied Health Sciences*	*18th February 2022*	*5 hrs*	*Undergraduates of FAHS*	*174*
Pre conference work shop on "Dry needling for beginners"	*Department of Physiotherapy, Faculty of Allied Health Sciences*	*8th September 2022*	*9 hrs*	*Working Physiotherapists, Academic Staff members of Dept. of Physiotherapy*	*30*
Work shop on "Taping techniques"	*Department of Physiotherapy, Faculty of Allied Health Sciences*	*07th October 2022*	*8 hrs*	*Physiotherapy Undergraduates of Intake 36, 37 & 38*	*120*
Workshop on genetically modified mouse models, in-vitro fertilization and therapeutic approaches to genetic diseases	*Faculty of Allied Health Sciences*	*28th March 2022*	*8 hrs*	*Scientists from outside , undergraduate and postgraduate students of KDU*	*50*
Workshop for the undergraduates registered for the oratorical competition of Sri Lanka Association for Laboratory Animal Science (SLALAS)	*Faculty of Allied Health Sciences*	*17th September 2022*	*4 hrs*	*Undergraduate Students*	*30*
Orientation Workshop (Online)' by NAITA for Industrial Training Course	*Department of Spatial Sciences*	*30th June 2022*	*5 hrs*	*Intake 36*	*24*
Guest Lecture - Prof. Christophe Claramunt	*Department of Spatial Sciences*	*25th March 2022*	*5 hrs*	*Intake 36, 37 & 38*	*59*
Post Conference Workshop – KDU IRC 2022	*Department of Spatial Sciences*	*01st October 2022*	*8 hrs*	*MSc students of University of Peradeniya and Survey Sciences Students*	*75*
Guest Lecture on An overview of the IQSSL & it's undertones on Quality Surveying Profession by Ch.QS Upul Shantha & Ch.QS Hasitha Gunasekara	*Department of Quantity Surveying*	*17th February 2022*	*6 hrs*	*Intake 37, Intake 38 & 39*	*180*

Guest Lecture on Pre & Post Construction management activities related to the bidding process based on SBD & NPA guidelines by of Ch. QS Nishantha Wickramasinghe	*Department of Quantity Surveying*	*25th February 2022*	*6 hrs*	*Intake 37 & Intake 38*	*139*
Guest Lecture on Women's contribution in the construction industry for a sustainable tomorrow by Prof. Chitra Wedikkara	*Department of Quantity Surveying*	*08th March 2022*	*3 hrs*	*Intake 37, Intake 38 & 39*	*180*
Guest Lecture on Claims and Dispute Resolution by Ch. QS Jayantha Jayakody	*Department of Quantity Surveying*	*29th October 2022*	*5 hrs*	*Intake 37*	*57*
Guest Lecture on Modern Trends in Construction Industry and QS Profession by Ms.Nikshala Thuwaragan	*Department of Quantity Surveying*	*24th November 2022*	*4 hrs*	*Intake 37*	*57*
Guest Lecture on Procurement procedure by Eng. (Brig) KDA Perera	*Department of Quantity Surveying*	*24th November 2022*	*2 Days*	*Intake 37*	*57*
Pre Conference Workshop – KDU IRC 2022	*Department of Quantity Surveying*	*28th September 2022*	*8 hrs*	*External Participants of Undergraduates of Dept QS*	*65*
Orientation workshop of Industrial Training conducted by NAITA	*Department of Quantity Surveying*	*25th November 2022*	*6 hrs*	*Intake 37*	*57*
Introduction Workshop for Asia Young Designers Award	*Department of Architecture*	*03rd November 2022*	*4 hrs*	*Undergraduate of Depart of Architecture*	*50*

Informative session on "Gender Equity and Equality"	*Organized by representative of FBESS for Centre for Gender Equity and Equality*	*08th September 2022*	*3 hrs*	*Undergraduates of Southern Campus*	*75*
Basics on computing and the internet	*Staff Development Center*	*27th January 2022*	*1 hrs*	*Management Assistants of KDU*	*30*
Data and models for transportation	*Technische Universität Dresden*	*7th Nov - 11th Nov 2022*	*5 Days*	*Project members of Erasmus+ project*	*4*
Estimation Theory	*University of Technology, Athens, Greece*	*28th Sep-30th Sep 2022*	*3 Days*	*Professional members/Academic staff*	*More than 30*
Peer observation workshop	*Staff Development Center*	*3rd February 2022*	*1 hrs*	*Academic Staff*	*81*
How to write Institutional Review / Program Review	*Staff Development Center*	*16th June 2022*	*2 hrs*	*Academic Staff/ Admin Staff*	*26*
Academic Mentoring Workshop	*Staff Development Center*	*29th June 2022*	*1 ½ hrs*	*Academic*	*51*
Hands on session in Designing IOT Applications	*Faculty of Computing*	*16th January 2022*	*4 hrs*	*Undergraduate students in FOC and FOE*	*45*
An Overview of Data Mining and Visualization	*Faculty of Computing*	*20th January 2022*	*2 hrs*	*Undergraduate students in FOC*	*45*
4th CSSL GenZ Forum	*Faculty of Computing*	*24th March 2022*	*2 hrs*	*CSSL –GenZ KDU Student Chapter*	*30*
2022 Annual General Meeting of the CSSL GenZ Student Chapter	*Faculty of Computing*	*29th march 2022*	*2 hrs*	*CSSL –GenZ KDU Student Chapter*	*28*
Membership Drive	*GenZ for University CSSL KDU*	*14th May 2022*	*2 hrs*	*Undergraduate students in FOC & FOT*	*45*
Submarine Fiber Optics: Past, Present, and Future " by IET	*Faculty of Computing*	*08th May 2022*	*2 hrs*	*Undergraduate students in FOC and FOE*	*40*
NBQSA-Awareness Session	*BCS Student Chapter*	*11th May 2022*	*1 hrs*	*Undergraduate students in FOC*	*30*

Recent Advances in Artificial Inelegance in IoT	*Faculty of Computing*	*21st May 2022*	*2 hrs*	*Undergraduate students in FOC and FOE*	*60*
Remedy for the Economics Crisis using Trending E – Commerce Solutions.	*CSSL GenZ & Internet Security of Sri Lanka*	*30th June 2022*	*2 hrs*	*Undergraduate students in FOC*	*46*
Webinar on Women in Network Engineering	*Faculty of Computing*	*30th June 2022*	*2 hrs*	*Undergraduate students in FOC*	*85*
Webinar on "Industry Transformation with 5G Technology"	*Faculty of Computing*	*29th July 2022*	*2 hrs*	*Undergraduate students in FOC*	*85*
Awareness Session 2022 "All about WIE"	*WIE affinity group of KDU*	*15th August 2022*	*2 hrs*	*Undergraduate students in FOC & FOE*	*80*
Research Areas in IOT	*CSSL GenZ -KDU*	*21st August 2022*	*3 hrs*	*Undergraduate students in FOC*	*62*
Webinar on " prospects in IT Industry"	*Faculty of Computing*	*23rd August 2022*	*2 hrs*	*Undergraduate students in FOC*	*85*
Webinar on "Safe Browsing"	*Faculty of Computing*	*22nd September 2022*	*2 hrs*	*Undergraduate students in FOC*	*85*
Related Business Analytical Techniques Module	*Guest talk by Mr Sachith Perera from Ascentic Pvt (Ltd)*	*04th October 2022*	*2hrs*	*Undergraduates DSBA Intake 38*	*42*
A Webinar on "Intelligent IP Network unlocking the Value of Datacom".	*Faculty of Computing*	*25th October 2022*	*2 hrs*	*Undergraduate students in FOC*	*85*
Awareness Programme by American Society of Heating, Refrigerating and Air-Conditioning Engineers (ASRAE)	*Faculty of technology*	*18th August 2022*	*01 Day*	*Academic staff members and students of the faculty*	*94*
Guest speech by Dr. Rohan Pallewatte	*Faculty of technology*	*09th March 2022*	*01 Day*	*Newly enlisted students to the faculty*	*94*

Workshop on Solar PV System Design & Installation	*Faculty of technology*	*20th April 2022*	*01 Day*	*Academic staff members and students of the Faculty of Technology and Faculty of Engineering*	*40*
Introductory Session on CSSL	*Faculty of technology*	*04th May 2022*	*01 Day*	*ICT students of intake 39*	*37*
Guest Lecture on "Role of an academic as a teacher"	*Faculty of Criminal Justice*	*30th August 2022*	*01 hr*	*Academic staff members of KDU*	*15*
Guest Lecture on "The practical aspect of the Criminal Law"	*Faculty of Criminal Justice*	*21st October 2022*	*1.5 hrs*	*Students of the Faculty of Criminal Justice*	*70*
Guest Lecture on "Gender discrimination in Sri Lanka Society: Cultural Perspective"	*Faculty of Criminal Justice*	*19th August 2022*	*1.5 hrs*	*Students & the Academic Staff of the Faculty of Criminal Justice*	*70*
Guest Lecture on "Causation"	*Faculty of Criminal Justice*	*19th October 2022*	*1 hr*	*Students of the Faculty of Criminal Justice*	*63*
Guest Lecture on "Introducing the Fundamentals of Commercial Law and Company Law"	*Faculty of Criminal Justice*	*15th October 2022*	*1 hr*	*Students of the Faculty of Criminal Justice*	*65*

4.3. புதிய பட்டப்படிப்பு பாடநெறிகளின் அங்குரார்ப்பணம்

பீடம்	*பாடநெறி*	*கால அளவு*
பொறியியல்	*BSc (Hons) in Naval Architecture & Marine Engineering*	*04 years*
	BSc (Hons) in Building Services Engineering	
தொழிநுட்பம்	*BET (Hons) in Construction Technology*	*04 years*
	BET (Hons) in Building Services Technology	
	BET (Hons) in Biomedical Instrumentation Technology	
	BET (Hons) in Information and Communication Technology	
குற்றவியல் நீதி	*BSc in Police Science*	*03 years*
	BSc in Criminology & Criminal Justice	*03 years*

5. பீடங்கள் மற்றும் நூலக வலையமைப்பு

5.1. பட்டதாரி கற்கைகள் பீடம் (FGS)





பீடாதிபதி

பிரிகேடியர் ஆர்.ஜி.யு.ராஜபக்ஷ

அறிமுகம்

பட்டதாரி கற்கைகள் பீடத்தின் வரலாறானது 2000 ஆம் ஆண்டு ஜனவரி 13 ஆம் திகதி முதல் இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை மற்றும் இலங்கை பொலிஸ் ஆகிய அமைப்புகளின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு முகாமைத்துவத் துறையில் MSc (பாதுகாப்புக் கற்கைகள்) பட்டத்தினை வழங்குவதற்காக MSc பிரிவாக நிறுவப்பட்டதனை அடிப்படையாகக் கொண்டதாகும். அதனைத்தொடர்ந்து 2003 ஆம் ஆண்டில் முப்படைகள் மற்றும் பொலிஸ் அமைப்புகளின் தகுதியான மத்திய நிலை அதிகாரிகளுக்கு முகாமைத்துவத் துறையில் BSc (பாதுகாப்பு கற்கைகள்) பட்டப்படிப்பானது MSc பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்டது. MSc பிரிவானது 29 ஒக்டோபர் 2003 இல் இருந்து ஊழியர் விருத்தி மற்றும் தொழில் முன்னேற்றப் பிரிவு எனவும், 05 மே 2009 இல் முதுமாணி கற்கைகள் கல்வி நிறுவனம் (IPGS) எனவும் இறுதியாக 01 மார்ச் 2012 இல் பட்டதாரி கற்கைகள் பீடம் (FGS) எனவும் பெயர் மாற்றப்பட்டுள்ளது. அத்தோடு 01 மார்ச் 2012 இல் இருந்து பட்டதாரி கற்கைகள் பீடமானது பொது மற்றும் தனியார் துறைகளின் சிவில் நிர்வாக அதிகாரிகளை முதுமாணி பட்டதாரி கற்கைகளுக்கு இணைத்துக்கொண்டது .

பட்டதாரி கற்கைகள் பீடமானது முதலில் KDU இன் பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் வளாகத்தில் நிறுவப்பட்டிருந்தது, பின்னர் 04 ஆகஸ்ட் 2015 முதல் அதிநவீன வசதிகளுடன்கூடிய ஆறு மாடி கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. தற்போது, FGS இன் உட்கட்டமைப்பு வசதிகளில் 293 இருக்கைகளைக் கொண்டமைந்துள்ள நவீன கேர்போர் அரங்கும் ஒன்றாகும். அத்தோடு பலவகையான இருக்கை வசதிகளை கொண்ட 15 விரிவுரை அரங்குகளும் (30 மாணவர்கள் - 10 விரிவுரை அரங்குகள், 50 மாணவர்கள் - 04 விரிவுரை அரங்குகள் மற்றும் 100 மாணவர்கள் - 01 விரிவுரை அரங்கம்) 250 இருக்கைகள் கொண்ட பரீட்சை மண்டபம் ஒன்றும் சிறப்பான வசதியூட்டப்பட்ட கணினி ஆய்வகமும் நவீன மின் நூலகமும் நிருவாகசபை கூட்டங்களுக்கான மாநாட்டு அரங்கமும் FGS இல் சிறப்பாக அமையப்பெற்ற உட்கட்டமைப்பு மேம்பாடுகளாகும்.

தற்போது, FGS ஆனது முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும், மேலதிக தகுதிகளுடன் தங்கள் தொழில்முறை தகைமைகளை மேம்படுத்த ஆர்வமுள்ள பொது மற்றும் தனியார் துறை நிர்வாகிகளுக்கும் 14 வகையான முதுமாணி கற்கைகளை நடாத்திவருகிறது. குறிப்பாக, FGS ஆனது மெய்யியல் முதுமாணி மற்றும் மெய்யியல் கலாநிதி கற்கைகளையும் நடாத்துவதன் ஊடாக முழுமையான பல்கலைக்கழகமொன்றின் கல்வி அந்தஸ்தின் நோக்க அடைவினை சிறப்பாக அடைந்துள்ளது. தற்போது FGS ஆனது முகாமைத்துவம், பெயர்ச்சியியல் முகாமைத்துவம், e-அரசாண்மை, சட்டம், பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள், பொறியியல், அனர்த்த இடர் குறைப்பு மற்றும் மேம்பாடு ஆகிய துறைகளில்

அதன் முதுமாணி கற்கைகளை நடாத்திவருகிறது. அண்மையில் தரமுயர்த்தப்பட்டு 2021 ஆம் ஆண்டில் இருந்து KDU உடன் இணைக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் (NDC) ஊடாக நடாத்தப்படும் மெய்யியல் முதுமாணி, மெய்யியல் கலாநிதி, தேசிய பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் முதுமாணி போன்ற பாடநெறிகளின் அனைத்து கல்வி தொடர்பான செயற்பாடுகளும் FGS இனாலேயே ஒருங்கிணைக்கப்படுகின்றன. மேலும், FGS இன் முதுமாணி கற்கைகள் அனைத்தும் மருத்துவம், உயிரியல் விஞ்ஞானம் சார் ஆய்வு சபை, பொறியியல், கணினி, இடம்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார் ஆய்வு சபை, முகாமைத்துவம் மற்றும் சமூக ஆய்வுகள் சார் சபை, பாதுகாப்பு சார் ஆய்வு சபை ஆகிய 04 ஆய்வு அமைப்புகளின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன.

நாட்டிலுள்ள கல்வி மற்றும் தொழில்சார் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறந்த வளவாளர்களுடன் ஒருங்கிணைந்து FGS ஆனது இந்தத் கற்கைகளை திட்டமிட்டு நடத்துகிறது. ஆத்தோடு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பீடங்களில் கல்விச் சேவையாற்றும் விரிவுரையாளர்களையும் ஏனைய பல்வேறு புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றின் விரிவுரையாளர்களையும் தொழில்துறை துறை நிபுணத்துவம் பெற்ற வளவாளர்களையும் உள்ளடக்கியதாகவே FGS இன் விரிவுரையாளர் குழாமானது கட்டமைக்கப்பட்டுள்ளது.

அடைவுகள்

- 2022 ஆம் ஆண்டில் MPhil/PhD மற்றும் முதுமாணி கற்கைகளுக்காக பதிவு செய்யப்பட்ட 208 மாணவர்கலுக்கான முதுமாணி கற்கைகளின் அங்குரார்ப்பன நிகழ்வானது 21 ஏப்ரல் 2022 மற்றும் 09 ஜூன் 2022 ஆம் திகதிகளில் FGS கேட்போர் அரங்கில் நடைபெற்றது.
- 2022 ஆம் ஆண்டில் FGS ஆனது 113 பட்டதாரிகளையும் 78 முதுகலை பட்டதாரிகளையும் 10 பட்டப்பின் டிப்ளமோ பட்டதாரிகளையும் 25 விஞ்ஞானமாணி பட்டதாரிகளையும் உருவாக்கியது. இப் பட்டதாரிகளுக்கு 2022 நவம்பர் 10, 11 ஆம் திகதிகளில் BMICH இல் நடைபெற்ற KDU இன் பொது பட்டமளிப்பு விழா - 2022 நிகழ்வில் குறித்த பட்டங்கள் வழங்கிவைக்கப்பட்டன.
- மேற்குறித்த 113 பேரில், 91 பட்டதாரிகள் KDU இன் பழைய மாணவர் சங்கத்திற்கான உறுப்புரிமையினையும் பெற்றுக்கொண்டனர்.
- 2022 ஆம் ஆண்டில் உயிர்மருத்துவப் பொறியியல் முதுமாணி, பொதுச் சட்ட முதுமாணி, வணிகச் சட்ட முதுமாணி மற்றும் சர்வதேச சட்டக் கற்கைகளின் முதுமாணி போன்ற கற்கைநெறிகள் தொடங்கப்பட்டன.

எதிர்காலத் திட்டங்கள்

- 2023 இல் KDU இன் பட்டதாரி கற்கைகள் பீடமானது 03 புதிய முதுமாணி கற்கைகளைத் தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளது. 02 வருட வியாபார நிர்வாக முதுமாணி, கணனியியல் முதுமாணி மற்றும் நரம்பியல் விஞ்ஞான முதுமாணி போன்ற கற்கைகளே இத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளன.
- 2023 ஆம் ஆண்டில் ஆசிரிய முதுகலைப் பட்டதாரி மாணவர்களுக்கு மின் நூலகத்தைத் திறப்பதற்கும் ஸ்மார்ட் வகுப்பறை வசதியை வழங்குவதற்கும் திட்டமிட்டுள்ளது.

5.2. பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடம் (FD&SS)



பீடாதிபதி

கேணல் ஆர்.கே.ஆர்.பி. ரத்நாயக்க

அறிமுகம்

பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கை நெறியானது KDU இன் கல்வித் திட்டத்தில் ஒரு முக்கிய பகுதியாகும். மேலும் இக் கற்கைகள் சார்ந்த பொறுப்புகள் யாவும் பல்கலைக்கழகத்தின் பிரதி துணை வேந்தரின் (பாதுகாப்பு மற்றும் நிர்வாகம்) கீழ் செயற்படும் பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடத்திடம் (FDSS) ஒப்படைக்கப்பட்டுள்ளன. FDSS ஆனது பாதுகாப்பு கற்கைகள் துறை மற்றும் தந்திரோபாய கற்கைகள் துறை எனப்படும் இரு துறைகளைக் கொண்டுள்ளது. இவை தரச்சிறப்பான இராணுவக் கல்வியினை பயிற்சி அதிகாரிகள் மற்றும் முப்படையினருக்கு வழங்குவதனை உறுதி செய்வதற்காக பன்முக கல்வி மற்றும் இராணுவ பயிற்சி நடவடிக்கைகளை முன்நிலைப்படுத்தியவையாக கட்டமைக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக, தினவருகை மாணவர்களிடையே (உள்நாடு மற்றும் வெளிநாடு) தலைமைதத்துவப் பண்பு, குழுப்பணி மற்றும் நேர்மறை சிந்தனை போன்றவற்றை வளர்க்கும் நோக்கில் தத்துவார்த்த ரீதியானதும் நடைமுறைப் பயிற்சியின் மூலமானதுமான கல்வியூட்டும் பொறுப்பினையும் இப் பீடமே ஏற்றுள்ளது. அத்தோடு தனியார் மற்றும் அரச பாடசாலையினர் மற்றும் இலங்கையின் நிர்வாக சேவை அலுவலர்கள் (SLAS) போன்றோருக்கு ஆளுமை விருத்தி சார் பயிற்சிகளையும் இப் பீடமானது முன்னெடுத்துவருகிறது.

பாதுகாப்பு கற்கைகள் துறை

பாதுகாப்பு கற்கைகள் துறையானது (DDS) அனைத்து பயிற்சி அதிகாரிகளினதும் ஒழுக்கம், இராணுவப் பயிற்சி மற்றும் ஏனைய நிர்வாகம் சார் விடயங்களுக்கும் பொறுப்பான துறையாகும். அத்தோடு, தினவருகை மாணவர்களின் நிர்வாக முகாமைத்துவத்துக்கும் இதுவே பொறுப்பாகும். பாதுகாப்பு கற்கைகள் துறையானது ஆறு (06) படைப்பிரிவுகளை உள்ளடக்கியது. Intake 34,35,36,37,38 & 39 ஆகிய இப் படைப் பிரிவுகள் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு பயிற்சி அதிகாரியையும் கொண்டு உருவாக்கப்படுவதோடு கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காக பல துருப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு படைப்பிரிவுக்கான தளபதி முழுப் படைப்பிரிவின் ஒட்டுமொத்தப் பொறுப்பையும் கொண்டிருந்தாலும், துருப்புத் தளபதிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துருப்புக்களின் மேற்பார்வைக்கு பொறுப்பானவர்களாவர்.

தந்திரோபாய கற்கைகள் துறை

தந்திரோபாய கற்கைகள் துறையானது (DSS) இலங்கையின் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (KDU) பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடத்தின் (FDSS) கீழ் இயங்கும் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி அமைப்பாகும். FDSS இல் உள்ள இரண்டு துறைகளில் தந்திரோபாய கற்கைகள் துறையானது (DSS) பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடத்தில் இறுதியாக

சேர்த்துக்கொள்ளப்பட்டதாகும். பாதுகாப்புக் கற்கைகள் துறையானது (DDS) அடிப்படையில் பயிற்சி அதிகாரிகள் மற்றும் தினவருகை மாணவர்களின் பயிற்சியையும் பல்கலைக்கழக இளமாணி கற்கைகளையும் கையாளும் அதே வேளை, தந்திரோபாய கற்கைகள் துறையானது (DSS) ஒரு துறைச்சிறப்பான கல்விப் பாடப் பகுதியாக தந்திரோபாய கற்கைகள் துறையில் கவனம் செலுத்துகிறது. இதன்போது இராணுவ வியூகம், புவிசார் அரசியல், மரபுமுறை மற்றும் மரபுமுறையற்ற பாதுகாப்பு, தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு போன்ற விடயங்கள் முன்நிறுத்தப்படுகின்றன.

5.3. மருத்துவ பீடம் (FOM)





பீடாதிபதி

Air Cdre (Prof) RANK விஜேசிங்க

அறிமுகம்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவெல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் 2009 இல் நிறுவப்பட்ட மருத்துவ பீடமானது (FOM) இலங்கையில் உள்ள உயர்கல்விக்கான ஒரே தேசிய இராணுவ மருத்துவக் கல்வி நிறுவனமாகும். இப் பீடத்தினால் வழங்கப்படும் MBBS பட்டப்படிபானது பயிற்சி அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு பிரிவின் கீழ் கட்டணம் செலுத்தும் அடிப்படையில் பதிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது.

இப் பீடத்தில் ஐந்தாண்டுகால மருத்துவ கற்கைக்கான கல்வித்திட்டமே பின்பற்றப்படுகின்றது. சிவில் மருத்துவப் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் பதினான்கு (14) பாடங்களுக்கு மேலதிகமாக, இராணுவ மருத்துவ மாணவர்கள் முப்படைகளில் பணியாற்றுவதற்கும் பயிற்சியளிக்கப்படுவதனால், குறித்த மாணவர்கள் இராணுவம், விமானப் போக்குவரத்து, கடற்படை, அணுசக்தி, விபத்து மற்றும் அவசர மருத்துவம் ஆகியவற்றுக்கு பொருத்தமான தகைமையினை பெறுகின்றனர். MBBS கற்கையானது முன் மருத்துவ விஞ்ஞானத் துறை, பரா-மருத்துவ விஞ்ஞானத் துறை மற்றும் மருத்துவ விஞ்ஞானத் துறை எனப்படும் மூன்று முக்கிய துறைகளின் கீழ் அனுபவம் வாய்ந்த நிபுணர்களால் நடத்தப்படுகிறது.

மேலும், வெரஹெராவில் நிறுவப்பட்டுள்ள அதிநவீன வசதிகளைக் கொண்ட KDU பல்கலைக்கழக மருத்துவமனையானது, KDU இன் மருத்துவத் துறை மாணவர்களின் மருத்துவப் பயிற்சிகளை சிறப்பாக நடத்துவதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளதோடு KDU இன் FOM இனால் வழங்கப்படும் MBBS கற்கையின் தரத்தினையும் மதிப்பினையும் காத்திரமாக மேம்படுத்த உறுதுனையாகின்றது.

மருத்துவ பீடமானது (FOM) கீழுள்ள நான்கு (04) துறைகளைக் கொண்டுள்ளது:

- *முன் மருத்துவ விஞ்ஞானத் துறை*
- *துணை-மருத்துவ விஞ்ஞானத் துறை*
- *மருத்துவ விஞ்ஞானத் துறை*
- *மருத்துவக் கல்வி மற்றும் பணியாளர் மேம்பாட்டுத் துறை*

ஒரு இராணுவ மருத்துவ மாணவரை திறமையும் கருணையும் மிக்க மருத்துவ நிபுணராக மாற்றுவதற்கான அடித்தளத்தினை அமைப்பதில் முன் மருத்துவ விஞ்ஞானத் துறையானது முக்கிய பங்காற்றுகிறது. மருத்துவ அறிவியலை இலகுமுறையில் கல்வியூட்டும் நோக்குடன் மருத்துவத்திற்கான அறிவியல் அடிப்படையினை கற்பிப்பதோடு மாணவர்கள் கற்றுக்கொள்வதை எளிதாக்கும் வகையில் இதற்கான

பாடத்திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளது. உடற்கூறியல், உயிர்-இரசாயனவியல், உடலியல் ஆகியவை இத் துறையால் கற்பிக்கப்படும் முக்கிய பாடப் பகுதிகளாகும்.

பரா-மருத்துவ விஞ்ஞானத் துறையானது 03வது MBBS பகுதி I மற்றும் II பாடங்களைக் கற்பிப்பதை முன்னெடுக்கின்றது, ஒரு மருத்துவரை சமூகமயமாக்கப்பட்ட மருத்துவராகவும் பகுத்தறிந்து முடிவெடுக்கும் ஆற்றல் மிக்கவராகவும் உருவாக்கிக்கொள்ள அவசியமான மருத்துவ அறிவியலுக்கான அத்தியாவசிய நிரப்பு அறிவை வழங்குகிறது. 04வது செமஸ்டர் முதல் 07வது செமஸ்டர் வரை மருத்துவ மாணவர்களுக்கு கற்பிக்கும் பொறுப்பு இத்துறையின் கீழானதாகும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் விரிவுரைகள், பயிற்சிகள், நடைமுறைகள் மற்றும் சமூகம் சார்ந்த கற்பித்தல் ஆகியவை உள்ளடங்கும். நுண்ணுயிரியல், ஒட்டுண்ணியியல், நோயியல், மருந்தியல், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப மருத்துவம், தடயவியல் மருத்துவம் ஆகியவை இத் துறையால் கற்பிக்கப்படும் முக்கிய பாடப் பகுதிகளாகும்.

மருத்துவ விஞ்ஞானத் துறையானது இறுதியாண்டு பாடப்பிரிவுகளில் பயிற்றுவிப்பதை மேற்கொள்கிறது, இது ஒரு பயிற்சி மருத்துவருக்கு மருத்துவத்தின் மூலக்கல்லாகும். 06வது செமஸ்டர் முதல் 10வது செமஸ்டர் வரை மருத்துவ மாணவர்களுக்கு கற்பிக்கும் பொறுப்பு இத்துறைக்கு உள்ளது. கற்பித்தல் கற்றல் நடவடிக்கைகளில் விரிவுரைகள், பயிற்சிகள் மற்றும் மருத்துவப் பயிற்சி ஆகியவை அடங்கும். மருத்துவம், அறுவை சிகிச்சை, மகளிர் மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம், குழந்தை மருத்துவம் மற்றும் மனநல மருத்துவம் ஆகியவை துறையால் வழங்கப்படும் முக்கிய பாடப் பிரிவுகளாகும்.

மருத்துவக் கல்வித் துறையானது மருத்துவ மாணவர்களுக்கான கல்விப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து நடத்துவதோடு KDU இன் FOM இனால் கற்பிக்கப்படும் மருத்துவப் பாடத்திட்டம் தொடர்பான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் அதிகளவு பங்களிக்கிறது.

5.4. பொறியியல் பீடம் (FOE)





பீடாதிபதி

கேப்டன் (ஓய்வு) பொறியியலாளர். எஸ்.யூ. தம்பகே

அறிமுகம்

பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடமானது விமான பொறியியல் துறை, சிவில் பொறியியல் துறை, மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் துறை, கடல்சார் பொறியியல் துறை, இயந்திரவியல் பொறியியல் துறை, கணிதத் துறை மற்றும் தொழில்துறை பயிற்சி பிரிவு என ஆறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. எட்டு வெவ்வேறு பிரிவுகளில் விஞ்ஞான இளமாணி (BSc.) பொறியியல் பட்டங்களை நான்கரை (4 ½) ஆண்டுகள் நிறைந்த கற்கையாக பயிற்சி அதிகாரிகளுக்கும் நான்கு (4) ஆண்டுகள் நிறைந்த கற்கையாக தினவருகை மாணவர்களுக்கும் வழங்குகிறது. பொறியியல் கற்கைகளுக்காக KDU ஆனது ஒருங்கிணைந்த மாணவர் பதிவினை பின்பற்றுகிறது. முன்னர் SAARC பிராந்தியத்தின் நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு மானவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த இக் கற்கையானது தற்போது கட்டணம் செலுத்தும் நிபந்தனைகளுக்கு அமைய அனைத்து நட்பு நாடுகளின் மாணவர்களுக்கும் கற்பிக்கப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டில், இப் பீடத்தில் இயந்திர இலத்திரனியல், உயிர் மருத்துவம், விமானப் பராமரிப்பு ஆகிய மூன்று விஞ்ஞான இளமாணி பொறியியல் கற்கைகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன.

கல்வித் தகுதியுள்ள முப்படை அதிகாரிகளை உருவாக்க பொறியியல் பீடம் ஆற்றுகின்ற பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. இப் பீடமானது அனைத்து கற்கை நெறிகளையும் நடத்துவது மட்டுமல்லாமல், பல்கலைக்கழகத்தின் இணைபாடவிதான மற்றும் பாடத்திட்டத்துக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளில் புதுமையான மாற்றங்களை அறிமுகப்படுத்தும் அதே வேளை, ஒவ்வொரு பயிற்சி அதிகாரியினதும் அறிவுசார் முயற்சிகளை மேம்படுத்துவதிலும் தன்னை ஈடுபடுத்துகிறது.

KDU இல் பின்பற்றப்படும் படத்திட்டமானது ஏனைய புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுக்கு இணையாக மிக உயர்ந்த தரத்தில் பராமரிக்கப்படுகிறது. எமது கல்வித் திட்டத்தினை சுயாதீனமாக நடத்துவதற்காக, KDU ஆனது தனக்கே உரிய தகுதிவாய்ந்த கல்விசார் ஊழியர்களைக் கொண்டுள்ளதோடு மொரட்டுவை பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், முப்படைகள் மற்றும் பலவகையான தொழில்துறைகள் போன்றவற்றில் இருந்து வருகை தரும் விரிவுரையாளர்கள் / பயிற்றுவிப்பாளர்களின் சேவைகளைக் கையாள்வதன் ஊடாக சிறப்புரிமைமிக்க கல்வி அந்தஸ்தினையும் தக்கவைத்துள்ளது.

அடைவுகள்

- *ஜனவரி 2022, 39வது இன்டேக் இளங்கலைப் பட்டதாரிகளுடன் கடற்படை கட்டிடக்கலை மற்றும் கடல்சார் பொறியியல் கற்கை ஆரம்பிக்கப்பட்டது.*
- *அக்டோபர் 2022 உயிர் மருத்துவ பொறியியல் விஞ்ஞான முதுமாணி கற்கை ஆரம்பிக்கப்பட்டது.*

- *IEEE தொடர்பாடல் சங்க மாணவர் பிரிவானது டொக்டர் (செல்வி) எஸ்கே விஜேசேகர அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.*
- *IESL இனது அங்கீகாரத்தைப் பெறும் நோக்கில் 2022 நவம்பர் 30 அன்று உயிர் மருத்துவ பொறியியல் கற்கைக்கான சுய மதிப்பீட்டு அறிக்கையானது (SER) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்திடம் (IESL) மதிப்பீடுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டது.*
- *"Lumbar puncture நடைமுறையின் போது CSF அழுத்தத்தை அளவிடுவதற்கான டிஜிட்டல் அமைப்பின் உருவாக்கம்" எனும் HSH பெரேராவால் மேற்கொள்ளப்பட்ட இறுதியாண்டு ஆராய்ச்சித் திட்டமானது EHADK ஹேவாடிகாரம் மற்றும் K தல்படத்து ஆகியோரின் மேற்பார்வையில் செய்யப்பட்டது. இது 2022 ஆம் ஆண்டுக்கான இறுதியாண்டு திட்டக் கண்காட்சியில் 1வது இடத்தைப் பெற்றது.*
- *மின் மற்றும் மின்னணுப் பொறியியல் பட்டப்படிப்புத் திட்டமானது 02 வருட நிபந்தனைக்குட்பட்ட IESL அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.*

எதிர்காலத் திட்டங்கள்

<u>*கடல்சார் பொறியியல் திணைக்களம்*</u>

- *கடல்சார் பொறியியல் பட்டப்படிப்பில் BSc Eng (Hons)இற்கான இலங்கையின் Institution of Engineering இன் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு திணைக்களம் எதிர்பார்க்கிறது.*
- *இளங்கலைப் பட்டதாரிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டில் வழங்கப்படவுள்ள இரண்டு பட்டப்படிப்புகளுக்கு Institution of Engineering Science and Technology (IMarEST) இன் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு இந்தத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.*
- *திணைக்களமானது லட்வியாவின் RIGA தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுறவை நிறுவும் பணியில் உள்ளது.*

<u>*மின், மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம்*</u>


- *திணைக்களமானது Theory of Electricity Module இன் கீழ் "Balance Three Phace Circuit" பற்றிய பரிசோதனை அமர்வுகளை நடத்துவதற்கான புதிய பரிசோதனை அமைப்பை வடிவமைத்து உருவாக்கியது.*
- *புதிய மின்கலங்கள் மற்றும் மின் வயரிங் ஆகியவற்றை மாற்றுவதன் மூலம் சூரிய சக்தியில் இயங்கும் மின்சார வாகனத்தை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

<u>*வானூர்தியியல் பொறியியல் திணைக்களம்*</u>

- *BSc in Aeronautical Engineering திட்டத்திற்கான IESL அங்கீகாரத்தைப் பெறுதல்.*
- *Aeronautical Engineering பட்டப்படிப்புத் திட்டத்திற்கான அங்கீகாரத்தை ஐக்கிய இராச்சியத்தின் RAeS இலிருந்து பெறுதல்.*
- *MSc in Aviation Maintanence பட்டப்படிப்புத் திட்டத்தை தொடங்குதல்.*

5.5. சட்ட பீடம் (FOL)





பீடாதிபதி

Mr. WS விஜேசிங்க

அறிமுகம்

பயிற்சி அதிகாரிகளுக்கு சட்டக் கல்வியை வழங்குவதற்காகவும், அவர்கள் இலங்கையின் இராணுவப்பப்படையில் சட்ட அதிகாரிகளாக ஆவதற்கான தகுதிகளை பெறுவதற்காகவும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடமானது 2011 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இதில் தற்போது 4 intake களில் சுமார் 500 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அவர்களுள் இராணுவப்படை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், பயிற்சி அதிகாரிகள் மற்றும் தினவருகை மாணவர்கள் அடங்குவர். இப்பீடமானது புதிய பாடத்திட்டம் மற்றும் பலம்மிக்க கல்வி அனுபவத்துடன் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளை சட்டக்கலையில் வழங்குகிறது.

தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் உள்ள பிற சட்டக் கல்லூரிகளுக்கு மத்தியில் சட்டத்தை நன்கு கற்பிக்கும் முன்னணி இருக்கையாக தொடர்ந்து அங்கீகரிக்கப்படுவதே இந்த பீடத்தின் முக்கிய அம்சமாகும். இது பொதுச் சட்டம், வணிகச் சட்டம், சர்வதேச சட்டம் மற்றும் இராணுவச் சட்டத் திணைக்களங்கள் ஆகிய நான்கு திணைக்களங்களை இப்பீடம் கொண்டுள்ளது. அத்துடன் Bachelor of Laws (LLB) and Master of Laws (LLM) of three specializations in International Law, Business Law and Public Law ஆகிய இரண்டு பட்டப்படிப்புகளை வழங்குகிறது. மேலும் பீடத்திற்காக ஒதுக்கப்பட்ட கல்விப் பணியாளர் பதவிகளின் மொத்த எண்ணிக்கை 22 ஆகும். அவற்றில் 12 பணியிடங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளன. மேலும், கல்வி சாரா மற்றும் நிர்வாகப் பணியிடங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட 08 பணியாளர்களில் 07 பேர் நிரப்பப்பட்டுள்ளனர்.

பீடத்தின் படிப்படியான விரிவுபடுத்தலுடன் கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் உகந்த சூழலில் மாணவர்களுக்கு சிறந்த வசதிகளை வழங்குவதற்காக புதிய கட்டிடம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன்படி, 3900 சதுர அடி பரப்பளவில் 6 மாடிகள் கொண்ட புதிய கட்டிடம் கட்டுவதற்காக 19.08.2021 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இது 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடைவுகள்

- 2022 ஆம் ஆண்டின் 'NICA' Team Law Schools Ranking' எனப்படும் சட்டக் கல்லூரிகளின் தரவரிசையின் கீழ் இந்த சட்ட பீடமானது இலங்கையில் 2 வது இடத்திலும், ஆசியாவில் 25 வது இடத்திலும், உலகில் 83 வது இடத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- 3900 சதுர அடி பரப்பளவில் 6 மாடிகளைக் கொண்ட பீடத்தின் புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

- *KDU law journal* ஆனது *30.08.2022* முதல் அங்கீகரிக்கப்பட்ட அறிவார்ந்த வெளியீடாக *Hein-Online* தரவுத்தளத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.
- *KDU law journal* இன் *(KDULJ)* தொகுதி *02* இன் வெளியீடு *II* ஆனது *29.09.2022* அன்று வெளியிடப்பட்டது.
- *15.03.2022* அன்று நடைபெற்ற ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல *memorial moot court competition* இல் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் முதலாம் இடத்தைப் பிடித்த அதேவேளை கொழும்பு பல்கலைக்கழக அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

மாணவர்களின் அடைவுகள்


- *2022* ஆம் ஆண்டில் நடைபெற்ற பீடங்களுக்கிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டியில் சட்ட பீடத்தைச் சேர்ந்த அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது.
- *2022* ஆம் ஆண்டில் நடைபெற்ற பீடங்களுக்கிடையேயான கூடைப்பந்தாட்டப் போட்டியில் சட்ட பீடத்தைச் சேர்ந்த பெண்கள் அணி முதலாம் இடத்தை வென்றது.
- *Intake 37* ஐ சேர்ந்த சட்ட இளங்கலை பட்டதாரியான திரு. *LKH* திலகரத்ன *2022* ஆம் ஆண்டில் நடைபெற்ற மேல் மாகாண பளுதூக்கும் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.
- *2022* மார்ச் மாதத்தில் நடைபெற்ற *Jean Pictet Mooting Competition* இல் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் குழுவானது அரையிறுதிப் போட்டியாளர்களாக உருவெடுத்தது மற்றும் இக்குழுவின் உறுப்பினர் சந்திரிகா மனமேந்திரா சிறந்த பேச்சாளருக்கான *Gilbert-Appollis* விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டார்.
- *15.03.2022* அன்று நடைபெற்ற ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல *memorial moot court competition 2022* இல் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அணி வெற்றியடைந்தது. அத்தோடு குழுவின் உறுப்பினர் சந்திரிகா மனமேந்திரா போட்டியின் சிறந்த வாய்மொழிக் கலைஞராக விருது பெற்றார்.
- சட்ட பீடத்தின் இளங்கலை மாணவர்களைக் கொண்ட இரண்டு அணிகள் *2022* ஒக்டோபரில் *S.M Mustapha Memorial Moot Court Competition* இற்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. *'A'* அணியானது இரண்டாம் இடத்தை பிடித்தது. இதற்காக சிறந்த *Memorandum, runner-up* இற்கான விருது *A* அணியிற்கு வழங்கப்பட்டது. *'B'* அணியானது முதலாம் இடத்தை பெற்றது. இதற்காக சிறந்த *Memorandum, champions* இற்கான விருது *B* அணியிற்கு வழங்கப்பட்டது.

எதிர்காலத் திட்டங்கள்

- பீடத்தின் புதிய கட்டிடத்தின் கட்டுமானங்களை முடித்தல்.
- *Corporate plan 2023 – 2027* எனும் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.
- திணைக்களத் தலைவர்களை நியமிப்பதன் மூலம் சட்ட பீடத்தில் புதிய திணைக்களங்களை செயற்படுத்துதல்.
- *2023* ஆம் ஆண்டின் உலக சுற்றுச்சூழல் தினத்திற்காக சீரழிந்த சுற்றுச்சூழல் அமைப்பை அதன் முந்தைய நிலைக்கு மீட்டெடுத்தல்.
- கடந்த காலப் பட்டதாரிகளின் தரவுத் தளம்/ அவர்களின் சுயவிவரங்களைத் தயாரித்தல்.

5.6. முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம், மனிதநேய பீடம் (FMSH)





பீடாதிபதி

Mr. WAAK அமரதுங்க

அறிமுகம்

முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதநேய பீடமானது *(FMSH)* மூன்று கல்வித் திணைக்களங்களைக் கொண்டுள்ளது. அவையாவன: முகாமைத்துவம் மற்றும் நிதித் திணைக்களம், சமூக விஞ்ஞான திணைக்களம் மற்றும் மொழித் திணைக்களம் ஆகும், இம் 3 திணைக்களங்களுக்கு மேலதிகமாக *logistics* முகாமைத்துவம், முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், மனிதநேயம் மற்றும் மொழிகள் ஆகிய துறைகளில் பட்டம் மற்றும் பிற கல்வித்திட்டங்களை நடத்துகின்றனர். மேலும், இப்பீடமானது முதுமாணி பட்டப்படிப்புகளை நடத்துவதற்காக பட்டதாரி கற்கைகள் பீடத்திற்கும் இணைந்த பாதுகாப்பு நிறுவனங்களின் கல்வித் திட்டங்களை நடத்துவதற்காக அனைத்து இணைந்த பாதுகாப்பு நிறுவனங்களுக்கும் தனது உதவியை வழங்குகிறது.

சர்வதேச தரத்திலான மனித வளங்களை உற்பத்தி செய்வதற்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப சுவையுடன் கூடிய முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதநேயம் ஆகிய துறைகளில் அறிவைப் பெறுதல், உருவாக்குதல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றின் மூலம் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பணியை அடைவதில் முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதநேய பீடமானது பங்களிப்புச் செய்கிறது. நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளவதற்கான அறிவு, திறமை, தைரியம், அர்ப்பணிப்பு மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றால் வலுவூட்டப்பட்ட சீரான இளங்கலை பட்டதாரிகள் மற்றும் முதுகலை பட்டதாரிகளின் உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்கிறது.

பீடத்தின் அடைவுகள்

பீடமானது 2022 ஆம் ஆண்டில் 238 பட்டதாரிகளை உருவாக்கியது. மேலும் இதன் உள்கட்டமைப்பு மேம்பாட்டின் அடிப்படையில் ஏழு மாடிகளைக் கொண்ட பீடத்தின் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் 11.06.2021 அன்று தொடங்கப்பட்டு தற்பொழுது கட்டத்தில் உள்ளன.

பீடத்தின் உறுப்பினர்கள் இருபத்தி நான்கு (24) ஆய்வுக் கட்டுரைகளை பரிந்துரைக்கப்படாத ஆராய்ச்சி இதழ்கள் மற்றும் தேசிய/சர்வதேச மாநாடுகளில் வெளியிட்டனர்.

Intake 35 இன் சிறந்த *All Round Performance* இற்கான *Sword of Honour* விருதை *CL* உடுமுல்லைஆராச்சி *(5496)* வென்றார்.

சிறந்த மாணவர் அதிகாரிக்கான கோப்பையானது *BSc in Social Science* பட்டப்படிப்பு திட்டத்தின் *EWDH* எகொடவத்தைக்கு 2022 ஆம் ஆண்டின் பொது பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட்டது

FMSH இன் அணிகள் பீடங்களுக்கிடையேயான போட்டிகள் முழுவதும் சிறந்த விளையாட்டுத்திறனையும் உற்சாகத்தையும் வெளிப்படுத்தி ஸ்குவாஷ், கரப்பந்து கிரிக்கெட் மற்றும் நீச்சல் போன்றவற்றில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

Shihan Bonnie Roberts Cup National Championship இல் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கராத்தே அணியில் உள்ள சமூக விஞ்ஞான துறையைச் சேர்ந்த பத்து *(10)* கெடட்கள் மொத்தமாக *56* பதக்கங்களைப் பெற்று புதிய பதக்க சாதனையைப் படைத்தனர்.

BSc in Applied Data Science Communication பட்டப்படிப்புத் திட்டத்தை சேர்ந்த சேத்தனா ரூபசிங்க மற்றும் தினுஷா ஹேரத் ஆகிய இருவரும் *Data Analyst Associates* ஆக உருவாகியுள்ளனர்.

நிகழ்வுகள்

- கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக *logistics* தினம் மற்றும் *"logistics times"* எனப்படும் இதழின் *07*வது பதிப்பின் வெளியீடானது *2022*ஆம் ஆண்டில் நடைபெற்றது
- *"*வன்முறையற்ற தகவல்தொடர்பு மற்றும் ஊடகத்தை ஊக்குவித்தல்*"* எனும் தொனிப்பொருளிலமைந்த இரண்டாவது சான்றிதழ் பாடத்திட்டத்தின் தொடக்க விழா *2022* ஆம் ஆண்டு நடைபெற்றது
- திரு. கித்சிறி அமரதுங்க *(FMSH* பீடாதிபதி*)* அவர்கள் எழுதியது *R.K* நாராயணின் நாவலான *The Vendor of Sweets* இன் சிங்கள மொழிபெயர்ப்பான *'*ராச கெவிலி வெலந்த*'* என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா நடைபெற்றது.
- *"*ஆசிய சித்தாந்தத்தை நோக்கிய கலாச்சார இணைப்புகள் *2022/2023"* எனும் குறுகிய பாடத்திட்டத்திற்கான மெய்நிகர் தொடக்க விழா. மற்றும் *British* கவுன்சிலின் ஒத்துழைப்புடன் கூடிய *Active Citizens project* இற்கு கீழான மாணவர் திட்டங்கள்

வெளிநாட்டு ஒத்துழைப்பு

ஜெனரல் சேர் ஜான் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் *(KDU)* மற்றும் ஜப்பானின் *JF Oberlin* பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்களும் கல்விசார் ஒத்துழைப்புக்காக *30* ஆகஸ்ட் *2022* அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் *(MoU)* கையெழுத்திட்டன. இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பிற்கான பொதுவான கட்டமைப்பை வழங்குவதே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கமாகும். இரு பல்கலைக்கழகங்களும் மாணவர் பரிமாற்றத் திட்டங்கள், கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் கல்வி மற்றும் கல்விப் பொருட்களின் பரிமாற்றம் ஆகியவற்றில் பங்கேற்க விரும்புகின்றன. *Oberlin* பல்கலைக்கழகத்தின் கல்வியாளர்களுடன் *FMSH* இன் டாக்டர் ஹேமந்த பிரேமரத்ன அவர்கள் பேணும் ஆரோக்கியமான கூட்டுறவின் விளைவாகவே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் சாத்தியமானது.

எதிர்கால திட்டங்கள்

ஏழு மாடிகளைக் கொண்ட பீடத்தின் புதிய கட்டிடத் தொகுதியின் கட்டுமானப் பணிகளை முடிக்க இப்பீடம் திட்டமிட்டுள்ளது. ஊடக ஆய்வு மையத்தை நிறுவுதல். முகாமைத்துவ மற்றும் நிதித் திணைக்களத்தை மறுசீரமைத்தல். , முகாமைத்துவம் மற்றும் நிதித் திணைக்களம் மற்றும் சமூக விஞ்ஞான திணைக்களம் ஆகியவற்றின் பாடத்திட்டங்களைத் திருத்துதல். *SLQF* நிலை *6* பட்டப்படிப்பு திட்டத்தை உருவாக்குதல். கல்வி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை உள்ளடக்கிய தர மேம்பாட்டு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல்.

5.7. இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் (FAHS)





பீடாதிபதி

Surgeon (Capt.) NRP பெரேரா

அறிமுகம்

இணைந்த சுகாதார அறிவியல் பீடமானது இலங்கையில் சுகாதார விநியோக முறையை மேம்படுத்துவதற்காக கல்வித் தகுதியுடைய துணைச் சுகாதார நிபுணர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் (FAHS) நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் இது இரத்மலானையில் உள்ள மருத்துவ பீட கட்டிடத்தில் இருந்தது. பின்னர் இப்பீடமானது 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக மருத்துவமனையை ஒட்டியுள்ள வெரஹெராவில் உள்ள புதிதாக கட்டப்பட்ட பிரிவுக்கு மாற்றப்பட்டது. இப்பீடத்திற்கான முதலாவது மாணவர் சேர்க்கையானது BSc (Hons) in Medical Laboratory Sciences, BSc (Hons) in Nursing, BSc (Hons) in Physiotherapy, BSc (Hons) in Radiography and Bachelor of Pharmacy (Hons) ஆகிய பட்டப்படிப்புத்திட்டங்களுக்காக 2013 ஆண்டு ஜனவரியில் அனுமதிக்கப்பட்டது. இப்பீடத்தின் மாணவர் தொகையில் சிவில் மாணவர்கள், வெளிநாட்டு மாணவர்கள், இராணுவ பணியாளர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் பக்கவாட்டு நுழைவு மாணவர்கள் ஆகியோர் உள்ளனர். கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக ஊழியர்களின் வழிகாட்டல் மற்றும் பயிற்சியின் கீழ் வெரஹெர மற்றும் இரத்மலானையில் கிடைக்கும் ஆளுமை மேம்பாடு, மாணவர் நலன் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவற்றை அனுபவிக்கும் அதே வேளையில் மாணவர்கள் தடையற்ற கல்வி கற்றலில் பங்கேற்கின்றனர்.

அதைத் தொடர்ந்து, கதிரியக்கவியல் மற்றும் கதிரியக்க சிகிச்சைத் திணைக்களமானது BSc (Hons) in Radiography பட்டப்படிப்புக்கு மேலதிகமாக BSc (Hons) in Radiotherapy பட்டப்படிப்பை வழங்கத் தொடங்கியது. இப்பீடத்தால் வழங்கப்படும் பட்டப்படிப்புத்திட்டங்கள் யாவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) பரிந்துரைகள் மற்றும் இலங்கை தகுதிகள் கட்டமைப்பு ஆகியவற்றுக்கு (SLQF) இணங்குகின்றன. ஒவ்வொரு பட்டப்படிப்பு திட்டங்களின் பாடத்திட்டத்தின் கற்றல் முடிவுகளும் இலங்கையின் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட (SLQF 6 க்கு) விளக்கங்களின் மட்டத்தினுடைய பன்னிரண்டு உத்தேசித்த கற்றல் விளைவுகளுடன் (ILOs) நன்கு பொருந்துகின்றன.

இணைந்த சுகாதார மருத்துவ பீடமானது Medical Laboratory Sciences, Nursing & Midwifery, Physiotherapy & Occupational therapy, Radiography and Radiotherapy, Basic Sciences and Multi-Disciplinary Studies என ஏழு திணைக்களங்களைக் கொண்டுள்ளது. Basic Sciences and Multi- disciplinary Studies திணைக்களமானது அதன் அனைத்துப் பட்டப்படிப்புகளுக்கும் பொதுவான பாடங்களைக் கற்பிப்பதன் மூலம் இப்பீடத்தின் ஒவ்வொரு திணைக்களத்திற்கும் கல்வியை வழங்குகிறது. தற்போது இணைந்த சுகாதார மருத்துவ பீடத்தில் 58 கல்விசார் ஊழியர்களும் 20 கல்வி உதவி ஊழியர்களும் 02 நிர்வாக ஊழியர்களும் மற்றும் 39 கல்விசாரா ஊழியர்களும் உள்ளனர். இப்பீடத்தின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 827 ஆகும்.

அடைவுகள்

- நாற்பத்தைந்து *(45) Medical Laboratory Sciences* பட்டதாரிகள் மருத்துவ ஆய்வுகூடப் பட்டதாரிகளாக அரசுத் துறையில் பணியமர்த்தப்பட்டனர்.

எதிர்காலத் திட்டங்கள்

- *2023* ஆம் ஆண்டில் *Sports Physiotherapy* இல் முதுகலை பட்டப்படிப்புத் திட்டம் ஆரம்பித்தல்.
- அடிப்படை விஞ்ஞான திணைக்களத்தின் *Diploma in Sports Sciences and Management* திட்டத்தை ஆரம்பித்தாலும் மேம்படுத்தலும்.
- இலங்கையிலுள்ள *Radiography* பட்டதாரிகளுக்கான புதிய முதுகலை பட்டப்படிப்பு திட்டத்தை *(MSc)* உருவாக்குதல்.
- இலங்கையிலுள்ள *Radiotherapy* பட்டதாரிகளுக்கான புதிய முதுகலை பட்டப்படிப்பு திட்டத்தை *(MSc)* உருவாக்குதல்.
- இலங்கையிலுள்ள *MRI* பயிற்சியாளர்களுக்கான *Magnetic Resonance Imaging* இல் *(MRI)* புதிய முதுகலை டிப்ளோமா திட்டத்தைத் தொடங்குதல்
- *Radiography and Radiotherapy* திணைக்களத்தின் உள்ளக ஊழியர்களுக்கான திறன் மேம்பாட்டை ஏற்படுத்தவும் *Radiography* மற்றும் *Radiotherapy* ஆய்வுகூடங்களுக்குத் தேவையான ஆய்வக உபகரணங்களைப் பெறுவதிலும் கவனம் செலுத்துவதற்காக *AEB (Atomic Energy Board)* மூலமாக *IAEA (International Atomic Energy Agency)* உடனான கூட்டுறவொன்றை நிறுவுதல்.

5.8. கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடவியல் அறிவியல் பீடம் (FBESS)





பீடாதிபதி
பீடாதிபதி- Dr. AH லக்மால்

அறிமுகம்

கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடவியல் அறிவியல் பீடம் (FBESS) பெப்ரவரி 11, 2015 அன்று சூரியவெளவில் உள்ள தெற்கு வளாகத்தில் நிறுவப்பட்டது. FBESS ஆனது கட்டிடக்கலை, அளவையியல் மற்றும் இடஞ்சார்ந்த அறிவியல் ஆகிய கல்வித் துறைகளில் நிபுணத்துவம் பெற்ற நான்கு துறைகளைக் கொண்டுள்ளது, மேலும் நாட்டின் வளர்ச்சி சார் முயறசிகளுக்கு தகுதியான நிபுணர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான தர முகாமைத்துவத்தில் முன்னணியில் உளள் து. மேலும், FBESS இனால் நிர்வகிக்கப்படும் ஆங்கில கற்பித்தல் அலகினால் (ELTU) மாணவர்களின் ஆங்கில மொழித் திறன் மற்றும் பிராந்தியத்தில் உள்ள பொது மக்களின் மொழித் திறன்களை மேம்படுத்தும் பொறுப்பும் நிறைவேற்றப்படுகின்றது.

இப் பீடத்தில் விளையாட்டு வசதிகள், ஒரு நூலகம், ஒரு கணினி ஆய்வகம், ஒரு முழுமையான கட்டிடக்கலை அலுவலகம், ஒரு வரைபட ஆய்வகம், ஒரு புவியியல் ஆய்வகம் மற்றும் ஒரு அதி நவீன கேட்போர் அரங்கம் உட்பட தேவையான அனைத்து உள்ளக வசதிகளையும் கொண்டுள்ளது. FBESS தற்போது சர்வதேச தர நியமங்களை பூர்த்தி செய்யும் வகையில் புதுப்பிக்கப்பட்டு, மேலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச மாணவர்களை எதிர்காலத்தில் பதிவு செய்துகொள்ள தயாராக உள்ளது.

அடைவுகள்

மனித வள வளர்ச்சி

இந்த ஆண்டில் கட்டிடக்கலைத் துறைக்கு இணைப் பேராசிரியர் ஒருவர் சேவையில் சேர்க்கப்பட்டார். கல்வி ஊழியர்கள் பிரிவில் சேவை உயர்வுகள் இருந்தன. இரண்டு பணியாளர்கள் சிரேஷ்ட விரிவுரையாளர் Gr II தரத்திற்கு உயர்த்தப்பட்டனர். மற்றொரு உறுப்பினர் விரிவுரையாளராக பதவி உயர்வு பெற்றார். மேலும், இரண்டு கல்வி ஊழியர்கள் தங்கள் முனைவர் பட்டத்தையும், இரண்டு கல்வி ஊழியர்கள் முதுமாணி பட்டத்தையும் முடித்தனர். Rotaract இளைஞர் தலைமை விருதுகளில் KDU தெற்கு வளாகத்தின் Rotaract Club பங்கேற்றதோடு தெற்கு வளாகத்தின் ஒரு பிரதிநிதி சிறந்த பெண் Rylarian விருதை வென்றார். அமெரிக்காவைச் சேர்ந்த A Fulbright scholar அறிஞர் ஒருவர் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் கற்பித்தல் மற்றும்

இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக முதல் முறையாக ஆசிரியப் பிரிவில் இணைந்துள்ளார்.

நிறுவன மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு

தொழில்துறை தர முகாமைத்துவத் துறையானது நிறுவனமயமாக்கப்பட்டு, 40வது நுழைவுத் தேர்விலிருந்து தொழில்துறை தர முகாமைத்துவம் மற்றும் சேவைகளில் இளமாணி (Hons) கற்கைகளை வழங்கத் தொடங்கியது. அளவையியல் பிரிவானது, இலங்கை நில அளவையாளர்களின் நிறுவனத்திடமிருந்து (IQSSL) மூன்று வருடங்களாக அளவையியல் இளமாணி (Hons) கற்கைகளுக்கான நிபந்தனைக்குட்பட்ட அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. கட்டிடக்கலை பீடமானது SLIAஇன் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முன்னெடுப்புக்களில் இடப்பட்டுள்ளதுடன் தற்போது அங்கீகரிக்கப்பட்ட அந்தஸ்தையும் பெற்றுள்ளது.

சிற்றுண்டிச்சாலைகள், மைதானங்கள், நீச்சல் குளங்கள் மற்றும் ஆசிரிய கட்டிடங்களுக்கான விரிவாக்கங்களை அடையாளம் காண ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. வகுப்பறை மற்றும் கணினி அறையுடன் கூடிய புதிய கட்டடம் பாதுகாப்புச் செயலாளரினால் திறந்து வைக்கப்பட்டது. 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கி படிக்கும் வகையில் புதிய விடுதி கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இளமாணிப் கற்கைகளை உருவாக்க ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் எமது பீடமானது முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது.

விருதுகள், ஆராய்ச்சி, மாநாடுகள் மற்றும் நிதி திட்டங்கள்

இளமாணி ஆய்வுச் சங்கமானது FBESS இன் முதல் மாணவர் ஆராய்ச்சி சங்கமாக "மாணவர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கான ஆராய்ச்சியை மறுபரிசீலனை செய்தல் மற்றும் வடிவமைத்தல்" என்ற தொனிப்பொருளில் நிறுவப்பட்டது. முதன் முறையாக, "தேசிய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நிலைத்தன்மையை மீட்டெடுத்தல்" என்ற தலைப்பில் KDU IRC மாநாடு 2022இல் தெற்கு வளாகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது.

2022 ஆம் ஆண்டில், எமது ஆசிரிய ஆராய்ச்சியாளர்கள் 53 அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டிருந்தனர். குறித்தஆண்டில் மொத்தம் 113 ஆய்வு ஆவணங்கள் மதிப்பாய்வுக்காக பதிவு செய்யப்பட்டன.

Dr. F.R. அருஸ், கண்டியை அண்டிய பிரதேசங்களில் நகர்ப்புற பள்ளத்தாக்குகளில் காற்றின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் உலக பாரம்பரிய நகரங்களில் வாழ்க்கைத் தரத்தை மீட்டெடுத்தல் எனும் ஆராய்ச்சிக்காக மொத்தம் 1.7 மில்லியன் ரூபா மதிப்பிலான ஆராய்ச்சி மானியத்தைப் பெற்றார்.

எதிர்கால திட்டங்கள்

சொத்து நிர்வாகத்தில் இளமாணி பட்டமானது (Hons) தொழில் மற்றும் தர முகாமைத்துவ துறையில் நிறுவப்பட எதிர்பார்க்கப்படுகிறது. பீடத்தின் தற்போதுள்ள கட்டிடத்திற்கான விரிவாக்கத்தை அடுத்த ஆண்டு பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலதிகமாக,

மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் வேலை செய்ய வசதியாக *BIM* ஆய்வகம் அமைக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது. கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் துறையுள் ஆய்வேடு ஒன்றினை *(Journal) (KDU-JBE)* வெளியிடவும் எதிர்பார்க்கப்படுகிறது.

5.9. கணினி அறிவியல் பீடம்





பீடாதிபதி
Dr. ADAI குணசேகர

அறிமுகம்

KDU இன் கணினி அறிவியல் பீடமானது (FOC) 2015 இல் நிறுவப்பட்டது. இது இலங்கையின் பொது பல்கலைக்கழக அமைப்பில் பரந்த அளவிலான கணினி அறிவியல் துறைகளை வழங்குவதற்காக கட்டமைக்கப்பட்ட முதல் கணினி அறிவியல் பீடமாக உருவாக்கப்பட்டது. FOC இனால் வழங்கப்படும் அனைத்து கற்கைகளும் சர்வதேச ACM/IEEE இன் நியமங்களுடன் பேணப்படுகின்றன. கணினி அறிவியல், கணினி பொறியியல், வன்பொருள் மற்றும் மென்பொருள், கணினி அறிவியலின் தொழில்நுட்ப மற்றும் சமூக அம்சங்கள் மற்றும் கணினி அறிவியலின் கணித மற்றும் புள்ளிவிபரவியல் தத்துவார்த்த அடிப்படையில் கற்பித்தல் மற்றும் ஆய்வுச் செயற்பாடுகளுக்கு ஆசிரிய உறுப்பினர்கள் பங்களிக்கின்றனர். FOC ஆனது க.பொ.த (உ/த) மாணவர்களுக்கு பௌதிகவியல், வாழ்க்கை அறிவியல், கலை மற்றும் வணிகம் ஆகியவற்றில் கணினி அறிவியல் பட்டங்களைப் பெறுவதற்கான சிறந்த வாய்ப்புகளை வழங்குவதோடு உலகளாவிய கணினித் துறையில் அதிக ஊதியம் பெறும் தொழில்களுக்கான வாய்ப்பு வழிகாட்டல்களையும் வழங்குகிறது.

FOC தற்போது நான்கு துறைகளைக் கொண்டுள்ளது: கணினி அறிவியல் துறை, தகவல் தொழில்நுட்பத் துறை, கணினி பொறியியல் துறை மற்றும் கணக்கீட்டு கணிதத் துறை. கணினி அறிவியலில் இளமாணி அறிவியல் (Hons), கணினிப் பொறியியலில் இளமாணி அறிவியல் (Hons), மென்பொருள் பொறியியலில் இளமாணி அறிவியல் (Hons), தகவல் தொழில்நுட்பத்தில் இளமாணி அறிவியல் (Hons), தகவல் அமைப்புகளில் இளமாணி அறிவியல் (Hons), தரவு அறிவியல் மற்றும் வணிக பகுப்பாய்வுகளில் இளமாணி அறிவியல் (Hons) ஆகிய நன்கு வருட கற்கைகளை இப்பீடமானது வழங்குகிறது. 2022 ஆம் ஆண்டில், கோவிட்-19 தொற்றுநோயிலிருந்து FOC பல சவால்களை எதிர்கொண்ட நிலையிலும் மாணவர்களுக்கு கல்வியூட்டுவதற்கான வலுவான உத்தியை உருவாக்கியது. FOC ஊழியர்களும் மாணவர்களும் மேற்கண்ட சவால்களை சமாளிக்க தங்களால் இயன்றதைச் முயற்சியாலை மேற்கொண்டனர். இதன்போது பின்பற்றப்பட்ட நடைமுறைகளில் வெற்றிகளையும் பெற்றுள்ளனர்.

மேலும், CSSL (Computer Society of Sri Lanka) ஆனது FOC இனால் வழங்கப்படும் இளமாணி கணினி அறிவியல் (Hons), தகவல் தொழில்நுட்ப இளமாணி (Hons) மற்றும் தகவல் அமைப்புகளில் இளமாணி அறிவியல் (Hons) போன்ற கற்கைகள் CSSL நியமங்களைப் பூர்த்தி செய்வதால் இக் கற்கைகளுக்கு முழு ஐந்தாண்டு அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. மேலும், இன்டேக் 39 (2022) முதல் இன்டேக் 43 (2026) வரை மேற்கூறிய கற்கைகளுக்கு முழுமையான தரப் புள்ளிகளும் வழங்கப்பட்டன. மட்டுமன்றி இன்டேக் 37 (2020), இன்டேக் 38 (2021) ஆகியனவும் CSSL நியமங்களைப் பூர்த்தி செய்துள்ளமையால் அவற்றுக்கும் முழுமையான தரப் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

அடைவுகள்

- 15வது IRC-KDU இல் கணினி அறிவியல் துறை II இல் சிறந்த வாய்வழி விளக்கக்காட்சி மற்றும் சிறந்த சுவரொட்டி விளக்கக்காட்சிக்கான விருதை Dr. பி. ஹெட்டிகே வென்றார்.
- செல்வி. MAST குணதிலக 2022 இல் 15 வது IRC KDU இல் மாநாட்டு இணைச் செயலாளராக செயற்பட்டார்.
- மேலும் அவர் 15வது IRC KDU இல் சிறந்த போஸ்டர் வழங்கல் விருதையும் வென்றார்.
- 2022 இல், Erasmus+ திட்டத்தின் கீழ் HCI ஆய்வகத்திற்கான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களுக்கான அன்பளிப்பினை FOC இனால் பெற முடிந்தது.
- FOC மாணவர்கள் கல்லூரிகளுக்கிடையேயான கிரிக்கெட் சாம்பியன்ஷிப்பை வென்றதோடு கல்லூரிகளுக்கிடையேயான ரக்பி போட்டியில் 2வது இடத்தையும் பெற்றுள்ளனர்.
- மேலும், U-sports NSBM இல் FOC மாணவர்களான RAMB ரன்சிங்க 1வது இரண்டாம் இடத்தையும் AABB அத்துகோரல மகளிர் அணிகளின் இரண்டாம் இடத்தையும் வென்றனர். 2022 செப்டம்பர் 21 மற்றும் 30 தேதிகளில் NSBM பசுமைப் பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தடகளப் போட்டிகளில் P சஞ்சி, RMPB ரத்நாயக்க, WNN குலரத்ன மற்றும் RGS தீமந்தா ஆகியோர் வெற்றி பெற்றனர்.
- FOC மாணவி எஸ்.ஆர்.சினதிரா, Rotaract Club இன் பணிப்பாளர் குழுவிற்கு தகவல் தொடர்பு பணிப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டதோடு சிறந்த பேச்சாளர் மற்றும் சிறந்த விவாதப் பேச்சாளருக்கான டோஸ்ட்மாஸ்டர் விருதுகளையும் பெற்றார்.
- FOC மாணவர் NDEA பெரேரா என்பவர் KDU Toastmaster நிகழ்வில் சிறந்த மதிப்பீட்டாளர் விருதைப் பெற்றார்.
- JMDT நிபுல் மற்றும் AU ஜெயவீர ஆகியோர் 2022 அக்வாடிக் பயிற்சி நீச்சல் சம்பியன்ஷிப்பை வென்றனர்.
- FOC ஆல் 2022 இல் சர்வதேச கணினியல் ஆராய்ச்சி இதழின் தொகுதிகளை (தொகுதிகள் 1 மற்றும் 2) வெளியிட முடிந்தது.
- FOC மாணவர்களுக்காக சூரியவெவ தெற்கு வளாகத்தில் மாணவர்களின் கட்டல் ஆர்வத்தினை மேம்படுத்தும் நோக்கில் கணினி பொறியியல் மின்னணு ஆய்வகம், கணினி பொறியியல் உருவகப்படுத்துதல் ஆய்வகம், திறந்த மூல ஆராய்ச்சி ஆய்வகம், நுண்ணறிவு ஆராய்ச்சி ஆய்வகம் (HPC கிளஸ்டர் உட்பட மெய்நிகர் ஆய்வகம்) ஆகியவற்றுக்கான புதிய நான்கு மாடி கட்டிடம் மற்றும் ஆய்வக வசதிகளை FOC ஆனது நிர்மாணித்துள்ளது.

எதிர்கால திட்டங்கள்

2023ம் ஆண்டு கணினி அறிவியலில் முதுமாணிப் பட்டப்படிப்பை முடிக்க FOC திட்டமிட்டுள்ளது. மேலும், நிரலாக்க மாணவர்களுக்கான துவக்க முகாமையும் இப் பீடமானது திட்டமிட்டுள்ளது.

5.10. தொழிநுட்ப பீடம் (FOT)



பீடாதிபதி
Dr KMGP பிரேமதாஸ

அறிமுகம்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (KDU) தொழிநுட்ப பீடம் (FOT) ஆனது பெப்ரவரி 2021இல் நாட்டிற்கு சேவை செய்வதற்கான எதிர்கால நோக்குடன் KDU இன் 10 வது பீடமாக தொழிநூட்ப பீடம் நிறுவப்பட்டது. இப் பீடமானது தொழிநுட்பத்தில் தேர்ச்சி பெற்ற தொழில் அனுபவம் உள்ள மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. எமது நாடானது 2022இல் குறிப்பிடத்தக்க சிரமங்களுக்கு முகம்கொடுத்தபோதிலும் இப்பீடத்தில் பணியாற்றும் ஊளியர்களின் கடின உழைப்பு காரணமாக இப் பீடமானது ஒரு அசாதாரணமான உற்பத்தி ஆண்டைக்கொண்டுள்ளது. தொழிநுட்ப பீடத்தின் முக்கிய நோக்கம் தொழிநூட்ப மற்றும் திறமைகளில் தேர்ச்சி பெற்ற தொழிநுட்ப வல்லுநர்களை உருவாக்குவதாகும். தொழிநூட்ப பீடத்தில் மாணவர்கள் தொழில்துறையில் புதிய தொழிநுட்பங்களின் வடிவமைப்பு மேம்பாடு மற்றும் செயற்படுத்தல் ஆகியவற்றில் தங்கள் திறன்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் கற்றுக்கொள்ளுவார்கள்.

ஒவ்வொரு மாணவரும் தங்கள் திறனை அதிகரிக்க கூடிய புதுமையான மற்றும் ஆக்கபூர்வமான சூழல் உருவாக்கப்படுகின்றது. தற்போது தொழிநுட்ப பீடத்தில் பொறியியல் தொழிநுட்பத் துறை, உயிரியல் தொழிநுட்பத் துறை எனப்படும் இரு துறைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. இந்த துறைகள் கட்டுமான தொழிநுட்பம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் ஆகியவற்றில் 4 வருட SLQF நிலை 6 பட்டங்களுக்கான கற்கைகளை வழங்குகின்றன. ஆனைத்து கற்கைநெறிகளும் IESL அங்கீகார கையேட்டின்படி தயாரிக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் முதல் குழு பட்டப்படிப்பை முடித்தவுடன் தொழிநுட்ப பட்டதாரிகள் எனும் அங்கிகாரத்திற்கு விண்ணப்பிப்பார்கள்.

மாணவர்களை பயிற்றுவிப்பதற்காக இப் பீடத்துக்கு ஆதரவளிக்கும் தொழில்கூட்டாளர்களின் பரந்த வலையமைப்பும் காணப்படுகின்றது. இப் பீடத்தில் தொழிநுட்ப உட்கட்டமைப்பு கல்வியாளர்கள் மற்றும் தொழிநுட்ப பணியாளர்களின் குழு என்பன சிறப்பாக நிறுவப்பட்டுள்ளன. இப்பீடமானது தொழில்துறையில் உள்ள பல்வேறு நிறுவனத்தினருடன் வலுவான தொடர்புகளைக் கொண்டுள்ளதோடு கற்றல் நடவடிக்கைகளுக்கு துணைபுரியும் வகையில் விரிவுரைகள் மற்றும் வகுப்புகளை நடத்துவதற்கு தொடர்ந்து அவர்களை உள்வாங்குகின்றது.

சாதனைகள்

ஜனவரி 10, 2022 அன்று இரத்மலானையில் உள்ள KDU கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விழாவின் போது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 10 வது பீடமாக தொழிநுட்ப பீடம் திறந்து வைக்கப்பட்டது. திறமையான பட்டதாரிகள் மற்றும் பணியாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன் KDU ஆனது இப் புதிய பீடத்தை நிறுவியுள்ளது.

KDU இல் நிறுவப்பட்டுள்ள 12 பீடங்களில் மாணவர் தரவு முகாமைத்துவ அமைப்பை நிறுவிய முதல் பீடமும் இதுவேயாகும். இதன்மூலம் அனைத்து மாணவர்களின் கல்வித் தரவுகளையும் செயல்முறைகளையும் ஒருங்கிணைத்து, பீடத்தின் கல்வி மற்றும் நிர்வாகத் திறனை மேம்படுத்த காத்திரமான வாய்ப்பு அமைந்துள்ளது. அத்தோடு இம் முறைமையானது ஒரு ஆற்றல்மிக்க கல்வி நாட்காட்டியை இப் பீடத்தில் பராமரிக்கவும் மாணவர்களுக்கு தொழில்துறை பயிற்சியை திறம்பட ஏற்பாடு செய்யவும் வழிவகுத்துள்ளது. ஆசிரியர்களுக்கு உதவும் கல்வி கால அட்டவணை, விரிவுரை நடைமுறை நேரங்கள், தேர்வு கால அட்டவணைகள் மற்றும் விரிவுரையாளர் பணிகளில் ஏற்படும் மாற்றங்களை விரைவாக மாற்றியமைத்தல் போன்ற நடைமுறை செயற்பாடுகளுக்கும் இம் முறைமையானது ஒரு செயர்தலத்தினை வழங்குகின்றது.

FOT ஆனது KDU இல் MATLAB மென்பொருள் தொகுப்பை அறிமுகப்படுத்தியதில் முன்னோடியாக உள்ளது. MATLAB என்பது பொறியியலாளர்கள், தொழிநுட்ப வல்லுனர்கள் மற்றும் விஞ்ஞானிகள் போன்றோர் சிக்னல் செயலாக்கும் படம் மற்றும் வீடியோ செயலாக்க கட்டுப்பாட்டு அமைப்புக்கள் மற்றும் கணக்கீட்டு உயிரியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அமைப்புகளை பகுப்பாய்வு செய்து மேப்படுத்துவதற்பான முறைமை ஆகும்.

FOT இனால் வழங்கப்படும் பட்டப்படிப்புக்கள் நடைமுறை சார்ந்தவை. எனவே, கைத்தொழில் பயிற்சி மையமொன்றினி (IETC) நிறுவுவதற்கும் தொழில்துறை ஒத்துழைப்பைப் பேணுவதற்கும் பீடத்தில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் குறுகிய மற்றும் நீண்ட கால தொழில்துறை பயிற்சி அமர்வுகளை ஏற்பாடு செய்வதற்கும் நிர்ப்பந்தமானதொரு தேவை நிலவியது. பீடத்திற்கான புதிய கட்டிடம் கட்டப்படும் வரை குறித்த மையங்கள் மற்றும் பௌதீக உள்கட்டமைப்புகளை சுயமாகவே நிறுவ முடிந்துள்ளது.

FOT ஆனது கட்டிட தொழிநுட்ப திட்டத்தினை சிவில் இன்ஜினியர்ஸ் நிறுவனத்தில் வெற்றிகரமாக பதிவு செய்துள்ளது. கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகளில் செயற்பாடு மற்றும் பராமரிப்பு எனப்படும் சான்றிதழ் கற்கையினை இணைந்த அடிப்படையில் நடாத்துவதற்கு நடத்துவதற்கு NWSDB உடன் KDU ஆனது ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. FOT தனது இளமாணி பட்டதாரிகளுக்கு அதிக வாய்புக்களை வழங்குவதற்காக தொழில்துறையுடன் நெருக்கமாக தொடர்பு கொள்ள இது மற்றொரு முயற்சியாகும். அனைத்து கல்வி மற்றும் பிற செயற்பாடுகளின் தரத்தை தொடர்ந்து மேம்படுத்த முற்படும் ஒரு கலாச்சரத்தை உருவாக்குவதற்கான நோக்குடன் இப் பீடத்தில் உள்ளக தர மேம்பாட்டு மையமும் (IQAC) நிறுவப்பட்டது.

தொழிநுட்ப பீடத்தின் இளமாணி பட்டதாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாக்க கண்காட்சி 30 ஜூன் 2022 அன்று நடைபெற்றது. இந்த கண்காட்சியானது மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த ஒரு காத்திரமான தளத்தை வழங்கியது. இப் பீடத்தின் முதல் மாணவர் அமைப்பான TechnoWiz Club ஆனது மார்ச் 22, 2022 அன்று நடைபெற்ற அங்குரார்ப்பன ஆண்டு கூட்டத்துடன் நிறுவப்பட்டது.

சர்வதேச தரத்திலான ஆய்வகங்கள் மற்றும் அதனுடன்தொடர்புடைய வசதிகளுடன் கூடிய 1400 மாணவர்களை உள்ளடக்கிய பீடத்துக்கான கட்டிடத்தை நிர்மானிப்பதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளது. வழக்கமான பாடநெறிகளுக்கு அப்பால் சென்று அனைத்து திறமையான நபர்களை அடையாளம் கண்டு வெகுமதி அளிக்கும் வகையில் ஆண்டின் சிறந்த மாணவர் முறை முதல் முறையாக

பீடத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. பீடங்களுக்கு இடையிலான 100 மீற்றர் பிரஸ்ட் ஸ்ட்ரோக் நீச்சல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றதன் மூலம் இப் பீடத்துக்கு முதன்முறையாக விளையாட்டு வெற்றியை அடைந்ததன் ஊடாக ICT மாணவர்கள் பீடத்திற்கு பெருமை சேர்த்தனர். ICT இளமாணி மாணவர்கள் 2022 ஆம் ஆண்டுக்கான தெற்கு கரப்பந்தாட்ட போட்டியிலும் வெற்றி பெற்றனர்.

FOT ஆனது Biopac முறைமையொன்றை பெற்றுக்கொண்டதன் மூலம், உயிர் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் உயிரியல் மருத்துவ பொறியியல் தொடர்பான நடைமுறை பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு புதுமையான ஆராய்ச்சி அமைப்பினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

எதிர்காலத்திட்டங்கள்

- அரசு ஊழியர்கள் பட்டக் கற்கைகளை பெற்றுக்கொள்ள பீடத்தில் வெளிவாரி நுழைவு வாய்ப்புகளை வழங்குதல்
- தொழில்துறைகளின் தொழிநுட்ப வல்லுனர்களுக்கான குறுகிய படிப்புகளை அறிமுகப்படுத்தல்
- முதுமாணி பட்டப்படிப்பை அறிமுகப்படுத்தல்
- வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் கல்வி ஆய்வுகளை தொடங்குதல்
- தொழில்நுட்ப பீடத்திற்கான சக மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழைத் தொடங்குதல்
- FOT இன் கட்டிடத்தினை 2025 இல் பூரணமாக்குதல்
- க.பொ.த (உ/த) உயிரியக்கவியல் தொழில்நுட்ப மாணவர்களுக்கு புதிய பட்டப்படிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்துதல்
- மின்காந்தம் முறைமை ஆய்வகத்தை (EMC) நிறுவுதல்
- கலப்பு யதார்த்த ஆய்வகமொன்றை நிறுவுதல்
- ICT துறையை நிறுவுதல்
- பீடத்தினால் வழங்கப்படும் பட்டக் கற்கைகளுடன் தொடர்புடைய தொழில்முறை அமைப்புக்களின் மாணவர் குழுமங்களை நிறுவுதல்

5.11. குற்றவியல் நீதிக் கற்கைகள் பீடம் (FOCJ)



பீடாதிபதி

தேசபந்து Prof. MADSJS நிரியேல்ல

அறிமுகம்

குற்றவியல் நீதி பீடமானது குற்றவியல் நீதித்துறையில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளை வழங்குவதற்காக இலங்கையின் உயர் கல்வி முறைமையில் நிறுவப்பட்ட முதலாவது பீடமாகும். இது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (KDU) பதினொன்றாவது (11வது) பீடமாகும். மற்றும் இதுவே கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இளைய பீடமாகும்.

கணிசமான எண்ணிக்கையிலான பாடசாலையிலிருந்து வெளியேறும் நபர்களும் தொழில் வல்லுநர்களும் குற்றவியல் நீதித் துறையில் உயர் கல்வியை நாடுவதால் இப்பீடமானது சரியான நேரத்தில் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. மேலும், இலங்கையில் குற்றவியல் நீதி மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளின் சமீபத்திய முன்னேற்றங்களே குற்றவியல் நீதி முறைமையில் ஈடுபட்டுள்ளவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான அவசியத்தை தீவிரப்படுத்தியுள்ளன.

BSc in Police Science மற்றும் BSc in Criminology and Criminal Justice போன்ற பட்டப்படிப்புகளுக்கு இலங்கை காவல் துறையிலிருந்து பொலிஸ் அதிகாரிகளை சேர்த்துக் கொள்வதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் இப்பீடம் தனது கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இருந்தபோதிலும், 2023 ஆம் ஆண்டு முதல் தினவருகை மாணவர்கள், சேவையாற்றும் இராணுவ அதிகாரிகள் (இராணுவ பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள்) மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் உட்பட பல்வேறு மாணவர் குழுக்களுக்கு பட்டங்களை வழங்க இப்பீடம் எதிர்பார்க்கிறது.

குற்றவியல் நீதி பீடமானது இரண்டு கல்வித் திணைக்களங்களைக் கொண்டுள்ளது:

- குற்றவியல் திணைக்களம்
- பொலீஸ் விஞ்ஞான திணைக்களம்

குற்றவியல் நீதி பீடமானது இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளை வழங்குகிறது.

குற்றவியல் திணைக்களம்

இளங்கலை பட்டப்படிப்புகள்

- *BSc in Criminology & Criminal Justice*
- *BSc in Criminal Psychology*

முதுகலை பட்டப்படிப்புகள்

- *MSc in Criminology & Criminal Justice*
- *MSc in Criminal Psychology*

<u>பொலீஸ் விஞ்ஞான திணைக்களம்</u>

- இளங்கலை பட்டப்படிப்புகள்
- *BSc in Police Science*
- *BSc in Crime Investigation*
- முதுகலை பட்டப்படிப்புகள்
- *MSc in Police Science*

அடைவுகள்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தினுடைய *Moot Court & Debating Society* ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட துணைவேந்தர் கோப்பைக்கான பீடங்களுக்கிடையேயான விவாதப் போட்டியில் குற்றவியல் நீதி பீடத்தின் விவாதக்குழுவானது இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

எதிர்காலத் திட்டங்கள்

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் *10, 11* மற்றும் *12* ஆம் திகதிகளில் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் *14* வது ஆசிய குற்றவியல் மாநாட்டை ஏற்பாடு செய்ய பீடம் எதிர்பார்க்கிறது, மேலும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமானது இம்மாநாட்டை தொகுத்து வழங்கும் கல்வி நிறுவனமாக செயல்படும். ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இம்மாநாட்டை நடத்துவதற்கான ஒப்புதல் *27.09.2021* அன்று நடைபெற்ற *635*வது முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.

இப்பீடமானது சர்வதேச சிறுவர் தினம் மற்றும் சர்வதேச மகளிர் தினம் ஆகியவற்றை கொண்டாடும் வகையில் வருடாந்தம் இரண்டு தேசிய நிகழ்வுகளை நடத்துவதற்கு எதிர்பார்க்கிறது.

5.12. பீடாதிபதி அலுவலகம் - ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு



பேராசிரியர் *CL* குணசேகர

அறிமுகம்

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான பீடாதிபதி அலுவலகமானது 2013 இல் திறந்து வைக்கப்பட்டது. இது இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்களுக்கிடையில் நிறுவப்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான முதலாவது அலகாகும். இது R & D இற்கான ஒரு பாராட்டத்தக்க மற்றும் முன்னோடியான படியாக இருக்கிறது. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (KDU) நிலையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவையே இந்த பீடத்தின் குறிக்கோள் ஆகும். பீடங்களுக்கிடையே ஆராய்ச்சிக்கான வாய்ப்புகளைப் பரப்புதல், ஆராய்ச்சி ஒத்துழைப்புகளை எளிதாக்குதல் மற்றும் கல்விசார் ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கான ஆராய்ச்சியின் விளக்கக்காட்சிகள் மற்றும் வெளியீடுகளுக்கு மானியங்கள் மற்றும் நிதியுதவி வழங்குவதன் மூலம் நிறுவன மட்டத்திலான ஆராய்ச்சியை மேம்படுத்துதல் ஆகியவை இந்த பிரிவின் செயற்பாடுகளில் அடங்கும். MPhil/PhD முன்மொழிவு முன்னேற்ற அறிக்கைகளின் மதிப்பீட்டு குழுக்களில் பங்கேற்பதன் மூலமும் கல்விச்சபை மற்றும் பீடங்களின் குழுக் கூட்டங்களில் பங்கேற்பதன் மூலமும் பட்டதாரி ஆய்வுகள் பீடத்தின் முதுகலை ஆராய்ச்சி திட்டங்களை மேம்படுத்துவதற்கு பங்களிப்புகள் செய்யப்படுகின்றன. இலங்கையிலும் சர்வதேச அளவிலும் நன்கு அறியப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையில் ஆராய்ச்சி ஒத்துழைப்புகள் மேலும் உருவாக்கப்பட்டுள்ளன. இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆதரவு வழங்குவதற்காக பீடாதிபதியின் R & D அலுவலகமானது விஞ்ஞானம்சார் எழுதுகையில் நிபுணர்களின் ஆதரவை ஒருங்கிணைக்கிறது. ஆராய்ச்சி, ஆராய்ச்சி முறைகள் மற்றும் புள்ளி விவரங்கள் பற்றி ஆண்டுதோறும் பல தொடர் பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்படுகின்றன.அவ்வாறான பயிற்சிப்பட்டறைகளில் மானிய முன்மொழிவு எழுதுகை, விஞ்ஞானம்சார் எழுதுகை மற்றும் முறையான மறுஆய்வு எழுதுகை ஆகியவை இளம் கல்வியாளர்களுக்கு ஆராய்ச்சி முன்மொழிவுகளை எழுதுவதற்கும் நிதியுதவி பெறுவதற்கும் மற்றும் ஆராய்ச்சியை மேற்கொள்ளவும் உதவுகிறது. மேலும், அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த ஊழியர்களுடைய செய்து கொண்டிருக்கும் ஆராய்சிகள், செய்து முடிக்கப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் பீடங்களின் இளங்கலை ஆராய்ச்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான தரவுத்தளமானது புதுப்பித்த நிலையில் பராமரிக்கப்படுகிறது.

அடைவுகள்

ஆராய்ச்சி சிறப்பு விருதுகள்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் முதன்முறையாக நடப்பு ஆண்டில் தீவிரமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கல்வியாளர்கள் மற்றும் மாணவர்களை அங்கீகரிப்பதற்காக ஆராய்ச்சி சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன. 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான ஆராய்ச்சி வெளியீடுகளின்

அடிப்படையில் ஆராய்ச்சி சிறப்பு விருதுக்கு பொருத்தமான ஊழியர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அவ்வாறு ஊழியர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கைகள் முறையே 14 மற்றும் 11 ஆகும். அதன்படி, விண்ணப்பங்களை மதிப்பிட்ட பின்னர் 3 சிறந்த கல்விசார் ஊழியர்கள் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டனர். ஆனால் 1 மாணவர் மட்டுமே விருதுக்கு தகுதி பெற்றார். ஆகவே, ஆராய்ச்சி சிறப்பு விருதுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களின்படியே அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும், 9 கல்விசார் ஊழியர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிப்பதற்கான குறைந்தபட்ச தகுதியை பூர்த்தி செய்துள்ளனர். இந்த வெற்றியாளர்களுக்கு 2022 ஆண்டுக்கான ஆராய்ச்சி மாநாட்டின் தொடக்க விழாவில் சான்றிதழ், Pin மற்றும் ரொக்கப் பரிசு ஆகியன வழங்கப்பட்டன.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கான நிதி உதவி

2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட நிதியோடு ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் நிதி உதவி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் ஆராய்ச்சிப்பத்திரிக்கைகளில் ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் வெளியீடுகளுக்கான நிதி உதவியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுகிறது. இது அதே ஆண்டில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கல்வியாளர்களால் அதிகரிக்கப்பட்ட வெளியீட்டில் பிரதிபலிக்கிறது.

வருடம்	**மாநாடுகளில் பங்கேற்பதற்கான நிதி**	
	நிகழ்வுகளின் எண்ணிக்கை	**மொத்தமாக செலவிடப்பட்ட தொகை**
2018	28	Rs 1 ,261,613.74
2019	7	Rs 522,721.83
2020	2	Rs 112,000.00
2021	15	Rs 215,129.38
2022	**16**	**Rs. 442,815.10**
வருடம்	**KDU ஆராய்ச்சி மானியங்களுக்கான நிதி**	
	மானியங்களின் எண்ணிக்கை	**மொத்தமாக செலவிடப்பட்ட தொகை**
2018		Nil
2019		Nil
2020	15	Rs 21,705,550.00
2021	25	Rs 36,751,334.34
2022	**19**	**Rs. 30,150,825.40**
வருடம்	**அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் ஆராய்ச்சிப்பத்திரிகைகளின் வெளியீடுகளுக்கான நிதி**	
	ஆராய்ச்சி மடல்களின் எண்ணிக்கை	**மொத்தமாக செலவிடப்பட்ட தொகை**
2018		Nil
2019		Nil
2020	3	Rs 354,804. 00
2021	11	Rs 2,589,467.95
2022	**04**	**Rs. 573,246.12**

எதிர்கால திட்டங்கள்

அதிக தேவை காரணமாக பீடாதிபதியின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அலுவலகம் அதன் கல்விசார் ஊழியர்களுக்கு ஆராய்ச்சி மானியங்களை வழங்குவதற்கு அதிக பாதீட்டை (Budjet) ஒதுக்க திட்டமிட்டுள்ளது. மேலும், கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கும் குறுகிய கால ஆராய்ச்சி திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கும் புதிய திட்டமொன்று அடுத்த ஆண்டில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

5.13. நூலகம்



நூலகர்

Dr. (Ms) RCWMRW செனவிரத்ன


அறிமுகம்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நூலக அமைப்பானது பல்கலைக்கழகத்தில் முக்கிய கற்றலுக்கு ஆதரவளிக்கும் வசதி முறையாகும். இந்த நூலக அமைப்பானது பிரதான நூலகத்தைக் கொண்டுள்ளதுடன் இரத்மலானையின் பிரதான வளாகத்தினுள் மருத்துவ பீடத்தின் நூலகம் உள்ளது. இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் நூலகமானது வெரஹெர பல்கலைக்கழக வைத்தியசாலையிலும் தெற்கு வளாக நூலகமானது சூரியவெவவிலும் அமைந்துள்ளது.


நூலகத்தின் முன்னேற்றம்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நூலகமானது இந்த ஆண்டில் 879 புத்தகங்களையும் 14 மின் புத்தகங்களையும் சேர்த்துள்ளது. நூலக வளங்களுக்கான மொத்த செலவு ரூ. 26,945,000.00 ஆகும். நூலகமானது திருட்டு சோதனை மென்பொருள் (plagiarism checking software) உட்பட ரூ. 13,506,000.00 மதிப்புள்ள 4 மெகா e-Database களுக்கு சந்தா செலுத்தியுள்ளது.


வருடம்	**வாங்கிய புத்தகங்கள்**	**நன்கொடையாக வழங்கப்பட்ட புத்தகங்கள்**	அறிக்கைகள்	துண்டுப் பிரசுரங்கள்
2018	*329*	*451*	*8*	*24*
2019	*341*	*741*	*48*	*36*
2020	*620*	*196*	*5*	*14*
2021	*625*	*443*	*26*	*12*
2022	***478***	***401***	***93***	***22***



கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் 2068 மாணவர்களும் 134 ஊழியர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். நூலக அமைப்பில் அச்சிடப்பட்ட பொருட்களைக் காட்டிலும் மின்-வளத் தரவுத்தளங்களில் அதிக எண்ணிக்கையிலான பயன்பாட்டை நூலகம் அடைந்துள்ளது. Heinonline இல் பதிவு செய்யப்பட்ட அதிக எண்ணிக்கையிலான பதிவிறக்கங்கள் 107,943 க்கு மேல் ஆகும்.



கடந்த ஆண்டில் மின் புத்தகப் பயன்பாடானது 23561 ஆகவும் நூலக வலையமைப்பில் அச்சிடப்பட்ட புத்தகப் புழக்கத்தின் மொத்த எண்ணிக்கை 6058 ஆகவும் இருந்தது.



கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நூலக அமைப்பில் தினசரி சராசரி வருகைகளின் எண்ணிக்கை 60-80 ஆக இருந்தது. பட்டியலிடுதல் மற்றும் வகைப்படுத்துதல், புத்தகங்களை கடன் வாங்குதலுக்கான கட்டுப்பாடு, உறுப்புரிமைக்கான கட்டுப்பாடு உட்பட நிலையான திறந்த வள நூலக முகாமைத்துவ முறைமை மூலம் நூலகச் செயற்பாடுகள் அனைத்தும் தானியங்கி செய்யப்பட்டன. 2021 ஆம் ஆண்டிற்கான புத்தக சேகரிப்புக்களின் சரிபார்ப்பு (Stock Verification) தானியங்கு முறைமை மூலம் செய்யப்பட்டது.

நூலகத்தின் பெரும்பாலான வளங்களை அணுகுவதற்கு பிரத்யேக இணையதளம் கொடுக்கப்பட்டுள்ளது. (http://lis.kdu.ac.lk) மற்றும் 2022 டிசம்பர் இற்குள் 4307 எண்ணிக்கையைக் கொண்ட கடந்த கால வினாத்தாள்கள், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் மற்றும் ஆராய்ச்சி இதழ்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் ஆய்வறிக்கை சுருக்கங்களின் முழு உரையுடன் டிஜிட்டல் நூலக முறைமை மூலம் நூலக அணுகல் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டில் மட்டும் 443 பயனர் ஆதரவு வினவல்கள் கையாளப்பட்டன.

பாதுகாப்பு ஆய்வுகளுக்கான தேசிய டிஜிட்டல் களஞ்சிய மையமானது 26 செப்டம்பர் 2022 அன்று தொடங்கப்பட்டது. அதன் போக்கானது ஆண்டு இறுதிக்குள் 500 ஆவணங்கள், காணொளிகள் மற்றும் படங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய ஆய்வுகள் பீடத்துடன் இணைந்து செயற்படும் திட்டமாகும். இந்த நூலகமானது இத்திட்டத்திற்காக 5.0 மில்லியன் மதிப்பிலான உபகரணங்களைப் பெற்றுள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

இது கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நூலக அமைப்பிற்குள் பயனர்களை மையமாகக் கொண்ட சேவை முன்முயற்சிகள் ஆகும். அதாவது இளங்கலை மற்றும் முதுகலை பட்டதாரிகளுக்கான மெய்நிகர் வாசிப்பு அறைகள், தகவல்களைத் தேர்ந்தெடுத்து பரப்புதல், தனிப்படுத்தப்பட்ட வினவல் சேவை, முழு தானியங்கு உறுப்பினர் சேர்க்கை, ஆராய்ச்சி ஆதரவு சேவைகள் ஆகியவை 2023 இல் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வேறு 2 அரச பல்கலைக்கழக நூலகங்களில் உள்ள அனைத்து வகை நூலக ஊழியர்களுக்கும் நல்ல நடைமுறைகளைக் கற்றுக்கொள்வதற்காக எமது நூலகத்துக்கான வெளிப்பாட்டு வருகைகள் ஏற்பாடு செய்யப்படும்.

6. வளாகங்கள் மற்றும் இணைந்த நிறுவனங்கள்

6.1. தெற்கு வளாகம், சூரியவெவ





கல்லூரித் தலைவர்

Major General LCR ஜெயசூரிய

அறிமுகம்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளின் விரிவாக்கத்தை நோக்காகக் கொண்டு 2015 ஆம் ஆண்டில் தெற்கு வளாகமானது கணினி பீடம் (FOC) மற்றும் கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம் (FBESS) ஆகிய இரண்டு பீடங்களுடன் நிறுவப்பட்டது. இங்கு தற்போது 550க்கும் மேற்பட்ட இளங்கலைப் பட்டதாரிகள் கட்டிடக்கலை, அளவியல் ஆய்வு, இடஞ்சார்ந்த விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் முறைமைகள் ஆகிய நான்கு கல்வித் துறைகளில் பட்டப்படிப்பை தொடர்கின்றனர்.

இந்த வளாகமானது பயிற்சி அதிகாரிகள் மற்றும் தினவருகை மாணவர்களைக் கொண்ட தங்குமிட வளாகமாகும். அவர்கள் பரஸ்பர புரிதல் மற்றும் தோழமை ஆகியவை உள்ள சூழலைக்கொண்ட ஒரே வளாகத்தில் வசிக்கின்றனர். இந்த வளாகமானது இளங்கலைப் பட்டதாரிகளுக்கு ஏராளமான விளையாட்டு வசதிகள், நூலக வசதிகள், கணினி ஆய்வகங்கள், தேவையான அனைத்து வசதிகளும் பொருத்தப்பட்ட கட்டிடக்கலை வடிவமைப்பு ஸ்டூடியோக்கள், சமீபத்திய ஆய்வக உபகரணங்கள் மற்றும் அதிநவீன கேட்போர்கூடம் ஆகிய வசதிகளை வழங்குகிறது.

மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், இந்த வளாகமானது பல அறிவுப் பகிர்வு நிகழ்வுகளை நடத்தியது. கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடத்தின் ஆய்வுக் கருத்தரங்கானது அந்தந்த துறைகளைச்சேர்ந்த புகழ்பெற்ற கல்வியாளர்களின் பங்குபற்றுதலுடன் நடந்தேறியது. இந்த ஆய்வுக் கருத்தரங்கானது இதில் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்த இளங்கலை மாணவர்களின் கல்வித் திறனை வெளிப்படுத்தியது.

கொலராடோ பல்கலைக்கழகம் மற்றும் ஈரான் பல்கலைக்கழகம் இணைந்து நடாத்திய சர்வதேச நிகழ்நிலை வடிவமைப்பு பயிற்சிப்பட்டறையில் முதல் முறையாக கட்டிடக்கலை திணைக்களம் பங்கேற்றது. பதிவுசெய்யப்பட்ட அனைத்து இளங்கலை பட்டதாரிகளுக்கும் ஆர்வமுள்ள எதிர்கால இளங்கலை பட்டதாரிகளுக்கும் உயர்தரத்திலமைந்த மூன்றாம் நிலைக் கல்வியை வழங்கும் நோக்கில் சர்வதேச கல்வித் தரத்தை மேம்படுத்தி பேணுவதே வளாகத்தின் முயற்சியாக இருக்கிறது.

Fulbright English Teaching Assistance (ETA) நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக தெற்கு வளாகமானது அமெரிக்காவிலிருந்து ஒரு உள்ளக-ஆசிரிய உதவியாளரைக் கொண்டிருப்பது இந்த கல்வியாண்டு முழுவதும் இளங்கலை பட்டதாரிகளுக்கு பயனளிக்கின்ற வகையில் அமைந்திருந்தது.

உட்கட்டமைப்பு மேம்பாடுகள்

- மாணவர் விடுதிப் பகுதியில் நீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவுதல்.
- இளமாணிகளுக்கான குடியிருப்பு கட்டிட (நிலை II) கட்டுமானம்.
- நான்கு மாடிகளைக் கொண்ட கணினி பீடத்தின் கட்டுமானம்.
- 05 Culvert களை நிர்மாணித்தல்
- 03 மின் துணை நிலையங்களை நிர்மாணித்தல்.
- ஏற்கனவே உள்ள Wi-Fi வலையமைப்பை மேம்படுத்துதல்.
- 2022 ஜூன் 1 அன்று தெற்கு வளாகத்தின் நூலகமானது தெற்கு வளாகத்திலுள்ள புதிதாக நிறுவப்பட்ட கணினி பீடத்தின் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.
- 2022 அன்று ஜூன் 24 அன்று தெற்கு வளாக நூலகத்தில் "சிங்கள இலக்கிய மூலை" ஒன்று நிறுவப்பட்டது.
- 2022 ஆகஸ்ட் 04 அன்று துணைவேந்தர் மற்றும் தெற்கு வளாகத்தின் தலைவரால் ஆண்களுக்கான மற்றும் பெண்களுக்கான இரண்டு புதிய தங்குமிட கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.
- 2022 நவம்பர் 30 அன்று தெற்கு வளாகத்தின் தலைவரால் புதிய சிற்றுண்டிசாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.
- உதைப்பந்து மற்றும் ரக்பி மைதானத்தை உள்ளடக்கியதாக தற்போதுள்ள விளையாட்டு மைதானத்தை விரிவுபடுத்தும் பணியானது 2022 டிசம்பரில் இலங்கை இராணுவத்தின் இலங்கை பொறியியலாளர் படையின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.
- அதிகாரிகள் தங்குமிடத்தில் திருமணமானவர்கள் மற்றும் திருமணமாகதவர்கள் தங்குவதற்கான மேம்பாடுகள் ஜூன் 2022 இல் மேற்கொள்ளப்பட்டன.

ஊழியர் மேம்பாட்டு நடவடிக்கைகள்

- தொழில்முறை அறிவு, தலைமைத்துவம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை விருத்தி செய்வதற்காக பாதுகாப்பு மற்றும் மூலோபாய கற்கைகள் பீடத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் வாராந்த பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட KOHA பயிற்சிப்பட்டறையில் WPIM வர்ணசூரியா (நூலகத் தகவல் உதவியாளர் Gr. III) 2022 நவம்பர் 17 இல் கலந்து கொண்டார்.

பயிற்சி விடயங்கள் / சாதனைகளிலான ஈடுபாடு

- Intake 35,36,37,38 மற்றும் 39 பயிற்சி அதிகாரிகளுக்கான நேரடி துப்பாக்கிச் சூட்டு பயற்சிகள் 27 மார்ச் 2022 மற்றும் 07 ஆகஸ்ட் 2022 அன்று பனலுவாவில் உள்ள இராணுவ துப்பாக்கிச் சூட்டு எல்லையில் நடத்தப்பட்டது.
- தெற்கு வளாகத்தின் பயிற்சி அதிகாரிகளுக்கான 1வது செமஸ்டர் மற்றும் 2வது செமஸ்டருக்குரிய 8 மைல் ஓட்டமானது 20 மார்ச் 2022 மற்றும் 25 செப்டம்பர் 2022 அன்று செவனகலவிலிருந்து தெற்கு வளாகம் வரை நடத்தப்பட்டது.

- பயிற்சி அதிகாரிகளின் சகிப்புத்தன்மை, உடல் ஆரோக்கியம் மற்றும் வலிமை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக 16 அக்டோபர் 2022 அன்று அம்பாந்தோட்டை பகுதியில் உள்ள கொடவாயா கடற்கரையிலிருந்து கலமதியா கடற்கரை வரை வருடாந்த கடற்கரை அணிவகுப்பு நடத்தப்பட்டது. இதற்கான மொத்தத்தூரம் சுமார் 14 கி.மீ ஆகும்.
- Intake 39 இன் இளங்கலைப் பட்டதாரிகளுக்கான நூலக நோக்குநிலை நிகழ்வானது (Orientation programme) வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.
- திட்டமிடப்பட்டபடி பயிற்சி அதிகாரிகளுக்கான வழக்கமான இராணுவப் பயிற்சி நடத்தப்பட்டது.
- ஆலங்குளம், துணுக்கியில் உள்ள 65வது காலாட்படை படைப்பிரிவு இராணுவ முகாமின் நூலகத்தில் புத்தக சேகரிப்பை விகிதாசார முறையில் ஏற்பாடு செய்வதற்கான ஆலோசனை சேவையை வழங்குவதற்காக (புத்தகங்களின் எண்ணிக்கை 410) தெற்கு வளாகத்தின் சிரேஷ்ட உதவி நூலகரான திருமதி பேர்ல் கே. விஜேசேகர அவர்களால் இரண்டு இராணுவத் தலைவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இப்பயிற்சியானது 2022 நவம்பர் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் தெற்கு வளாகத்தில் நடாத்தப்பட்டது.

சிறப்பு நிகழ்வுகள்/செயற்பாடுகள்

- தெற்கு வளாகத்தின் பயிற்சி அதிகாரிகள் மற்றும் இளங்கலைப் பட்டதாரிகள் 16 ஜனவரி 2022 அன்று அந்த வளாகத்தை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றனர்.
- சுதந்திர தின சிறப்பு நிகழ்வானது 04 பிப்ரவரி 2022 அன்று மரம் நடுகை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அனைத்து கல்விசாரா மற்றும் இராணுவ ஊழியர்களின் பங்கேற்புடன் கூடிய சிநேக கிரிக்கெட் போட்டியுடன் நடந்தேறியது.
- தெற்கு வளாகத்தின் அழகியல் சங்கத்தின் இளங்கலைப் பட்டதாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட 'மடலா' எனப்படும் இசை நிகழ்ச்சியானது 18 பிப்ரவரி 2022 அன்று நடைபெற்றது.
- தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் Intake 38 இன் இளங்கலைப் பட்டதாரிகளால் ஏற்பாடு செய்யப்படும் 'பதுரா' எனப்படும் வருடாந்த இசைக் களியாட்டமானது 04 மார்ச் 2022 அன்று நடைபெற்றது.
- "Southern Premier League" எனப்படும் Intake களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியானது 2022 ஏப்ரல் 03 ஆம் திகதி முதல் 05 ஆம் திகதி வரை இடம்பெற்றது.
- தெற்கு வளாகத்தின் பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடமானது புத்தாண்டுக் கொண்டாட்ட விழாவை 23 ஏப்ரல் 2022 அன்று தெற்கு வளாக விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்தது.
- "Southern Volleyball Tournament" எனப்படும் பீடங்களுக்கிடையேயான கரப்பந்தாட்டப் போட்டியானது 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெற்றது.
- "HOKI 2022" எனப்படுகின்ற 'ஹோலி' பண்டிகையானது Rotaract Club இனால் 23 செப்டம்பர் 2022 அன்று தெற்கு வளாக மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 15வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடானது சூரியவெவவில் உள்ள தெற்கு வளாகத்தில் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 முதல் அக்டோபர் 01 வரை நடைபெற்றது.

- அளவையியல் ஆய்வு திணைக்களத்தின் *Intake 38* இனுடைய இளங்கலைப் பட்டதாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட *"Rector's Challenge Trophy 22"* ஆனது *2022* அக்டோபர் *19* அன்று நடைபெற்றது. இக்கண்காட்சி கால்பந்துப் போட்டியில் முதல் முறையாக இரண்டு இளங்கலை மகளிர் கால்பந்து அணிகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தின.
- பயிற்சி அதிகாரிகளுக்கான *Mess Night* ஆனது *04* டிசம்பர் *2022* அன்று நடைபெற்றது.
- கல்வி சாரா சிவில் ஊழியர்களின் வருடாந்த ஒன்றுகூடலானது *04* டிசம்பர் *2022* அன்று செவனகலவில் உள்ள துடுவா உல்லாச விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இராணுவ ஊழியர்களின் வருடாந்த ஒன்றுகூடலானது *2022* டிசம்பர் *06* அன்று தெற்கு வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- கட்டிடக்கலைத் திணைக்களத்தின் *intake 32* இனுடைய பயிற்சி மாணவர்கள் *(Cadet)* தெற்கு வளாகத்தில் உள்ள நூலகத்திற்கு ஒரு தொகுதி புத்தகங்களை நன்கொடையாக வழங்கினர். இந்நிகழ்வானது *17* நவம்பர் *2022* அன்று தெற்கு வளாக நூலகத்தில் நடைபெற்றது.
- கூடைப்பந்து பயிற்சி முகாமானது *2022* ஆகஸ்ட் *27* மற்றும் *28* ஆம் திகதிகளில் கல்வியாளர்கள் மற்றும் இளங்கலை பட்டதாரிகளின் பங்கேற்புடன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக தெற்கு வளாகத்தில் நடைபெற்றது. இந்த முயற்சியில் இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனம் வழங்கிய உதவி மிகவும் பாராட்டத்தக்கது. மாணவர்களின் ஆர்வத்தையும், விளையாட்டுத் திறனையும் மேம்படுத்தும் வகையில் இப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.
- பூப்பந்து பயிற்சி முகாமானது கல்வியாளர்கள் மற்றும் இளங்கலை பட்டதாரிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் *2022* செப்டம்பர் *10* மற்றும் *11* ஆம் திகதிகளில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக தெற்கு வளாகத்தில் நடைபெற்றது.
- காதல் திருமணம் மற்றும் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தின் சாதக பாதகங்கள் பற்றிய திணைக்களங்களுக்கிடையேயான விவாதமானது வளாக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இது சிறுவர்கள் மத்தியில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியது.
- இளங்கலைப் பட்டதாரிகளின் கலைத் திறமையை வெளிப்படுத்தும் வகையிலமைந்த கலைக் கண்காட்சியானது கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞான பீடம் மற்றும் கணினி பீடம் ஆகியவற்றின் மாணவர்களால் *24* நவம்பர் *2022* இல் நடாத்தப்பட்டது.

6.2. METROPOLITAN வளாகம்





கல்லூரித் தலைவர்

***Major General ALDM** குணசேகர*

அறிமுகம்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் Metropolitan வளாகம் என்பது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சமீபத்திய சேர்க்கையாகும். மேலும் அதன் பல்துறை திட்டங்களின் மூலம் பொது மற்றும் தனியார் பெருநிறுவனத் துறையில் உயர்தர நிபுணர்களை உருவாக்க உறுதிபூண்டுள்ளது. மனித மூலதன மேம்பாட்டிற்கான பயிற்சிகளில் அதன் முக்கிய கவனம் உள்ளது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் Metropolitan வளாகமானது கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சி ஆலோசனைகள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம் அதன் சேவைகளை வழங்குகிறது. மேலும் இது நன்கு வடிவமைக்கப்பட்ட தொழில்முறை மற்றும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அரசுக்கு வருமானத்தை உருவாக்கும் அதேவேளை பொது மற்றும் தனியார் பெருநிறுவனத் துறைகளுக்கான திறன்களை மேம்படுத்துவதற்காகவும் உறுதியளிக்கிறது.

இந்த பயிற்சி நிறுவனமானது சர்வதேச தரத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட ஏழு மாடி கட்டிடத்தில் அமைந்துள்ளது. இங்கு இந்த நிறுவனத்திற்குச் சொந்தமான மற்றும் நாட்டின் பிற இடங்களில் காணப்படும் வசதிகளை மிஞ்சும் வகையிலமைந்த அதிநவீன விரிவுரை மண்டபங்கள், புதுப்பிக்கப்பட்ட கணினி ஆய்வகங்கள் மற்றும் ஒரு மெய்நிகர் கற்றல் மையம் ஆகியவை உள்ளன. Metropolitan வளாகமானது நகரின் மையத்தில் அமைந்துள்ளது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் Metropolitan வளாகமானது அதன் கூரையின் கீழ் கிடைக்கும் வசதிகளை அனுபவிப்பதற்காக பொது மற்றும் தனியார் பெருநிறுவனத் துறைகளிலுள்ள ஊழியர்களுக்கு அதன் கதவுகளைத் திறந்துள்ளது. அதன்படி, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் Metropolitan வளாகமானது நிதி முகாமைத்துவம், வணிகத் திறன்கள் மற்றும் நிர்வாகம், மனிதநேயம் மற்றும் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் & டிஜிட்டல் முகாமைத்துவம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற பல துறைகளின் கீழ் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துகிறது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் Metropolitan வளாகமானது தனிநபர் மற்றும் நிறுவன உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட அதன் தரம் மற்றும் செலவு குறைந்த பயிற்சிகள் மூலம் பொது மற்றும் தனியார் பெருநிறுவனத் துறைகளின் ஊழியர்களிடையே மனித மூலதன மேம்பாட்டின் கல்வியிலும் தொழில்முறையிலும் சிறந்து விளங்கும் உலகத்தரம் வாய்ந்த மையமாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் *Metropolitan* வளாகத்தில் உள்ள நீண்ட கால கற்கைத்திட்டங்கள்

- *Diploma in English for Professionals (DEP)*
- *Diploma in English for Junior Executives (DEJE)*
- *Diploma in Tamil for Professionals (DTP)*
- *Diploma in Procurement Management and Contract Administration (DPMCA)*
- *Diploma in Cyber Security*
- *Diploma in Cloud Computing*
- *Diploma in IoT*
- *Diploma in English*
- *Advance Certificate in Human Resource Management (ACHRM)*
- *Certificate in IoT and Big Data*
- *Certificate in English for Military Officers*
- *Certificate in English for Employment Purposes (CEEP)*
- *Certificate in Conversational Tamil (CCT)*
- *Preliminary Course in Human Resource Management (PCHRM)*
- *Certificate in English*
- *Advanced Certificate in Information Technology (ACIT)*

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் *Metropolitan* வளாகத்தில் உள்ள குறுகிய கால கற்கைத்திட்டங்கள்

- *Certificate in Presentation Techniques and Public Speaking Skills (CPTPSS)*
- *Certificate in Management Information System (CMIS)*
- *Certificate in e-Commerce and Digital Marketing (CECDM)*
- *Certificate in Office Management and Administration (COMA)*
- *Certificate in Public Procurement Management (CPPM)*
- *Certificate Course in Human Resource Management (CCHRM)*

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் *Metropolitan* வளாகத்தினுடைய தொழில்முறை கற்கைகள்

- *HCIA - AI*
- *HCIA - Data Com*
- *HCIA - Data Com (Fast Track) - HCIA Data Com for Professionals*

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் *Metropolitan* வளாகத்தினால் நடாத்தப்பட்ட பிரத்தியேக திட்டங்கள்

- தேசிய புலனாய்வு அமைப்பில் உள்ள அதிகாரிகளுக்கான மூன்று மாத *Certificate in Internet of Things (IoT) and Big Data* கற்கைத்திட்டம்.
- இராணுவ அதிகாரிகளுக்கான மூன்று மாத *Certificate in English* கற்கைத்திட்டம்.
- கொழும்பு மாநகர சபையின் நிர்வாக ஊழியர்களுக்கான மூன்று மாத *Certificate in English* கற்கைத்திட்டம்.
- கொழும்பு மாநகர சபையின் *Greater Colombo Water and Wastewater Management Improvement Investment* திட்டத்தில் உள்ள *(GCWWMIIP)* அதிகாரிகளுக்கான ஒரு வருட *Diploma in Communication and Transformational skills* கற்கைத்திட்டம்.
- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான ஒரு வருட *Diploma in English Professionals* கற்கைத்திட்டம்
- இலங்கை கடற்படையின் உட்துறை தணிக்கையாளர்களுக்கான *Certificate in Public Procurement Management* கற்கைத்திட்டம்
- முதலீட்டு சபையின் அதிகாரிகளுக்கான *E-procurement* பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி.
- விவசாய அமைச்சின் *Climate Smart Irrigated Agriculture* திட்டத்தில் உள்ள அலுவலர்களுக்கான கொள்முதல் வழிகாட்டுதல்கள், திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறைகள்.
- துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சில் உள்ள அதிகாரிகளுக்கான ஒழுங்குமுறை நடைமுறைகள் மற்றும் அலுவலக நிர்வாகம்.
- அரசாங்க தகவல் திணைக்களத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு *MS Excel* ஐப் பயன்படுத்தி *Spreadsheets* தயாரித்தல் மற்றும் *MS Word* உடன் தொழில்சார் ஆவணங்களைத் தயாரித்தல்.
- அரசாங்க தகவல் திணைக்களத்தில் உள்ள அதிகாரிகளின் *MS Excel* திறன்களை மேம்படுத்துதல்.
- வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கான அலுவலக முகாமைத்துவம் பற்றிய பயிற்சிப்பட்டறை.
- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தில் உள்ள அதிகாரிகளுக்கான பொதுச்சேவை ஒழுங்குமுறை நடைமுறைகள்.
- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தில் உள்ள அதிகாரிகளுக்கான மனித வள திட்டமிடல் கருத்தரங்கு.
- தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் உள்ள அதிகாரிகளுக்கான கொள்முதல் முகாமைத்துவ பயிற்சித் திட்டம்.
- தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் உள்ள அதிகாரிகளுக்கான பொது அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப் பயிற்சித் திட்டம்.
- சுற்றாடல் அமைச்சின் காற்று வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவின் மூலம் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.
- தேசிய மேம்பாட்டு தகவல் அமைப்பு திட்டத் திணைக்களம் பற்றிய பயிற்சித் திட்டம்.
- 50 நபர்கள் பங்கேற்ற நிதி அமைச்சின் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம்.
- *Cargills* இன் ஊழியர்களுக்கான புதிய மனிதவள முறைமை பயிற்சி.

- நிதி அமைச்சின் e-GP செயலகத்தின் e-GP பற்றிய பயிற்சித் திட்டம்.
- நீதி அமைச்சின் Title Registration Symposium நடத்தப்பட்டது.
- ரஷ்யா ஸ்ரீலங்கா - இலங்கை வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனத்தின் வர்த்தக மன்றத்திற்கு (FCCISL) நடத்தப்பட்டது.

6.3. இணைந்த நிறுவனங்கள்

6.3.1. தேசிய பாதுகாப்பு கல்லூரி (NDC), கொழும்பு

தேசிய பாதுகாப்புக் கல்லூரியானது (NDC) இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய அபிவிருத்தியை உறுதி செய்வதற்காக முப்படைச்சேவை, காவல்துறை மற்றும் பொதுச்சேவை ஆகியவற்றின் மூத்த அதிகாரிகளுக்கு தேசிய பாதுகாப்பு, ஆட்சிக்கலை, இராஜதந்திரம் மற்றும் பொதுக்கொள்கை ஆகியவற்றில் அதிக தகுதி வாய்ந்த தந்திரோபாய முடிவுகளை எடுக்கும் திறனை மேம்படுத்தும் வகையில் முழுமையான அறிவை வழங்குவதற்கு தந்திரோபாய சிந்தனையை ஊக்குவிக்கும் முதன்மையான நிறுவனமாக நிறுவப்பட்டது. இது தந்திரோபாய சிந்தனையாளர், தந்திரோபாய பகுப்பாய்வாளர், தந்திரோபாய முடிவுகளை எடுக்கும் நபர் மற்றும் தந்திரோபாய ஆலோசகர் ஆகியோரை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நிறுவனமானது தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு விடயங்களில் அரசாங்கத்திற்கு புத்திசாலித்தனமான ஆலோசனைகளை வழங்குவதோடு தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் ஒரு சிந்தனைக்குழுவாக செயல்படுகிறது. மற்றும் நாட்டின் தேசிய பாதுகாப்பு கண்ணோட்டத்தை வடிவமைப்பதில் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது.

பட்டப்படிப்பு திட்டங்கள்

- *Master of Science in National Security & Strategic Studies*
- *Master of Philosophy*

6.3.2. பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் ஊழியர் கல்லூரி (DSCSC)

இராணுவ கட்டளை மற்றும் ஊழியர் கல்லூரியானது (ACSC) 16 மார்ச் 1998 அன்று 26 மாணவர் அதிகாரிகளைக் கொண்டு தொடங்கப்பட்டது. இருப்பினும், இக்கல்லூரியானது அதிகாரப்பூர்வமாக 28 ஆகஸ்ட் 1998 அன்று திறக்கப்பட்டது. உலகின் பல ஆயுதப் படைகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து இராணுவக் கோட்பாடும் உத்தி நிலைத் திட்டமிடலும் மற்றும் போதனைகள் ஆகியன 22 ஜனவரி 2007 அன்று ஒரே கூரையின் கீழ் கொண்டு வரப்பட்டு பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் ஊழியர் கல்லூரி நிறுவப்பட்டது.

பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்

- *Master of Science in Defence and Strategic Studies*

6.3.3. இலங்கை இராணுவ கலைக்கழகம், தியத்தலாவை (SLMA)

தியத்தலாவையில் அமைந்துள்ள இலங்கை இராணுவ கலைக்கழகம் **(SLMA)** என்பது இலங்கை இராணுவத்தின் முதன்மையான பயிற்சி நிறுவனமாகும். இது பயிற்சி அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் முதல் பணியமர்த்துதல் வரை அவர்களை பயிற்றுவிக்கிறது. இலங்கையின் மிகவும் புத்துணர்ச்சியான காலநிலையுள்ள ஊவா மாகாணத்தில் தியத்தலாவை அமைந்துள்ளது. இலங்கை இராணுவ கலைக்கழகமானது *Gentleman Cadet*களுக்கான இரண்டு வருடங்கள் மற்றும் ஒன்பது மாத நீண்ட காலப்பாடநெறியையும், தன்னார்வ மாணவத்தொகுதிகள், பெண் மாணவர்கள், நேரடியாகப் பதிவுசெய்த அதிகாரிகள் ஆகியோருக்கான குறுகிய காலப்பாடநெறிகளையும் மற்றும் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் பயிற்சி அதிகாரிகளுக்கான இராணுவப் பயிற்சிகளையும் நடத்துகிறது.

பயிற்சி அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகுதியை வழங்கும் நோக்கத்துடன் இலங்கை சப்ரகமுவா பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழக்கமான நீண்ட காலப்பாடநெறியாக இராணுவ கற்கைகளில் இளமாணிப் பட்டப்படிப்புத் திட்டத்தை 1999 ஆம் ஆண்டில் இந்த கலைக்கழகம்

அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டமானது முதல் கல்விப்பணிப்பாளரான ஓய்வுபெற்ற லெப்டினன்ட் கேணல் ஏ ஏ டி அல்விஸ் SLSR அவர்களின் சிந்தனையில் உருவானதாகும். கலைக்கழகம் வழங்கிய இந்த பட்டப்படிப்பானது முப்படைகளின் கல்விப் பாடத்திட்டத்தை நிர்வகிக்கும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் 2011 ஆம் ஆண்டில் அங்கீகாரம் பெற்றது.

பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்

- *Bachelor of Science in Military Studies*

6.3.4. கடற்படை மற்றும் கடல்சார் கலைக்கழகம் (NMA)

கடற்படை மற்றும் கடல்சார் கலைக்கழகமானது (NMA) 15 ஜனவரி 1967 இல் அதன் தற்போதைய இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு பின் 15 ஜூலை 1967 இல் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை கடற்படையின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வேறு எந்த இராணுவ நிறுவனத்திற்கும் இணையற்றவாறு அதிக எண்ணிக்கையிலான அதிகாரிகள் மற்றும் மாலுமிகளுக்கு பயிற்சி அளித்ததன் மூலம் கடற்படை மற்றும் கடல்சார் கலைக்கழகமானது தனது திறமையை நிரூபித்துள்ளது.

கடற்படை மற்றும் கடல்சார் கலைக்கழகமானது 2007 ஆம் ஆண்டு முதற்கொண்டே இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் வழங்கப்பட்ட ISO 9001:2000 தர முகாமைத்துவ முறைமை சான்றிதழை வைத்திருக்கும் அதே வேளை தொடர்ந்து முயற்சி செய்து சர்வதேச தரத்தை அடைந்தது. இது தொடர்ந்து 2010 ஆம் ஆண்டில் ISO 9001:2008 ஆகவும், 2016 ஆம் ஆண்டில் ISO 9001:2015 ஆகவும் மேம்படுத்தப்பட்டது. கடற்படை மற்றும் கடல்சார் கலைக்கழகத்தின் பல ஆண்டுகளான மகத்தான சேவையை அங்கீகரிக்கும் வகையில் 2003 ஆம் ஆண்டு மதிப்புமிக்க President's Colours விருது வழங்கப்பட்டது.

பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்

- *Master of Business Administration in Logistics Management*
- *Postgraduate Diploma in Defence Management*
- *Bachelor of Science in Naval Studies*
- *Bachelor of Science in Naval and Maritime Studies*
- *Bachelor of Science in Naval Logistics Management*

6.3.5. இலங்கை விமானப்படை கலைக்கழகம், சீனக்குடா (SLAFA)

கிழக்கின் மிகப்பெரிய விமானத் தளமான சீனக்குடாவிலுள்ள **இலங்கை விமானப்படை** கலைக்கழகமானது பெரிய அளவிலான விமான நடவடிக்கைகளை கையாளும் திறன் கொண்டது. இது தற்போது கணிசமான வான் பாதுகாப்புடன் கூடிய இலங்கை விமானப்படை கலைக்கழகத்தின் செயற்பாட்டு நிலையமாக மாற்றப்படுவதற்கான செயன்முறையில் உள்ளது. மேலும் இதன் பறக்கும் பயிற்சிப் பிரிவும் இடமாற்றம் செய்யப்படுகிறது.

1976 இல் விமானப்படை கலைக்கழகம் நிறுவப்பட்டதிலிருந்து சீனக்குடா இலங்கை விமானப்படை கலைக்கழகத்தின் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் முதன்மையான இடமாக இது திகழ்கிறது.

பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்

- *Postgraduate Diploma in Defence Management*

- *Bachelor of Science in Aviation Studies*

6.3.6. இராணுவ Logistics கல்லூரி, திருகோணமலை (ASL)

Logistics திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தின் நவீன கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளை அறிந்து கொண்டு logistics வல்லுனர்களை மீண்டும் உயிர்ப்பிக்கும் நோக்கத்தை பூர்த்தி செய்வதற்காக 9 மே 2011 அன்று இராணுவ logistics கல்லூரி தொடங்கப்பட்டது. ஊழியர்களுக்கான logistics கற்கை, கனிஷ்ட அதிகாரிகளுக்கான logistics கற்கை மற்றும் சிரேஷ்ட நியமிக்கப்படாத அதிகாரிகளுக்கான logistics கற்கை ஆகிய மூன்று முக்கிய கற்கைகளை இராணுவ logistics கல்லூரி நடத்துகிறது.

பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்

- *Master of Business Administration in Logistics Management*

6.3.7. கடற்படை தொழில்நுட்ப நிறுவனம், வெலிசறை (NIT)

கடற்படை தொழில்நுட்ப நிறுவனம் (NIT) என்பது இலங்கை கடற்படையின் முதன்மையான தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமாகும். இது தேசிய டிப்ளோமா நிலை வரை பொறியியல் மற்றும் மின் பொறியியல் கிளைகளுக்கான வினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் திறன் கொண்டது. ISO 9001:2008/SLS ISO 9001:2008 இன் தேவைக்கு இணங்க பயிற்சி தொடர்பான தர முகாமைத்துவ முறைமையில் உள்ள அனைத்து நடவடிக்கைகளுக்கும் இலங்கை தர நிர்ணய நிறுவனம் சான்றளித்துள்ளது. இந்த நிறுவனம் மூன்று வருட காலத்திற்கு வினைஞர்களுக்கு முழுநேர தொழில்நுட்ப டிப்ளமோவை நடத்துகிறது. 10.06.2013 அன்று நடைபெற்ற அதன் 551வது கூட்டத்தில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் குழுவின் மூலம் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் (KDU) இந்த நிகழ்ச்சித்திட்டம் இணைக்கப்பட்டது.

டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

- *National Diploma in Technology*

6.3.8. தாதியர் பயிற்சிக் கல்லூரி, வெலிசறை (NTS)

21.08.2015 அன்று நடைபெற்ற 569 வது கூட்டத்தின்போது கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் குழுவின் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் (KDU) இணைக்கப்பட்டது. இலங்கை கடற்படையில் (SLN) மருத்துவ உதவியாளர்களாக 5 வருடங்களுக்கும் மேலான அனுபவமுள்ள மாலுமிகள் இலங்கை கடற்படையின் மருத்துவக் கிளைக்கு சேவையாற்றுவதற்கு தேவையான ஒரு தொழில்முறை தாதியின் அறிவு, திறமைகள் மற்றும் அணுகுமுறைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இரண்டு வருட Diploma in Nursing பாடநெறி முன்மொழியப்பட்டுள்ளது.

டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

- *Diploma in Nursing*

7. ஆய்வுப் பிரசுரங்கள்

7.1. ஆய்வுகளுக்கான நிதி வழங்கல்கள் – உள்நாட்டு நிதியீடு

ஆய்வுகளுக்கான நிதி வழங்கல்கள் – உள்நாட்டு நிதியீடு							
பீடம் / நிறுவனம் / நிலையம்	நிதி வழங்கல் தகவல்கள்	நிதி மூலம்	ஆண்டு	கால அளவு	முழு தொகை	31.12.2021 வரையான மொத்த தொகை	முன்னேற்ற சதவீதம்
மருத்துவ பீடம்	மனித உடற்கூறியல் கற்பித்தலுக்கான சடல பாதுகாப்பு முறைகளின் ஒப்பீடு	சுய நிதி	2020	2 வருடம்	2,000,000.00		10%
	இலங்கையின் மேல் மாகாணத்தில் உள்ள அரசாங்கங்கள் மற்றும் அரை-அரச மருத்துவமனைகளில் PCR உறுதிப்படுத்தப்பட்ட COVID 19 நோயாளிகளைத் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்ட சுகாதார சூழலில் பராமரிக்கையில் அவதானிக்கப்படும் SARS-CoV-2 குறிப்பிட்ட IgM மற்றும் IgG இன் வெளிப்பாடு, விளைவு மற்றும் ஊநீர்ப்பாதிப்பு ஆகியவற்றின் மதிப்பீடு	சுய நிதி	2020	1 வருடம்	1,617,350.00	1,617,350.00	100%
	இலங்கையின் கம்பஹா மாவட்டத்தில் தொழில் துறையில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடையே ஃபைலேரியா தொற்று	சுய நிதி	2020	3 வருடம்	2,000,000.00	1,510,210.00	50%
	A, B, O குழு RhD குருதி வகையின் விநியோகம் மற்றும் இலங்கையின் கொழும்பு மாவட்டத்தின் இரண்டு சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்று குணமடைந்த கோவிட் 19 நோயாளிகளிடையே SARS CoV2 குறிப்பிட்ட IgM	சுய நிதி	2020	3 வருடம்	700,500.00	700,500.00	100%

	மற்றும் IgG ஆன்டிபாடிகளின் பகுப்பாய்வும்						
	மனித உயிரணுக்களில் கிளைசிரைசா கிளாப்ரா உயிரியக்கக் கலவைகளின் டெங்கு எதிர்ப்பு வைரஸ் செயல்பாடு	சுய நிதி	2020	2 வருடம்	1,000,000.00	1,000,000.00	100%
	இலங்கையில் கடற்படை பிரிவில் அறிகுறியற்ற/குறைந்த அறிகுறியுள்ள SARS-CoV2 வைரஸ் தொற்று, சிலர்சிமுறை வைரஸ் திரிபு/திரிபுகளின் பைலோஜெனடிக் தொடர்பு, ஆன்டிபாடி மற்றும் நோய் விளைவு பற்றிய வருங்கால ஆய்வு.	சுய நிதி	2020	1 வருடம்	1,965,000.00	1,965,000.00	100%
	பெருங்குடல் புற்றுநோய்களில் சைட்டோகைன்களின் சாத்தியமான உயிரியக்கவியல்	சுய நிதி	2020	2 வருடம்	2,000,000.00	843,822.48	75%
	இலங்கையின் மேல் மாகாணத்தைச் சேர்ந்த குழந்தைகள் தெரிவில் உள்ள COVID 19 தொற்றுநோயுடன் தொடர்புடைய குழந்தைகள் மற்றும் குடும்பங்களின் உளவியல் சார் சிக்கல்கள் மற்றும் சுகாதார நோக்க நடத்தைகலீல் உள்ள மாற்றங்களும் மற்றும் பின்னடைவுகளும்	சுய நிதி	2020	1 வருடம்	36,800.00	36,800.00	100%
	நோயின் வெவ்வேறு கட்டங்களில் டெங்கு பாதிக்கப்பட்ட நோயாளிகளின் சைட்டோகைன் அளவை மதிப்பீடு செய்தல்	சுய நிதி	2020	1 வருடம்	1,998,987.60	1,417,925.00	50%
	இலங்கையின் மேற்கு மாகாணத்தில் SARS-CoV-2 தொற்றுநோய்களின் போது காய்ச்சல் போன்ற நோய்களைக் கொண்ட நபர்களின்	சுய நிதி	2020	1 வருடம்	1,024,000.00	1,024,000.00	10%

	ஆரோக்கிய நோக்க நடத்தையை தீர்மானிக்கும் காரணிகள்: ஒரு அளவறி மற்றும் பண்பறி ஆய்வு.						
	மேல் மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட மருத்துவமனைகள் மற்றும் தோட்டத் துறையில் உள்ள நோயாளிகளிடையே இரைப்பை குடல் ஒட்டுண்ணி தொற்றுகள்; மூலக்கூறு குணாதிசயம், தொற்றுநோயியல் மற்றும் தொற்றுநோய்களின் சாத்தியமான ஆய்வாதாரங்கள்	சுய நிதி	2020	3 வருடம்	1,926,066.00	1,784,417.77	30%
	UHKDU இல் சுவாச வைரஸ்கள் மற்றும் வித்தியாசமான நோய்க்கிருமிகளின் மூலக்கூறு கண்டறிதலுக்கான சுவாசக் குழுவை நிறுவுதல்	சுய நிதி	2020	1 வருடம்	1,970,000.00	479,101.84	75%
	SARS-CoV-2 உருநிலை மாற்றமும் பல்கலைக்கழக மருத்துவமனையில் மறுசீரமைப்பு கொரோனா வைரஸ் தடுப்பூசி (ChAdOx1 nCoV-19) பெறுபவர்களிடையே நிலவும் பக்க விளைவுகளும்	சுய நிதி	2020	1 வருடம்	1,936,500.00	1,656,500.00	35%
	கருவுறாமை கொண்ட தம்பதிகளின் சுமை மற்றும் வாழ்ந்த அனுபவங்கள்	சுய நிதி	2021	1 வருடம்	76,000.00	76,000.00	25%
	மொத்த Thyroidectomy ஐ தொடர்ந்து Hypocalcemiaவை முன்கூட்டியே கணிக்கும் காரணிகளை அடையாளம் காணுதல்	சுய நிதி	2021	2 வருடம்	1,837,680.00	1,577,475.00	30%
	இலங்கையில் நீண்டகால வலி சேவைகளின் டிஜிட்டல் மயமாக்கல்; வலி மதிப்பீடு, பதிவு	சுய நிதி	2021	2 வருடம்	2,000,000.00	2,000,000.00	10%

	செய்தல் மற்றும் முகமைத்துவம் ஆகியவற்றுக்கான மின்னணு வலி பயன்பாட்டின் *(EPA)* பங்கு						
	பெருங்குடல் புற்றுநோய்களில் சுற்றும் கட்டியை *(ctDNA)* கண்டறிதல். கிளினிக் நோயியல் தொடர்பு சிகிச்சை பதில் மற்றும் முன்கணிப்பு முன்னறிவிப்பு	சுய நிதி	*2022*	*2* வருடம்	*2,000,000.00*	*2,000,000.00*	*10%*
	இலங்கையின் கொழும்பு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சுகாதாரப் பகுதிகளில் *3-5* வயதுடைய குழந்தைகளின் நடமாட்டம் மற்றும் உணவுப்பழக்கம் பற்றிய ஆய்வு.	சுய நிதி	*2022*	*1* வருடம்	*197,250.00*	*197,250.00*	*10%*
	முடக்கு வாதம் உள்ள நோயாளிகளின் குழுவில் *Osteoporosis* பற்றிய ஆய்வு	சுய நிதி	*2022*	*1* வருடம்	*455,000.00*	*455,000.00*	*10%*
	Helicobacter pylori இன் மாறுபட்ட வைரசு காரணிகளைத் தீர்மானித்தல் இலங்கை மக்கள் தொகையில் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் குடல் *epithelium* இல் பல்வேறு மருத்துவ விளைவுகள் பரவல் மற்றும் *histopathological* மாற்றங்கள் ஆகியவற்றின் தொடர்	சுய நிதி	*2022*	*2* வருடம்	*1,995,000.00*	*1,995,000.00*	*10%*
	UH KDU வின் பிறப்புக்கு முன்னரான சிகிச்சைகளில் கலந்துகொள்ளும் அணைத்து தாய்மார்களினதும் சிவப்பணு பிறபொருளெதிரியின் வளர்ச்சியினை ஒப்பீடு செய்தல்	*BCAS* நிதி	*2022*	*1* வருடம்	*125,000.00*	*125,000.00*	*100%*
	சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையின் மாறுபாடு *haemolysis*	*BCAS* நிதி	*2022*	*1* வருடம்	*125,000.00*	*125,000.00*	*100%*

	இன் நிலை மற்றும் பல்வேறு வகையான சிவப்பு அணுக்களின் சவ்வூடுபரவல் பலவீனம் ஆகியவை அவற்றின் அடுக்கு வாழ்க்கையில் வெவ்வேறு காலகட்டங்களில் செறிவூட்டுகின்றன.						
	மனித மல மாதிரிகளில் *Crypto sporidium* இனங்களை கண்டறிவதற்கான *Polymerase* சங்கிலியின் எதிர்வினை முறை வளர்ச்சி	*BCAS நிதி*	*2022*	*1 வருடம்*	*125,000.00*	*125,000.00*	*100%*
	மனித மல மாதிரிகளில் *Giardia intestinalis* இனங்களை கண்டறிவதற்கான *Polymerase* சங்கிலியின் எதிர்வினை முறை வளர்ச்சி	*BCAS நிதி*	*2022*	*1 வருடம்*	*125,000.00*	*125,000.00*	*100%*
	இரண்டு உள்ளூர் மருத்துவ தாவரங்களின் சாத்தியமான பக்டீரியா எதிர்ப்பு மற்றும் *anti-bio film* செயற்பாட்டிற்கான திரையீடு	*BCAS நிதி*	*2022*	*1 வருடம்*	*125,000.00*	*125,000.00*	*100%*
	பெருங்குடல் புற்றுநோய்களில் உயிரணு சுழற்சி ஒழுங்குமுறையில் மரபணுக்களின் பிறழ்வு பகுப்பாய்வு	*BCAS நிதி*	*2022*	*1 வருடம்*	*125,000.00*	*125,000.00*	*100%*
	பெருங்குடல் புற்றுநோய்களில் சமிஞ்சை செயும் பாதைகளில் மரபணுக்களின் பிறழ்வு பகுப்பாய்வு	*BCAS நிதி*	*2022*	*1 வருடம்*	*125,000.00*	*125,000.00*	*100%*
	பெருங்குடல் புற்றுநோய்களில் *epigentic* ஒழுங்குமுறையில் மரபணுக்களின் பிறழ்வு பகுப்பாய்வு	*BCAS நிதி*	*2022*	*1 வருடம்*	*125,000.00*	*125,000.00*	*100%*
	பெருங்குடல் புற்றுநோய்களில் *Cytokine* களில் மரபணுக்களின் பிறழ்வு பகுப்பாய்வு	*BCAS நிதி*	*2022*	*1 வருடம்*	*125,000.00*	*125,000.00*	*100%*

	தேர்ந்தெடுக்கப்பட்ட முதியோர்களின் ஊட்டச்சத்து நிலை; ஒரு ஆரம்ப ஆய்வு	*BCAS* நிதி	*2022*	*1* வருடம்	*125,000.00*	*125,000.00*	*100%*
பொறியியல் பீடம்	*Antitumor* செயற்பாடு மற்றும் *fluggea leucopyrus* மற்றும் *Manihot esculenta* சாற்றின் நச்சுயியல் விளைவு	சுய நிதி	*2020*	*2* வருடம்	*1,867,000.00*	*932,418.13*	*50%*
	முக்கியமான அளவு எலும்பு குறைபாட்டுடன் *porcine* மாதிரியில் சிலிக்கன் மாற்றியமைக்கப்பட்ட *histomorphological* மற்றும் *mechanical* தன்மை	சுய நிதி	*2021*	*2* வருடம்	*1,964,050.00*	*1,900,000.00*	*30%*
	நொறுக்கப்பட்ட இறப்பர் கொங்கிரீட்டின் பல அளவீட்டு மாதிரிகள்	சுய நிதி	*2022*	*2* வருடம்	*2,000,000.00*	*2,000,000.00*	*10%*
	மருத்துவக் கல்லூரியில் பயன்படுத்தப்படும் குறைந்த நம்பகத்தன்மை உள்ள மாதிரிகளை உயர் நம்பகத்தன்மை உள்ள மாதிரிகளாக மாற்றுதல்	சுய நிதி	*2022*	*1* வருடம்	*1,500,000.00*	*1,500,000.00*	*10%*
	தேர்ந்தெடுக்கப்பட்ட நகரப்புற ஊடுருவாத பரப்புகளை கழுவும் புயல் நீரின் தரத்தை மதிப்பீடு செய்தல்	சுய நிதி	*2022*	*2* வருடம்	*1,840,250.00*	*1,840,250.00*	*10%*
	களனி வெள்ள அபாய முகமைத்துவத்துடன் மீள்தன்மையை ஒருங்கிணைத்தல்	சுய நிதி	*2022*	*2* வருடம்	*1,840,250.00*	*1,840,250.00*	*10%*
முகாமைத்துவம், சமூக விஞ்ஞான, மனிதநேய பீடம்	இலங்கையில் புற்றுநோயின் தாக்கத்தை பாதிக்கும் சமூக பொருளாதார காரணிகளின் தாக்கம் மற்றும் *meso indepth* பகுப்பாய்வு	சுய நிதி	*2020*	*3* வருடம்	*1,999,400.00*	*1,799,400.00*	*30%*
